22. எந்த பகுதியின் அரசர் வருவாய் வசூலிக்கும் பணியை வட்டிக்குப் பணம்கொடுப்போரிடம் குத்தகைக்கு விட்டிருந்தார் - சோட்டா நாக்பூர்.
23. கோல் இனத்தவர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் வட்டிக்குப் பணம் கொடுப்போருக்கு எதிரான கிளர்ச்சியை நடத்திய ஆண்டு -1831-1832.
24. இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் பரவலாக வாழ்ந்து வந்தவர்கள் - சாந்தலர்கள்.
25. ராஜ்மஹால் மலையைச் சுற்றிலும் இருந்த வனப்பகுதியை விட்டு கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டவர்கள் – சாந்தலர்கள்.

26. 1855 ஆம் ஆண்டு பல இடங்களில் சமூகக் கொள்ளை நடவடிக்கைகள் யார் தலைமையில் நடந்தது - பீர் சிங்.
27. 1855- சாந்தலர்களின் கிளர்ச்சிக்கு தலைமை ஏற்றவர்கள் - சித்து ,கணு.
28. 1855 ஜூன் 30இல் மகாஜன்கள் மற்றும் தரோகாக்களை முற்றிலுமாக கொன்றுகுவிக்கவும், நாட்டில் வசதிபடைத்த பெங்காலிகளையும் ஜமீன்தாரர்கள் மற்றும் வர்த்தகர்களை அழித்தொழிக்கவும், அவர்களை அழிக்க முயன்ற அனைவரையும் அழிக்கவும், அவர்களின் எதிரிகளின் குண்டுகள் நீராக மாறிவிடும்' என்று கடவுள் உத்தரவிட்டதாக தெரிவித்தவர்கள் - சித்து ,கணு.
29. தரோகாக்கள் என்பவர்கள் - காவல்துறை அதிகாரிகள்.
30. 1855 - இரண்டு சாந்தலர் கிளர்ச்சியைத் தலைமையேற்று நடத்த வேண்டி தங்களுக்கு கடவுளிடமிருந்து தேவசெய்தி கிடைத்ததாக அறிவித்தவர்கள் -சித்து , கணு.
31. மகாஜன்கள், ஜமீன்தாரர்கள், ஆங்கிலேய அதிகாரிகள் ஆகியோருக்கு எதிரான வெளிப்படையான கிளர்ச்சியாக உருவெடுத்தது - சாந்தலர்களின் கிளர்ச்சி.
32. சாந்தலர்கள் வசமிருந்த பகுதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவது பற்றிய சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு - 1855.
33. ராஞ்சியில் நடைபெற்ற பழங்குடியினக் கிளர்ச்சிகளில் மிக முக்கியமானதா அறியப்படுவது - உலுகுலன் கிளர்ச்சி. (பெரிய கலகம்) முண்டா கிளர்ச்சி.
34. கூட்டாக நிலத்தை வைத்துக்கொண்டு குண்ட்கட்டி முறையில் விவசாயம் செய்வதில் பெயர் பெற்றவர்கள் -முண்டா மக்கள்.
35. தம்மை கடவுளின் தூதர் என்று அறிவித்தவர் - பிர்சா முண்டா.
36. எந்த ஆண்டு கைது செய்யப்பட்ட பிர்சா முண்டா பின்னர் சிறையில் உயிர்நீத்தார் -1900 பிப்ரவரி.
37. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு பழங்குடியினர் நிலத்தில் பழங்குடியினரல்லாதோர் நுழைவது தடுக்கப்பட்ட ஆண்டு -1908.
38. மேலதிகாரக் கொள்கை, வாரிசு இழப்புக் கொள்கை இரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டன -1840,1850.
39. புதிய என்ஃபில்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டாக்கள் பற்றிய வதந்திகள் புரட்சிக்கு – வித்திட்டது.
40. வாரிசு இழப்பு கொள்கையின் கீழ் இணைக்கப்பட்ட பகுதிகள்:
    1. சதாரா
    2. சம்பல்பூர்
    3. பஞ்சாப்பின் சில பகுதிகள்
    4. ஜான்சி
    5. நாக்பூர்
41. மங்கள் பாண்டே என்ற சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கிய ஆண்டு- 1957 - மார்ச் 29.
42. மீரட்டில் இருந்து தில்லி செங்கோட்டை நோக்கி ஒரு குழுவாக சிப்பாய்கள் அணிவகுத்துச் சென்ற ஆண்டு- 1857 மே -11.
43. இந்துஸ்தானத்தின் (ஷாஹின்ஷா இ-ஹிந்துஸ்தான்) மாமன்னராக பதவியேற்றவர் - இரண்டாம் பகதூர் ஷா.
44. இரண்டாவது பாஜிராவின் தத்துப்பிள்ளை - நானா சாகிப்.
45. 1857 - ஆம் ஆண்டு கிளர்ச்சியின் முக்கிய அத்தியாயமாக இருக்கும் முற்றுகை- கான்பூர்.
46. 1857 ஆம் ஆண்டு ஆட்சியின்போது இந்துஸ்தானத்தின் மாமன்னராக பதவியேற்றவர்- இரண்டாம் பகதூர் ஷா.
47. 1857 ஆம் ஆண்டு புரட்சியின்போது தலைமை வகித்தார்கள்:

1. கான்பூர் – நானாசாகிப்.
2. லக்னோ - பேகம் ஹஸ்ரத் மஹால்.
3. பரோலி -கான் பகதூர்.
4. மத்திய இந்தியா - ஜான்சி ராணி லட்சுமி பாய்.

48. லண்டன் டைம்ஸ் பத்திரிக்கையின் செய்தியாளர் - வில்லியம் ஹோவர்ட் ரஸ்ஸல்.
49. எந்த ஆண்டின் பிற்பகுதியில் தில்லி ஆங்கிலேய துருப்புகளால் கைப்பற்றப்பட்டது- 1857.
50. சிறை பிடிக்கப்பட்ட பகதூர் ஷா எங்கு கொண்டு செல்லப்பட்டார் - பர்மா.
51. இந்திய அரசு சட்டம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு -1858 நவம்பர்.
52. இண்டிகோ கிளர்ச்சி கருநீலச்சாய தொடங்கிய ஆண்டு - 1859-1860.
53. வங்காளத்தின் எந்த மாவட்டத்தின் ஒரு கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் இனி இண்டிகோ பயிரிடப்போவதில்லை என மறுத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர் – நடியா.
54. நீல் தர்ப்பன் (இண்டிகோவின் கண்ணாடி) என்ற தலைப்பில் ஒரு நாடகத்தை எழுதியவர் - தீன பந்து மித்ரா.
55. தக்காணத்தில் வட்டிக்குப் பணம் வழங்குவோருக்கு எதிரான கலவரங்கள் பூனா அருகே உள்ள சூபா என்ற கிராமத்தில் முதன்முதலாக வெடித்ததாக பதிவாகியுள்ள ஆண்டு - 1875 - மே.
56. ஆங்கிலேய ஆட்சி விவசாயிகள் மத்தியில் முகலாயர்களின் காலத்தில் இருந்ததை விட வேதனை மற்றும் இடர்ப்பாடுகளைக் கொண்டுவந்தது என்று கூறியவர் -மானிடவியலாளர் கேத்லீன் கௌ.
57. சென்னைவாசிகள் சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு - 1852.
58. கிழக்கிந்திய அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு- 1866.
59. சென்னை மகாஜன சபை நிறுவப்பட்ட ஆண்டு - 1884.
60. பூனா சர்வஜனிக் சபை நிறுவப்பட்ட ஆண்டு - 1870.
61. பம்பாய் மாகாண சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு - 1885.
62. காலனி ஆட்சியின் பொருளாதாரம் பற்றிய இந்த விமர்சனத்தைச் செய்வதில் முக்கியப் பங்காற்றியவர்கள்:
    1. தாதாபாய் நௌரோஜி,
    2. நீதிபதி ரானடே ,
    3. ரொமேஷ் சந்திர தத்.
63. இந்திய தேசிய காங்கிரசின் முதல் அமர்வு நடைபெற்ற ஆண்டு- 1885 டிசம்பர் 28.
64. 1885- ஆண்டு நடந்த இந்திய தேசிய காங்கிரசின் முதல் தலைவர் - உமேஷ் சந்திர பானர்ஜி.
65. கர்சன் பிரபு இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக (வைஸ்ராய்) நியமிக்கப்பட்ட ஆண்டு-1899.
66. இந்திய அறிவாளர்கள் முலமாக பஞ்சம் மற்றும் பிளேக் பிரச்சனைகளைக் கையாள்வதை விடுத்து உள்ளாட்சி அமைப்பு, உயர்கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிடுவது மற்றும் பத்திரிகைச் சுதந்திரத்தைத் தடுப்பது ஆகிய அடக்கி ஆளும் நடவடிக்கைகளை கையாண்டவர் - கர்சன் பிரபு.
67. முகலாயர்களின் ஆட்சிக்காலங்களில் கூட அனுபவிக்காத ஒற்றுமையை முஸ்லிம்கள் கிழக்கு வங்காளம் என்ற புதிய மாகாணத்தில் அனுபவிப்பார்கள் என்று உறுதியளித்தவர்- கர்சன் பிரபு.
68. இந்துக்கள், முஸ்லிம்கள் இடையே பிளவை உருவாக்கி வங்காளத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த அரசியல் நடவடிக்கைகளை அடக்க வகுக்கப்பட்டது -வங்கப்பிரிவினை.
69. வங்கப் பிரிவினை அறிவிக்கப்பட்ட ஆண்டு - 1905 ஜூலை 19.
70. வங்காளம் அதிகாரபூர்வமாகப் பிரிவினையானபோது அந்தநாள் துக்கநாளாக அறிவிக்கப்பட்ட ஆண்டு - 1905 அக்டோபர் 16.

71. சுதேசி காலத்தில் எப்போதும் லால்-பால்-பால் **(Lal-Bal-Pal)** மூவர் என்று குறிக்கப்பட்டவர்கள்:
    1. பஞ்சாபின் - லாலா லஜ்பதி ராய்.
    2. மகாராஷ்டிராவின் - பால கங்காதர திலகர்.
    3. வங்காளத்தின் - பிபின் சந்திர பால்.
72. தென்னிந்தியாவில் சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கியவர் - வ. உ. சிதம்பரனார்.
73. சுயராஜ்ஜியம் என்பது, முழுமையான தன்னாட்சி மற்றும் அந்நிய ஆட்சியில் இருந்து முழுமையான விடுதலை பெறுவது- திலகர்.
74. திலகர் முதலாவது தன்னாட்சி இயக்கத்தை நிறுவிய ஆண்டு – 1916 ஏப்ரல் .
75. அன்னிபெசன்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பிக்க முடிவு செய்த ஆம் ஆண்டு - 1916 செப்டம்பர்.
76. தன்னாட்சி மூலம் இந்த நாடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளைக் கொண்ட அரசை கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன் என்று கூறியவர் யார்-அன்னிபெசன்ட்.
77. கருவூலத்தை செலவு செய்யும் அதிகாரம் கொண்ட தேர்தெடுக்கப்பட்ட சபையும், அந்தச் சபைக்கு கட்டுப்படும் அரசும் அமையும் பிரிட்டிஷ் அரசுக்கு உள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்காமல் அல்லது போரின்போது இந்தியா செய்த சேவைகளுக்கு விருதாகவோ இல்லாமல் தேசிய தன்னுறுதி அடிப்படையில் தன்னாட்சியை இந்தியா கோரவேண்டும் கூறியவர்- அன்னிபெசன்ட்.
78. ∴பிரோஸ் ஷா மேத்தா, கோகலே ஆகிய இருவரின் மறைவு -1915.
79. எந்த ஆண்டு நடந்த காங்கிரஸ் அமர்வில் தீவிர தேசியவாத குழுவினரையும் கட்சியில் சேர்க்க அனுமதி வழங்கப்பட்டது- (1916) லக்னோ.
80. இந்தியாவின் தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் தனது பெரும்பான்மையான கொள்கைகளை எந்த தன்னாட்சி இயக்கத்தில் இருந்து பெற்றது- அயர்லாந்து.
81. லக்னோ ஒப்பந்தம் நடைபெற்ற ஆண்டு- 1916.
82. எந்த ஒப்பந்தத்தின் போது காங்கிரஸ் கட்சியும் முஸ்லிம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டது - லக்னோ.
83. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் எந்த ஆண்டு - 1919.
84. தன்னிச்சையான கைது மற்றும் கடும் தண்டனைகளுடன் கூடிய சட்டத்தை அரசு ரௌலட் - இயற்றியது.

# 10TH- STD - தேசியம்: காந்திய காலகட்டம் -

**PAGE NO: 37 10TH- STD TOTAL QUESTION -138**

1. மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவிலிருந்தது இந்தியா திரும்பிய ஆண்டு-1915.
2. காந்தி பிறந்த ஆண்டு - 1869 அக்டோபர் 2 - குஜராத் போர்பந்தர்.
3. காந்தி தந்தை - காபா காந்தி.
4. காந்தி தாயார்- புத்லிபாய்.
5. போர்பந்தரின் திவானாகவும் பின்னர் ராஜ்கோட்டின் திவானாகவும் பொறுப்பு வகித்தவர் - காபா காந்தி. (காந்தி தந்தை).
6. காந்தி சட்டம் பயில்வதற்காக இங்கிலாந்துக்குக் கடல் பயணம் மேற்கொண்ட ஆண்டு – 1888.
7. காந்தி வழக்கறிஞர் பட்டம்பெற்ற பின்பு இந்தியாவுக்குத் திரும்பிய ஆண்டு -1891,-ஜூன்.
8. காந்தி டர்பனில் இருந்து பிரிட்டோரியாவுக்கு ரயில்பயணம் மேற்கொண்டபோது எந்த ரயில் நிலையத்தில் முதல்வகுப்புப் பெட்டியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார் – பீட்டர் மாரிட்ஸ்பர்க்.
9. டிரான்ஸ்வாலில் உள்ள இந்தியர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்கள் தங்களுடைய குறைகளை உறுதியுடன் வெளிப்படுத்தி களைவதற்காக ஒரு அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தியவர்- காந்தியடிகள்
10. டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலை வரியாக எத்தனை பவுண்டுகளை செலுத்த வேண்டியிருந்தது - 3 பவுண்டுகள்.
11. காந்தியடிகளுக்கு யாருடைய எழுத்துக்களுடன் அறிமுகம் கிடைத்தது -டால்ஸ்டாய், ஜான் ரஸ்கின்.
12. கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது The Kingdom of Within You நூலின் ஆசிரியர் - டால்ஸ்டாய்.
13. அண்டு திஸ் லாஸ்ட் Undo this Last நூலின் ஆசிரியர் - ஜான் ரஸ்கின்.
14. சட்டமறுப்பு Cvil Disobedience நூலின் ஆசிரியர் - தாரோ.
15. காந்தி ஃபீனிக்ஸ் குடியிருப்பு நிறுவிய ஆண்டு -1905.
16. காந்தி டால்ஸ்டாய் பண்ணை நிறுவிய ஆண்டு - 1910.
17. ஒப்பந்த தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரி எந்த ஒப்பந்தத்தின்படி ரத்து செய்யப்பட்டது - ஸ்மட்ஸ்-காந்தி.
18. காந்தி அரசியல் குரு - கோபால கிருஷ்ண கோகலே.
19. தீன் காதியா முறை பின்பற்றப்பட்ட இடம் - பிகாரில் உள்ள - சம்பரான்.
20. இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தின் எத்தனை பங்கு பகுதியில் அவுரி (இண்டிகோ) பயிரிட வேண்டும் என்று ஐரோப்பியப் பண்ணையாளர்கள் கட்டாயப்படுத்தினர் – 3/20 பங்கு
21. சம்பரானுக்கு வருகை புரியுமாறு காந்தியடிகளைக் கேட்டுக்கொண்ட விவசாயி - ராஜ்குமார் சுக்லா.
22. நாடு முதன்முதலாக ஒத்துழையாமை இயக்கச் செயல்முறைப் பாடத்தைக் கற்றுக்கொண்டதாக தெரிவித்தவர் – காந்தியடிகள்.
23. அகமதாபாத் மில் வேலைநிறுத்தம் நடந்த ஆண்டு - 1918.
24. கேதா சத்தியாகிரகம் நடந்த ஆண்டு – 1918.
25. பிடிஉத்தரவு இல்லாமல் கைது நடவடிக்கை, விசாரணை இல்லாமல் சிறையிலடைப்பது என காவல் துறையினருக்கு அதிகாரங்களை வழங்கிய சட்டம் - ரௌலட் சட்டம்.
26. ரௌலட் சட்டத்தை கருப்புச் சட்டம் என்று அழைத்தவர் – காந்தி.
27. காந்தி ரௌலட் சட்டத்தை எதிர்த்து நாடு தழுவிய சத்தியாகிரகப் போராட்டத்துக் அழைப்பு விடுத்த ஆண்டு - 1919 - ஏப்ரல் 6.
28. டாக்டர். சைஃபுதீன் கிச்லு, டாக்டர். சத்யபால் இரண்டு முக்கிய உள்ளூர் தலைவர்கள் போராட்டத்திற்கு தலைமையேற்றதால் கைது செய்யப்பட்ட நாள்-1919 - ஏப்ரல் -9 .

29. பீரங்கி வண்டி,ஆயுதமேந்திய வீரர்களுடன் சுற்றி வளைத்தவர் - ஜெனரல் ரெஜினால்டு டயர் . எந்தவித முன்னெச்சரிக்கையுமின்றி சுடத்தொடங்கினார்கள்.
30. துப்பாக்கிச்சூட்டில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர்- 379.
31. அதிகாரபூர்வமற்ற தகவல்கள் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கையை - 1000 அதிகம் என்று தெரிவித்தது
32. படைத்துறைச்சட்டம் அறிவிக்கப்பட்டு அமிர்த்சாஸ், பஞ்சாப் மக்கள் சவுக்கடி கொடுத்கப்பட்டு தெருக்களில் தவழவிடப்பட்டார்கள்.
33. ஜாலியன் வாலாபாக் படுகொலை வீரத்திருமகன் (knighthood) என்ற அரசுப் பட்டத்தை திருப்பிக் கொடுத்தவர் - இரபீந்திரநாத் தாகூர்.
34. ஜாலியன் வாலாபாக் படுகொலை காந்தி திருப்பிக்கொடுத்த பதக்கம் - கெய்சர்-இ-ஹிந்த்.
35. யாருடைய தலைமையில் கிலாபத் இயக்கம நடந்தது - மௌலானா முகமது அலி மௌலானா சௌகத் அலி .
36. அலி சகோதரர்கள் - மௌலானா முகமது அலி, மௌலானா சௌகத் அலி .
37. 1919 -நவம்பர் மாதம் தில்லியில் நடைபெற்ற அகில இந்திய கிலாபத் இயக்க மாநாட்டிற்கு தலைமை தாங்கியவர் – காந்தி.
38. அல்லாஹு அக்பர், வந்தே மாதரம், இந்து-முஸ்லிம் வாழ்க ஆகிய மூன்று தேசிய முழக்கங்களை முன்மொழிந்தவர் -சௌகத் அலி.
39. எந்த ஆண்டு அலகாபாத்தில் கூடிய கிலாபத் குழுவின் கூட்டம் காந்தியடிகளின் அகிம்சை மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்றுக்கொண்டது- 1920 ஜூன் 9.
40. ஒத்துழையாமை இயக்கம் எப்போது தொடங்கியது - 1920 ஆகஸ்டு முதல் நாள்.
41. கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கிய ஆண்டு - 1920 செப்டம்பர்.
42. 1920 டிசம்பர் நாக்பூரில் நடந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானம் யாருடைய தலைமையில் நிறைவேற்றப்பட்டது- சேலம் C. விஜயராகவாச்சாரியார்.
43. பர்தோலியில் வரிகொடா இயக்க பிரச்சாரத்தை காந்தி அறிவித்த ஆண்டு- 1922 -பிப்ரவரி.
44. எந்த நிகழ்வைத் தொடர்ந்து காந்தியடிகள் உடனடியாக வரிகொடா இயக்கத்தைத் திரும்பப் பெற்றார் - சௌரி சௌளரா. (உத்திரப்பிரதேசம் கோராக்பூர்).
45. சௌரி சௌரா சம்பவம் நடைபெற்ற ஆண்டு - 1922 பிப்ரவரி 5.
46. அகிம்சை,ஒத்துழையாமை காரணங்களால் இயக்கம் தோல்வி காணவில்லை மாறாக போதுமான எண்ணிக்கையில் அவற்றில் பயிற்சி பெற்ற தலைவர்களும் தொண்டர்களும் இல்லாமல் போனதே காரணம் என்று நம்பியவர்– காந்தி.
47. 1923 ஜனவரி முதல் நாள் சுயராஜ்ஜியக் கட்சியை தொடங்கியவர்கள் - மோதிலால் நேரு, சி.ஆர். தாஸ்.
48. சட்டப்பேரவைகளில் இருந்து சுயராஜ்ஜிய கட்சி விலகிக் கொண்ட ஆண்டு - 1926.
49. இரட்டை ஆட்சி அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு -1919.
50. மாகாண அரசின் அதிகாரங்கள் - ஒதுக்கப்பட்ட துறைகள், மாற்றப்பட்ட துறைகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டது .
51. மாகாண சுயாட்சி அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு - 1935.
52. சௌரி சௌரா நிகழ்வுக்குப் பிறகு ஆர்வலர்களும் மக்களும் அகிம்சை போராட்டம் குறித்த பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று உணர்ந்தவர்- காந்தி.
53. உங்கள் மாவட்டங்களுக்குச் செல்லுங்கள், கதர், இந்து-முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியன பற்றிய செய்திகளைப் பரப்புங்கள். இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களை சுயராஜ்யத்தின் உண்மையான வீரர்களாக உருமாற்றுங்கள் என்று கூறியவர் – காந்தி.
54. இந்திய அரசியல் சாசன சீர்திருத்தங்களுக்கான இந்திய சட்டபூர்வ ஆணையத்தை நியமிப்பதாக ஆங்கிலேய அரசு அறிவித்த நாள் - 1927 நவம்பர் 8.
55. சர் ஜான் சைமன் தலைமையிலான சைமன் குழுவில் இடம்பெற்ற உறுப்பினர்கள்- 7.

56. சைமனே திரும்பிப் போ ஆர்ப்பாட்டத்தில் மிக மோசமாக காயமடைந்து உயிரிழந்தவர்- லாலா லஜ்பதி ராய்.
57. இந்தியாவுக்கு அரசியல் சாசனம் உருவாக்க அனைத்துக் கட்சி மாநாடு நடைபெற்ற ஆண்டு- 1928.
58. 1924 வகுப்புவாத அரசியலில் ஈடுபட்ட இந்துக்கள் ,முஸ்லிம்களின் இதயங்களை ஈர்க்கும் வகையில் காந்தி எத்தனை நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்-21 நாள்.
59. அரசியல் சாசன வரைவுக்காக திட்டம் வகுக்க யாருடைய தலைமையிலான கமிட்டி அமைக்கப்பட்டது - மோதிலால் நேரு .
60. அந்தக் கமிட்டியின் அறிக்கை - நேரு அறிக்கை என்று அழைக்கப்பட்டது.
61. மத்திய சட்டப்பேரவையில் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து சட்டதிருத்தத்தை கொண்டு வந்தார்- முகமது அலி ஜின்னா.
62. மூன்றில் ஒரு பங்கு இடங்கள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கூறியவர்- முகமது அலி ஜின்னா.
63. 14 அம்சங்கள் தீர்மானத்தை மொழிந்தவர்- முகமது அலி ஜின்னா.
64. இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் தூதர் - முகமது அலி ஜின்னா.
65. 1929 டிசம்பர் லாகூரில் யாருடைய தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது - ஜவகர்லால் நேரு.
66. விடுதலை நாளாக அறிவிக்கப்பட்ட நாள் - 1930 ஜனவரி 26.
67. 78 பேர்களுடன் காந்தி சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ்பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கிய ஆண்டு - 1930 மார்ச் 12.
68. காந்தி தனது 61 ஆவது வயதில் 24 நாட்களில் 241 மைல் தொலைவு யாத்திரையாக நடந்து சென்று தண்டி கடற்கரையை அடைந்தார் - 1930 ஏப்ரல் 5.
69. தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை யாத்திரையை மேற்கொண்டவர் - சி. ராஜாஜி.
70. வடமேற்கு எல்லை மாகாணத்தில் சத்தியாகிரக இயக்கத்திற்குத் தலைமை ஏற்றவர் - கான் அப்துல் க஫்பார்கான்.
71. செஞ்சட்டைகள் என்றழைக்கப்பட்ட குடை கிட்மட்கர் இயக்கத்தை நடத்தியவர் - கான் அப்துல் க஫்பார்கான்
72. ஆங்கிலேயர்கள் முதலாவது வனச்சட்டத்தை நிறைவேற்றிய ஆண்டு- 1865.
73. எந்த ஆண்டின் இந்திய வனங்கள் சட்டத்தின் படி வனங்களின் உரிமை அரசிடம் இருந்தது - 1878.
74. பழங்குடியினர் பயன்படுத்தியதை தடை செய்யப்பட்டது - சுழற்சி முறை விவசாயம்.
75. பழங்குடியினர் நடத்திய தொடர் ஆர்ப்பாட்டங்களுக்கு மிக முக்கிய ஆதாரமாக ராம்பாவில் யாருடைய தலைமையிலான ஆர்ப்பாட்டத்தைக் குறிப்பிடலாம் - அல்லூரி சீதாராம ராஜு
76. லண்டனில் முதலாவது வட்ட மேசை மாநாடு நடந்தத ஆண்டு நடந்தத -1930 நவம்பர்.
77. மாகாண சுயாட்சியுடன் கூடிய மத்திய அரசு பற்றிய யோசனையை அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் - ராம்சே மெக்டொனால்டு.
78. காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்ட ஆண்டு - 1931 - மார்ச் 5.
79. இரண்டாவது வட்டமேசை மாநாடு நடைபெற்ற ஆண்டு - 1931 செப்டம்பர் 7.
80. படைத்துறைச் சட்டம் அமல்படுத்தப்பட்டு காந்தியடிகள் கைது செய்யப்பட்ட நாள்-1932 ஜனவரி 4.
81. மூன்றாவது வட்டமேசை மாநாடு -1932 நவம்பர் 17 முதல் டிசம்பர் 24 வரை.
82. ராம்சே மெக்டொனால்டு வகுப்புவாரி ஒதுக்கீட்டை அறிவித்த ஆண்டு- 1932 ஆகஸ்டு -16.
83. ஒடுக்கப்பட்ட வகுப்பினரை சிறுபான்மையினர் பட்டியலில் சேர்ப்பதை எதிர்த்தவர் – காந்தி.
84. காந்தி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதிகள் ஒதுக்கீட்டிற்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் போராட்டத்தை தொடங்கிய ஆண்டு-1932 செப்டம்பர் 20.
85. தீவிரப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே ஒப்பந்தம் - பூனா ஒப்பந்தம்.
86. பூனா ஒப்பந்தபடி ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான இடங்கள் எத்தனை அதிகரிக்கப்பட்டது - 71 லிருந்து 148.
87. பூனா ஒப்பந்தபடி மத்திய சட்டப் பேரவையில் ஒதுக்கப்பட்ட இடங்கள் - 18 % .

88. அரிஜனர்களுக்கான பயணம் என்ற நாடுதழுவிய பயணத்தை மேற்கொண்டவர் – காந்தி.
89. அரிஜனர் சேவை சங்கத்தை அமைத்து சமூகத்தில் உள்ள பாரபட்சங்களை முழுமையாக அகற்றுவதற்குப் பணியாற்றத் தொடங்கிவர் – காந்தி.
90. கோவில் நுழைவு நாள் அனுசரிக்கப்பட்டது - 1933-ஜனவரி 8 .
91. 1920 அக்டோபர் இந்திய பொதுவுடைமை கட்சி (கம்யூனிஸ்டு-CP1) எங்கு தொடங்கப்பட்டது- உஸ்பெகிஸ்தான் - தாஷ்கண்டில்.
92. பொதுவுடைமை (கம்யூனிஸ்டு) கட்சியின் நிறுவன உறுப்பினர்கள் - M.N. ராய், அபானி முகர்ஜி, M.P.T. ஆச்சார்.
93. 1924- கான்பூர் சதித்திட்ட வழக்கில் விசாரிக்கப்பட்டவர்கள் - M.N. ராய், S.A. டாங்கே, முசா ்பர் அஹமது, M சிங்காரவேலர்.
94. கான்பூரில் அகில இந்திய பொதுவுடைமை மாநாடு நடந்தத ஆண்டு- 1925.
95. அகில இந்திய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கட்சி நிறுவப்பட்ட ஆண்டு – 1928.
96. இந்துஸ்தான் குடியரசு ராணுவம் (HRA) கான்பூரில் உருவாக்கப்பட்ட ஆண்டு-1924.
97. ராம்பிரசாத் பிஸ்மில், அஷ ்பாகுல்லா கான் மற்றும் பலர் லக்னோ அருகே காகோரி என்ற கிராமத்தில் அரசுப்பணத்தை கொண்டுச்சென்ற ஒரு ரயில்வண்டியை நிறுத்திக் கொள்ளையடித்த ஆண்டு - 1925.
98. பஞ்சாபில் இந்துஸ்தான் குடியரசு ராணுவத்தை மீண்டும் அமைத்தவர்கள் - பகத்சிங், சுக்தேவ், அவர்களது தோழர்கள்.
99. இந்துஸ்தான் குடியரசு ராணுவம் ,இந்துஸ்தான் சமதர்மவாத குடியரசு அமைப்பு என்று பெயர் மாற்றம் செய்த ஆண்டு - 1928.
100. லாலா லஜ்பதி ராயின் உயிரிழப்புக்குக் காரணமான தடியடியை நடத்திய ஆங்கிலேய காவல்துறை அதிகாரி - சாண்டர்ஸ் படுகொலை செய்யப்பட்டார்.
101. 1929 மத்திய சட்டப் பேரவையில் புகைக்குண்டு ஒன்றை வீசியவர்கள் – பகத்சிங், B.K. தத்து .
102. 1930 ஏப்ரலில் சிட்டகாங் ஆயுதக்கிடங்கு மீதான தாக்குதல் - சூர்யா சென் ,அவரது நண்பர்களால் மேற்கொள்ளப்பட்டது.
103. எந்த ஆண்டு கைது செய்யப்பட்ட தசூர்யா சென் ஓராண்டுக்குப் பிறகு தூக்கிலிடப்பட்டார் -1933.
104. பொதுவுடைமை கட்சி தடைசெய்யப்பட்ட ஆண்டு- 1934.
105. ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்ய நரேந்திரதேவ், மினுமசானி ஆகியோரின் முன்முயற்சியால் காங்கிரஸ் சமதர்ம (சோஷலிஷ) கட்சி உருவான ஆண்டு - 1934.
106. ஒருசிலர் அதிகாரத்துக்கு வருவதால் உண்மையான சுயராஜ்ஜியம் கிடைத்துவிடாது, ஆனால் தாங்கள் பெற்ற அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தப்படும் போது நிர்வாகத்தினரை எதிர்க்கும் திறனை அனைவரும் பெறச்செய்வதே சுயராஜ்ஜியமாகும் கூறியவர் – காந்தியடிகள்.
107. இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் பர்மா இந்தியாவில் இருந்து பிரிக்கப்பட்ட ஆண்டு -1935.
108. 1937 - ஆம் ஆண்டு தேர்தலில் 11 மாகாணங்களில் போட்டியிட்டு எத்தனை மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது - 7 மாகாணம்.
109. காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகிய நாளை மீட்பு நாள் என்று அறிவித்தவர்- ஜின்னா.
110. சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் தலைவரான ஆண்டு -1939.
111. பார்வர்டு பிளாக் கட்சியைத் தொடங்கியவர் - சுபாஷ் சந்திர போஸ்.
112. பொதுவுடைமை கட்சி மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்ட ஆண்டு- 1942.
113. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்- ரஹ்மத் அலி .
114. 1933 பஞ்சாப், காஷ்மீர், வடமேற்கு எல்லை மாகாணம், சிந்து மற்றும் பலுச்சிஸ்தான் ஆகிய மாகாணங்களை இணைத்து பாகிஸ்தானை உருவாக்கும் எண்ணத்தை வெளிப்படுத்தியவர் - ரஹ்மத் அலி .
115. 1940 அக்டோபர் 17 சத்தியாகிரகப் போராட்டத்தை முதன் முதலாக ஆரம்பித்தவர்-வினோ பாபா.
116. 1942 மார்ச் 22 அமைச்சரவை யாருடைய தலைமையில் ஒரு தூதுக்குழுவை பிரிட்டிஷ் அரசு அனுப்பியது - சர் ஸ்ட்ராபோர்ட் கிரிப்ஸ்.

117. திவாலாகும் வங்கியில் பின் தேதியிட்ட காசோலை என்று கிரிப்ஸ் தூதுக்குழு திட்டங்களை அழைத்தவர் – காந்தி.
118. செய் அல்லது செத்து மடி என்ற முழக்கத்தை வெளியிட்டவர் – காந்தி.
119. பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வெள்ளையனே வெளியேறு தீர்மானத்திற்கு வித்திட்ட ஆண்டு - 1942 ஆகஸ்டு 8.
120. நாம் நமது முயற்சியின் விளைவாக இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவோம், அல்லது நாம் நமது அடிமைத்தனத்தைக் காண உயிருடன் இருக்கமாட்டோம், என்று கூறியவர்: காந்தியடிகள்.
121. இந்தியப் போர்க்கைதிகளை கொண்டு மலாயா மற்றும் பர்மாவில் இருந்த ஜப்பானியர்களின் ஆதரவோடு இந்திய தேசிய ராணுவத்தை (ஆசாத் ஹிந்த் ஃபாஜ்) உருவாக்கியவர் - ஜெனரல் மோகன் சிங்.
122. இந்திய தேசிய ராணுவம் கேப்டன் லட்சுமி செகல் என்பவரால் நடத்தப்பட்டது .
123. இந்திய தேசிய ராணுவத்தை மூன்று படையணிகளாக மறுசீரமைத்தவர் - சுபாஷ் சந்திர போஸ்.
    1. காந்தி பிரிகேட்.
    2. நேரு பிரிகேட் .
    3. பெண்கள் பிரிவாக ராணி லக்ஷ்மி பாய் பிரிகேட்.
124. சுபாஷ் சந்திரபோஸ் எங்கு சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நிறுவினார் - சிங்கப்பூர்.
125. தில்லிக்கு புறப்படு (தில்லி சலோ) என்ற முழக்கத்தை வெளியிட்டவர் - சுபாஷ் சந்திரபோஸ்.
126. பம்பாயில் ராயல் இந்திய கடற்படை மாலுமிகள் கிளர்ச்சி செய்த ஆண்டு - 1946 பிப்ரவரி.
127. வேவல் திட்டம் அறிவிக்கப்பட்ட ஆண்டு -1945 - ஜூன்-14.
128. அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களும் முஸ்லிம் லீக்கில் இருந்துதான் இடம்பெற வேண்டும், அவர்கள் அனைத்து முக்கிய விஷயங்களிலும் வீட்டோ அதிகாரங்களையும் பெறவேண்டும் என்று கோரியவர் - ஜின்னா.
129. பிரிட்டனில் தொழிற்கட்சி வெற்றி பெற்று பிரதமராக பொறுப்பேற்றவர் - கிளெமன்ட் அட்லி.
130. இந்தியாவுக்கு வந்த தூதுக்குழு அமைச்சர்கள் - பெதிக் லாரன்ஸ் , ஸ்டாஃபோர்ட், கிரிப்ஸ், A.V. அலெக்ஸாண்டர்.
131. 1946 ஆகஸ்டு 16 நாளை நேரடி நடவடிக்கை நாளாக அறிவித்தவர் -ஜின்னா
132. ஜவகர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்ட ஆண்டு - 1946 செப்டம்பர்.
133. முஸ்லிம் லீக் இடைக்கால அரசில் இணைந்தத ஆண்டு - 1946 - அக்டோபர் .
134. இடைக்கால அரசில் நிதி உறுப்பினராக ஆக்கப்பட்டவர் - லியாகத் அலிகான்.
135. 1948 - ஜூன் மாதவாக்கில் அதிகாரமாற்றம் ஏற்படும் என்று 1947ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் என்பவர் அறிவித்தவர் - கிளெமன்ட் அட்லி.
136. மவுண்ட்பேட்டன் திட்டம் அறிவிக்கப்பட்ட ஆண்டு - 1947 ஜூன் - 3.
137. மவுண்ட்பேட்டன் திட்டத்தின் படி யாருடைய தலைமையில் எல்லைகளை நிர்ணயிக்கும் ஆணையம் அமைக்கப்பட்டது- ராட்கிளிஃப் பிரவ்ன்.
138. பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விடுதலைச் சட்டத்தை இயற்றியதையடுத்து மவுண்பேட்டன் திட்டத்துக்கு செயல்வடிவம் தரப்பட்டது - 1947 ஜூலை18.

# 10TH- STD - தமிழ் நாட்டின் விடுதலை போராட்டம் -

**PAGE NO: 61** **10TH STD** **TOTAL QUESTION -130**

1. சென்னைவாசிகள் சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டு – **1852.**
2. சென்னைவாசிகள் சங்கம் யாரால் தொடங்கப்பட்டது - **கஜுலு லட்சுமிநரசு , சீனிவாசனார்.**
3. சென்னைவாசிகள் சங்கம் மேற்கொண்ட முயற்சிகளால் நிறுவப்பட்ட ஆணையம் - **சித்திரவதை ஆணையம் .**
4. சித்திரவதை முறைகள் மூலம் கட்டாய வரிவசூல் முறையை நியாயப்படுத்திய - **சித்திரவதைச் சட்டம்** ஒழிக்கப்பட்டது.
5. **1862** - க்குப் பின்னர் சித்திரவதை ஆணையம் செயலிழந்து இல்லாமலானது.
6. **1877** சென்னை உயர் நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் - **T-** முத்து சாமி.
7. **1878** ல் சுப்பிரமணியம், **M.** வீரராகவாச்சாரி மற்றும் இவர்களின் நண்பர்கள் நால்வர் ஆகியோர் இணைந்து தொடங்கிய பத்திரிகை - **தி இந்து.**
8. **1891**-ல் சுதேசமித்திரன் என்ற ஒரு தேசியப் பருவ இதழை தொடங்கியவர் - **சுப்பிரமணியம்.**
9. தென்னிந்தியாவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் தொடங்கப்பெற்ற தொடக்ககால அமைப்பு - **சென்னை மகாஜன சபை.**
10. சென்னை மகாஜன சபை தொடங்கப்பட்ட ஆண்டு - **1884 மே 16.**
11. **சென்னை மகாஜன சபையின்முக்கிய கோரிக்கைகள்:**
    - குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் **இங்கிலாந்திலும் இந்தியாவிலும்** ஒரே சமயத்தில் நடத்தப்பட வேண்டும்.
    - லண்டனில் உள்ள **இந்திய கவுன்சிலை** மூடுவது.
    - **வரிகளைக்** குறைப்பது.
    - **இராணுவ குடியியல்** நிர்வாக சலவுகளை குறைப்பது.
12. சென்னை மகாஜன சபையை நிறுவிய தலைவர்கள்- **M** வீரராகவாச்சாரி, **P.** அனந்தாச்சார்லு, **P.** ரங்கையா.
13. சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் - **P.** ரங்கையா.
14. சென்னை மகாஜன சபையின் முதல் செயலாளர் - **P**அனந்தாச்சார்லு.
15. ஆங்கிலேயர்கள் தங்களை தாராளமானவர்கள் என உரிமை கொண்டாடியதில் உள்ள தவறுகளை அம்பலப்படுத்தியது - **மிதவாதிகளின் முக்கியப் பங்களிப்பு.**
16. **சென்னையைச் சேர்ந்த புகழ்பெற்ற தமிழ்நாட்டு மிதவாதத் தலைவர்கள்:**
    1. **V.S.** சீனிவாச சஸ்திரி,
    2. **P.S.** சிவசாமி,
    3. **V.** கிருஷ்ணசாமி
    4. **T.R.** வெங்கட்ராமனார்,
    5. **G.A.** நடேசன்,
    6. **T.M.** மாதவராவ்
    7. **S.** சுப்பிரமணியனார்.
17. இந்திய தேசியக் காங்கிரசின் முதல் கூட்டம் நடைபெற்ற ஆண்டு- **1885** பம்பாய்.
18. இந்திய தேசிய காங்கிரசின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் - **72.**
19. இந்திய தேசிய காங்கிரசின் முதல் கூட்ட பிரதிநிதிகளில் சென்னையை சேர்ந்தவர்கள் எத்தனை பேர்- **22.**
20. தனது எழுத்துக்களின் மூலமாக தேசியத்தை முன்னெடுத்தவர்- **G** சுப்பிரமணியம் .
21. இந்தியா பொருளாதாரரீதியாக ஆங்கிலேயர்களால் சுரண்டப்படுவதைப் புரிந்துகொள்ள யார் செய்த பங்களிப்பு நௌரோஜி, கோகலே ஆகியோருக்கு இணையானவர்- **G** சுப்பிரமணியம்.
22. இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாடு நடைபெற்றது ஆண்டு -**1886** கல்கத்தா.

23. இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாடு யாருடைய தலைமையில் நடைபெற்றது - தாதாபாய் நௌரோஜி.
24. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு நடைபெற்றது ஆண்டு -1887 சென்னை- ஆயிரம் விளக்கு என்று அழைக்கப்படுகிற மக்கிஸ் தோட்டம்.
25. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு யாருடைய தலைமையில் நடைபெற்றது - பத்ருதீன் தியாப்ஜி.
26. மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்ட அகில இந்திய பிரதிநிதிகள் - 607.
27. மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்ட சென்னை மாகாண பிரதிநிதிகள்-362.
28. சென்னை மாகாணம் உள்ளடக்கிய பகுதிகள்:
    1. ஆந்திரப் பிரதேசம் - (கடற்கரை மாவட்டங்கள் மற்றும் ராயலசீமா).
    2. கர்நாடகா - (பெங்களூரு, பெல்லாரி, தெற்கு கனரா).
    3. கேரளா - (மலபார்).
    4. ஓடிசா - (கஞ்சம்).
29. சுதேசி கருத்துகளை பரப்புரை செய்த முக்கிய இரண்டு இதழ்கள் - சுதேசமித்திரன், இந்தியா.
30. சுதேசி நீராவி கப்பல் நிறுவனம். வ. உ. சிதம்பரனாரால் எங்கு தொடங்கப்பட்டது- தூத்துக்குடி.
31. வ. உ.சிதம்பரனார் வாங்கிய 2 கப்பல்கள் - காலியா , லாவோ.
32. திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் சுப்பிரமணிய சிவாவின் தோளோடுதோள் நின்றவர்- வ உ.சிதம்பரனார்.
33. 1908 ல் ஐரோப்பியருக்குச் சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குத் தலைமையேற்றவர் - வ. உ.சிதம்பரனார்.
34. பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்டதைக் கொண்டாடு வதற்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்ததற்காக கைது செய்யப்பட்டவர்கள் - வ.உ.சி, சுப்பிரமணிய சிவா.
35. சிறைத் தண்டனையைத் தவிர்ப்பதற்காக சுப்பிரமணிய பாரதி பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த எங்கு இடம் பெயர்ந்தார் - பாண்டிச்சேரி.
36. தமிழ்நாட்டை சேர்ந்த புரட்சிகர தேசியவாதிகள் பலருக்கு புரட்சிகர நடவடிக்கைகள் குறித்த அறிமுகமும் பயிற்சியும் எங்கு வழங்கப்பட்டது :
    1. இந்தியா ஹவுஸ் - லண்டன்.
    2. பாரிஸ்.
    3. M.PT. ஆச்சாரியா, V.V. சுப்ரமணியனார், T.S.S. ராஜன்.
37. புரட்சிகர தேசியவாதிகளுக்கு பாதுகாப்பான புகலிடம் - பாண்டிச்சேரி.
38. புரட்சிகர தேசியவாதிகளில் முக்கியமானவர்கள்- M.P.T. ஆச்சாரியா, V.V. சுப்ரமணியனார் ,T.S.S. ராஜன்.
39. பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்த புரட்சிவாதச் செய்தித்தாள்கள் - இந்தியா, விஜயா, சூர்யோதயம்.
40. 1910 -ல் யாருடைய வருகைக்குப் பின்னர் புரட்சிகர நடவடிக்கைகள் தீவிரமடைந்தன -அரவிந்த கோஷ், V.V. சுப்ரமணியனார்.
41. 1904 - ல் பாரத மாதா சங்கம் எனும் ரகசிய அமைப்பை உருவாக்கியவர் - நீலகண்ட பிரம்மச்சரியார் ,வேறு சிலரும்.
42. செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சிநாதன் எந்த அமைப்பால் உள்ளுணர்வு தூண்டப்பட்டார் - பாரத மாதா சங்கம்.
43. 1911 ஜூன் 17 ல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E. ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் சந்திப்பில் சுட்டுக் கொன்றவர்- வாஞ்சிநாதன்.
44. அன்னிபெசன்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கிய ஆண்டு - 1916.

45. அன்னிபெசன்ட் அம்மையார் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன்னெடுத்துச்சென்றதில் துணை நின்றவர்கள் - G.S. அருண்டேல், B.P வாடியா மற்றும் C.P. ராமசாமி.
46. நியூ இந்தியா, காமன் வீல் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கியவர்- அன்னிபெசன்ட் அம்மையார்.
47. அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது என கூறியவர் - அன்னிபெசன்ட் அம்மையார்.
48. 1910 - ஆண்டு பத்திரிகைச் சட்டத்தின்படி, பிணைத் தொகையாக பெருமளவு பணத்தைச் செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டவர் - அன்னிபெசன்ட்.
49. விடுதலை பெற இந்தியா எப்படித் துயருற்றது How India wrought for Freedom இந்தியா ஒரு தேசம் India: A Nation இரண்டு புத்தகங்களையும் சுயாட்சி குறித்த துண்டுப்பிரசுரத்தையும் எழுதியவர் - அன்னி பெசன்ட்.
50. 1917 - நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைவராகத் தேர்வுசெய்யப்பட்டவர் - அன்னிபெசன்ட்.
51. சென்னை திராவிடர் கழகம் உருவாக்கப்பட்ட ஆண்டு - 1912.
52. சென்னை திராவிடர் கழகத்தின் உறுப்பினர் - C. நடேசனார்.
53. 1916 ஜுன் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக திராவிடர் சங்க தங்கும் விடுதியை நிறுவியவர்- C. நடேசனார்.
54. பிராமணர் அல்லாதோரின் தலைவர்களாக இருந்தவர்கள் - T.M. நாயர், P தியாகராயர்.
55. P. தியாகராயர், T.M. நாயர், C. நடேசனார் ஆகியோர் தலைமையில் சுமார் 30 பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரியா பொது அரங்கில் கூடிய ஆண்டு - 1916 நவம்பர் 20.
56. பிராமணரல்லாதோர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காகத் உருவாக்கப்பட்ட அமைப்பு - தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்.
57. தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் 3 செய்தித்தாள்கள்:
(South Indian Liberal Federation - SILF)
    1. ஆங்கிலம் - ஜஸ்டிஸ் Justice – நீதி.
    2. தமிழ் - திராவிடன்.
    3. தெலுங்கு - ஆந்திர பிரகாசிகா.
58. எந்த கட்சி தனது நோக்கங்களை கோடிட்டுக் காட்டி பிராமணரல்லாதோரின் அறிக்கையை வெளியிட்டது - நீதிக்கட்சி.
59. நீதிக்கட்சி :
    1. நீதிக்கட்சி அரசுப் பணியிடங்களில் பிராமணரல்லாதோர்களுக்கு இட ஒதுக்கீடு , பிரதிநிதித்துவ அமைப்புகளில் இட ஒதுக்கீடு கோரியது.
    2. நீதிக்கட்சி வகுப்புவாத பிரதிநிதித்துவத்தை கோரியது.
    3. தன்னாட்சி இயக்கத்தை பிராமணர்களின் இயக்கம் என எதிர்த்தது.
    4. சென்னை அரசாங்கம் நீதிகட்சியை ஆதரித்தது.
60. எந்த ஆண்டு சட்டம் பிராமணரல்லாதோர்களுக்குத் தேர்தலில் இட ஒதுக்கீடு வழங்கியது - 1919.
61. 1920 ல் நடைபெற்ற தேர்தலில் மொத்தமிருந்த 98 இடங்களில் எத்தனை இடங்கள் நீதிக்கட்சி வெற்றி பெற்றது - 63 இடங்கள்.
62. நீதிக்கட்சியின் முதலாவது முதலமைச்சர்- A சுப்பராயலு.
63. 1923 ல் நீதிக் கட்சி அமைச்சரவையை அமைத்தவர் - பனகல் அரசர்.
64. நீதிக்கட்சியின் பல்வேறு நடவடிக்கைகள்:
    1. உள்ளாட்சித் துறையிலும் கல்வி நிலையங்களிலும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.
    2. பணியாளர் தேர்வுக் குழு நிறுவப்பட்டது.

3. இந்து சமய அறநிலையத்துறை சட்டமும், சென்னை அரசு தொழில் உதவி சட்டமும் இயற்றப்பட்டது.
4. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
5. ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்காக புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து வழங்கப்பட்டன.
6. கல்வி கட்டண சலுகை , கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது.
7. மதிய உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

65. 1919 ஆங்கில அரசு கொடூரமான குழப்பவாத புரட்சிக் குற்றச் சட்டத்தைப் ரௌளலட்சட்டம் பரிந்துரை செய்த குழு - சர் சிட்னி ரெலட் குழு.
66. எந்த ஆண்டு மெரினா கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார் - 1919 மார்ச் 18.
67. கருப்புச் சட்டத்தை எதிர்க்கும் நோக்கில் கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்டன ஆண்டு- 1919 ஏப்ரல் 6.
68. மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியவர் - ஜார்ஜ் ஜோசப்.
69. தமிழ்நாட்டில் குற்றப் பரம்பரைச் சமூகங்களின் பாதுகாவலராக விளங்கியவர் - ஜார்ஜ் ஜோசப்.
70. மதுரை மக்கள் ஜார்ஜ் ஜோசப்பை எவ்வாறு அன்புடன் அழைத்தனர் - ரோசாப்பு துரை.
71. மதுரை தொழிலாளர் சங்கம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு - 1918.
72. 1918 மதுரை தொழிலாளர் சங்கம் எனும் அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு உதவியவர் - ஜார்ஜ் ஜோசப்.
73. துருக்கியின் கலீபா பதவியை மீட்பதற்காக தொடங்கப்பட்ட இயக்கம்- கிலாபத் இயக்கம்.
74. தமிழ்நாட்டில் மௌலானா சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் கிலாபத் நாள் கடைப்பிடிக்கப்பட்ட ஆண்டு - 1920 ஏப்ரல் 17.
75. கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளின் முக்கிய மையமாகத் திகழ்ந்தது - வாணியம்பாடி.
76. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தை வழி நடத்தியவர்கள் - தந்தை பெரியார் , ராஜாஜி.
77. முஸ்லிம் லீக்கின் சென்னைக் கிளையை நிறுவியவர் - யாகுப் ஹசன். ராஜாஜி நெருக்கமாகச் செயல்பட்டார்.
78. எந்த ஆண்டில் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது - 1921 நவம்பர்.
79. ஜனவரி 13 எந்த இளவரசரின் வருகை புறக்கணிக்கப்பட்டது - வேல்ஸ் இளவரசர்.
80. 1922 சௌரி சௌரா நிகழ்வில் எத்தனை காவலர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது - 22 காவலர்கள்.
81. தஞ்சாவூரில் - வரிகொடா இயக்கம் ஒன்று நடைபெற்றது.
82. கள்ளுண்பதற்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் தனக்குச் சொந்தமான தோப்பிலிருந்த தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்டியவர்- தந்தை பெரியார்.
83. திருவாங்கூர் அரசின் ஆட்சியிலிருந்த வைக்கம் எனும் ஊரில் நடைபெற்ற கோவில் நுழைவுக்கான சத்தியாகிரகத்தில் முக்கியப்பங்கு வகித்தவர் - தந்தை பெரியார்.
84. வைக்கத்தில் கோவிலைச் சுற்றி இருந்த வீதிகளில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்ட ஆண்டு - 1925 ஜூன்.
85. தேசியக் கல்வியை முன்னெடுக்கும் பொருட்டு ஒரு குருகுலமானது V.V. சுப்பிரமணியனாரால் எங்கு நிறுவப்பெற்றது – சேரன்மாதேவி.
86. 1925 நவம்பர் 21 காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் சட்டசபையில் பிராமணரல்லாதோருக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தவர் - பெரியார்.
87. ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து காங்கிரஸ், இரு பிரிவாக பிரிந்தது - மாற்றத்தை விரும்பாதோர், மாற்றத்தை விரும்புவோர்.

88. யருடன் சேர்ந்து கொண்ட ராஜாஜி சட்டமன்றத்தைப் புறக்கணிப்பது எனும் கருத்தை முன்வைத்தார் - கஸ்தூரிரங்கர், M.A. அன்சாரி.

89. சுயராஜ்ய கட்சியை தோற்றுவித்தவர்கள் - சித்தரஞ்சன் தாஸ் , மோதிலால் நேரு.

90. தமிழ்நாட்டில் சுயராஜ்ய கட்சி தலைமை ஏற்றவர்கள்- சீனிவாசனார், S.சத்தியமூர்த்தி.

91. எந்த ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் சுயராஜ்ஜியக் கட்சியினர் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றனர் - 1926.

92. நீல் சிலை அகற்றும் போராட்டம் நடைபெற்ற ஆண்டு -1927.

93. நீல் சிலை அகற்றும் போராட்டம் தலைமை ஏற்றவர் - சோமையாஜுலு .

94. 1937-யாருடைய தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைத்திருந்தபோது நீல் சிலை அகற்றப்பட்டு சென்னை அருங்காட்சியகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது -இராஜாஜி.

95. 1930 நடைபெற்ற தேர்தலில் சுயராஜ்ஜியக் கட்சியினர் போட்டியிடாததால் எளிதாக வெற்றி பெற்ற கட்சி - நீதிக்கட்சி.

96. 1919 ஆம் ஆண்டுச் சட்டத்தின் செயல்பாடுகளைப் பரிசீலனை செய்து , சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்ய, 1927 ல் இந்திய சட்டப்பூர்வ ஆணையம் ஒன்று யார் தலைமையில் அமைக்கப் பெற்றது - சர் ஜான் சைமன்

97. சென்னையில் யாருடைய தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு பிரச்சாரக் குழுவொன்று உருவாக்கப்பட்டது- S. சத்தியமூர்த்தி.

98. சைமன் குழு சென்னைக்கு வந்த ஆண்டு - 1929 பிப்ரவரி 18.

99. எந்த ஆண்டு நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் சென்னை மாநாடு முழுமையான சுதந்திரமே தனது இலக்கு என அறிவித்தது - 1927.

100. சைமன் குழுவினை எதிர்த்து, அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களை வடிவமைப்பதற்காக காங்கிரஸ் யாருடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்தது - மோதிலால் நேரு .

101. எந்த ஆண்டில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பூரண சுயராஜ்ஜியம் (முழு சுதந்திரம்) என்பதே இலக்கு எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது - 1929, லாகூர்.

102. ராவி நதியின் கரையில் சுதந்திரத்தை அறிவிக்கும் விதமாக ஜவகர்லால் நேரு தேசியக் கொடியை ஏற்றிய ஆண்டு - 1930 ஜனவரி 26.

103. காந்தியடிகள் தண்டியை நோக்கி உப்பு சத்தியாகிரக யாத்திரையைத் துவக்கிய ஆண்டு - 1930 மார்ச் 12.

104. 1930 ஏப்ரல் தமிழகத்தில் உப்பு சத்தியாகிரகம் தலைமையேற்று வேதாரண்யம் நோக்கி அணி வகுத்துச் சென்றவர் - ராஜாஜி.

105. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் ராஜாஜி தலைமையில் 1930 ஏப்ரல் 13 லதிருச்சியிலிருந்து தொடங்கி ஏப்ரல் 28 இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யம் வரை நடைபெற்றது. இதில் எத்தனை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் – 100.

106. ராஜாஜியின் தலைமையில் எத்தனை தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர் - 12 தொண்டர்கள்.

107. கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்திய நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர் எனும் சிறப்புப் பா எழுதியவர்- நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார்.

108. வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற முக்கியத் தலைவர்கள:

1. T.S.S. ராஜன்,
2. திருமதி. ருக்மணி லட்சுமிபதி
3. சர்தார் வேதரத்தினம்,
4. C. சாமிநாதர்
5. K. சந்தானம்.

109. தமிழ்நாட்டில் உப்பு சத்தியாகிரக நினைவு சின்னம் அமைக்கப்பட்டுள்ள இடம் –வேதாரண்யம்.

110. யார் தலைமையில் சத்தியாகிரகிகள் சென்னைக்கு அருகேயுள்ள உதயவனம் என்ற இடத்தில் ஒரு முகாமை அமைத்திருந்தனர் - T. பிரகாசம், K. நாகேஸ்வர ராவ்.

111. உப்புச்சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி - ருக்மணி லட்சுமிபதி.
112. 1932 ஜனவரி 26 புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றியவர் - ருக்மணி லட்சுமிபதி.
113. பரவலாக ஆரியா என அழைக்கப்பட்ட பாஷ்யம்- ருக்மணி லட்சுமிபதி.
114. எந்த ஆண்டில் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் திருப்பூர் குமரன் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் பாடி சென்றார்- 1932 ஜனவரி 11.
115. எந்த ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் மாநில சுயாட்சிக்கு வழி வகுத்தது - 1935 .
116. 1937 ஆம் ஆண்டு தேர்தலில் எந்த கட்சி வெற்றி பெற்றது - காங்கிரஸ்.
117. 1937 ஆம் ஆண்டு தேர்தலில் படு தோல்வி அடைந்த கட்சி- நீதி கட்சி.
118. யார் முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தார்- ராஜாஜி.
119. ராஜாஜி மதுவிலக்கு பரிசோதனை முயற்சியாக அறிமுகம் செய்த இடம் - சேலம்.
120. மதுவிலக்கு மூலம் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்ய அறிமுகப்படுத்திய வரி- விற்பனை வரியை.
121. யார் மேற்கொண்ட முயற்சியினால் ஜமீன்தார்களின் பகுதிகளைச் சேர்ந்த குத்தகைதாரர்களின் நிலை குறித்து விசாரணை செய்ய விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டது- T. பிரகாசம்.
122. மதுரை ஹரிஜன சேவக் சங்கத்தின் தலைவர் வைத்தியநாதர், செயலர் L.N. கோபால்சாமி ஆகியோரால் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் ஹரிஜன மக்களுடன் நுழையத் திட்டமிடப்பட்ட ஆண்டு - 1939 ஜூலை 9.
123. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக உள்ள குடிமை, சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்காக கோவில் நுழைவு அங்கீகார, இழப்பீட்டுச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு - 1939.
124. இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றினை சேலத்தில் நடத்தியவர் - தந்தை பெரியார்.
125. இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் சிறையில் மரணமடைந்த இருவர்- தாளமுத்து,நடராஜன்.
126. இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு திருச்சியிலிருந்து சென்னைக்கு ஊர்வலம் ஒன்று திட்டமிடப்பட்டது. இதில் பெரியார் உட்பட எத்தனை போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர் -1200.
127. வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு - 1942 ஆகஸ்டு 8.
128. செய் அல்லது செத்துமடி எனும் முழக்கத்தை வழங்கியவர் - மகாத்மா காந்தி.
129. பம்பாயிலிருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்த காமராசர் ரயில் நிலையங்களில் முக்கிய தலைவர்களை கைது செய்வதை தெரிந்துகொண்டு காவல்துறையினரின் கண்ணில் படாமல் இறங்கிய இடம் – அரக்கோணம்.
130. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது இராணுவத்துடனான காங்கிரஸ் தொண்டர்கள் மோதல் நடைபெற்ற இடம் – மதுரை.

**PAGE NO: 77** **10TH STD -** **TOTAL QUESTION -130**

1. ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி – தமிழ்.
2. 1578 - இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகம் வெளியிடப்பட்ட இடம்-கோவா.
3. முழுமையான அச்சகம் சீகன்பால்கு என்பவரால் தரங்கம்பாடியில் நிறுவப்பட்ட ஆண்டு - 1709.
4. தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் வெளியிடப்பட்ட ஆண்டு - 1812.
5. தமிழ் செவ்வியல் இலக்கியங்களை மீண்டும் கண்டறிவதற்காக தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தார்கள்:
    1. சி.வை.தாமோதரனார்1832 - 1901
    2. உ.வே. சாமிநாதர் 1855 - 1942
6. பனையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தவர் - சி.வை .தாமோதரனார்.
7. சி.வை. தாமோதரனார் பதிப்பித்த நூல்கள்:
    1. தொல்காப்பியம் ,
    2. வீரசோழியம்,
    3. இறையனார் அகப்பொருள்,
    4. இலக்கண விளக்கம்
    5. கலித்தொகை ,
    6. சூளாமணி.
8. தமிழறிஞர் மீனாட்சி சுந்தரனாரின் மாணவர்- உ.வே. சாமிநாதர்
9. உ.வே. சாமிநாதர் பதிப்பித்த நூல்ல்கள்:
    1. சீவக சிந்தாமணி - 1887
    2. பத்துப்பாட்டு -1889
    3. சிலப்பதிகாரம் -1892
    4. புறநானூறு -1894
    5. புறப்பொருள் வெண்பாமாலை - 1895
    6. மணிமேகலை - 1898
    7. ஐங்குறுநூறு -1903
    8. பதிற்றுப்பத்து -1904
10. 1816 - ல் புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவியவர்- F.W எல்லிஸ் (1777- 1819)
11. தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை அவை இந்தோ-ஆரியக்குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை எனும் கோட்பாட்டை உருவாக்கியவர்- F.W. எல்லிஸ்.
12. திராவிட (அ) தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் என்ற நூலை எழுதியவர் - ராபர்ட் கால்டுவெல் (1814-1891).
13. திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அப்படியான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் கூறியவர்- ராபர்ட் கால்டுவெல்.
14. பி. சுந்தரனாரால் (1855-1897) எழுதப்பெற்ற நாடக நூல் – மனோன்மணியம்.
15. வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்டவர் -ராமலிங்க அடிகள். (1823 - 1874)
16. நடைமுறையில் இருந்த இந்துசமய பழமைவாதத்தை கேள்விக்குள்ளாக்கினார் - ராமலிங்க அடிகள்.
17. தமிழ் இசைக்குச் சிறப்புச் செய்ததோடு தமிழ் இசை வரலாறு குறித்து நூல்களையும் வெளியிட்டவர் - ஆபிரகாம் பண்டிதர். (1859-1919)
18. பெத்தத்திற்குப் புத்துயிரளித்த ஒரு தொடக்ககால முன்னோடி- M. சிங்காரவேலர் (1860-1946).
19. காலனிய சக்தியை எதிர்கொள்வதற்காக பொதுவுடமை வாதத்தையும் சமத்துவத்தையும் வளர்த்தவர் - M. சிங்காரவேலர் .

20. சமூகரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் உரிமைகளுக்காகப் பகுத்தறிவுச் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்தவர்கள் - பண்டிதர் அயோத்திதாசர் 1845-1914 ,பெரியார் ஈ.வெ. ராமசாமி 1879-1973.
21. சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றியவர்- வி.கோ. சூரிய நாராயணசாஸ்திரி. 1870-1903.
22. பரிதிமாற் கலைஞர் என்னும் தமிழ் பெயரை சூட்டிக்கொண்டார்- வி.கோ. சூரிய நாராயணசாஸ்திரி.
23. தமிழ் மொழி ஒரு செம்மொழி என்றும், எனவே சென்னைப் பல்கலைக்கழகம் தமிழை ஒரு வட்டாரமொழியென அழைக்கக் கூடாதென முதன்முதலாக வாதாடியவர்- பரிதிமாற் கலைஞர்..
24. 14-வரிச்செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தவர் - பரிதிமாற் கலைஞர்.
25. தமிழ் மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தை என்றும் தனித்தமிழ் இயக்கத்தை (தூய தமிழ் இயக்கம்) உருவாக்கியவர் எனவும் கருதப்படுவர்- மறை மலை அடிகள் (1876-1950).
26. மறைமலை அடிகள் விளக்கவுரை எழுதிய சங்க இலக்கிய நூல்கள் -பட்டினப்பாலை , முல்லைப்பாட்டு.
27. மறைமலை அடிகள் இளைஞராக இருந்த போது பணிபுரிந்த பத்திரிகை- சித்தாந்த தீபிகா.
28. மறைமலை அடிகள் அவர்களின் ஆசிரியர்கள்- பி. சுந்தரனார் ,சோமசுந்தர நாயகர்.
29. தனித்தமிழ் இயக்கம் தொடங்கிய ஆண்டு -1916.
30. மறைமலை அடிகளாரின் மகள்- நீலாம்பிகை அம்மையார்.
31. தனித்தமிழ் இயக்கம் உருவாக்கப்பட்டதில் முக்கிய பங்கு வகித்தவர்- நீலாம்பிகை அம்மையார்.
32. வேதாச்சலம் என்ற தனது பெயரை தூய தமிழில் என மாற்றிக் கொண்டவர்- மறைமலை அடிகள்.
33. மறைமலை அடிகளாரின் ஞானசாகரம் எனும் பத்திரிக்கை எவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டது - அறிவுக்கடல்.
34. சமரச சன்மார்க்க சங்கம் எனும் நிறுவனம் எவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது - பொது நிலைக் கழகம்.
35. தமிழ் சொற்களுக்குள் புகுந்துவிட்ட சமஸ்கிருதச் சொற்களுக்கு இணையான பொருள்தரக்கூடிய தமிழ் சொற்களடங்கிய அகராதி ஒன்றை தொகுத்தவர் -நீலாம்பிகை.
36. 1911- மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பிராமணர்களின் விழுக்காடு - 3%.
37. 1911- மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பிராமணரல்லாதோர் விழுக்காடு-90%.
38. 1901 முதல் 1911 வரையிலான பத்தாண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்த பிராமணர் எண்ணிக்கை – 4074.
39. பிராமணமரல்லாதோரின் எண்ணிகை -1035
40. 1909 ல் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு- மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம்.
41. 1912 ல் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கிய மருத்துவர் -டாக்டர் சி. நடேசனார்.
42. மதராஸ் ஐக்கிய கழகம் பின்னாளில் எவ்வாறு மாறியது-மதராஸ் திராவிடர் சங்கம்.
43. ஜூலை 1916-ல் திருவல்லிக்கேணியில் (சென்னை) திராவிடர் இல்லம் என்ற பெயரில் ஒரு தங்கும் விடுதியை நிறுவியவர்- டாக்டர் சி. நடேசனார்.
44. 1916 நவம்பர் 20 தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (South Indian Liberal Federation) உருவாக்க ஒருங்கிணைந்தனர்.
    1. டாக்டர் நடேசனார்.
    2. சர் பிட்டி தியாகராயர்.

3. டி.எம். நாயர் .
4. அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லாத தலைவர்கள் .

45. விக்டோரியா பொது அரங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிராமணரல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு- 1916 டிசம்பர்.

46. தென்னிந்திய நல உரிமைகள் சங்கம் தொடங்கிய பத்திரிகைகள்:
1. தமிழில் - திராவிடன்.
2. ஆங்கிலத்தில் - ஜஸ்டிஸ்.
3. தெலுங்கில் - ஆந்திர பிரகாசிகா.

47. பிராமணர் அல்லாதோர் அறிக்கையில் " சென்னை மாகாணத்தில் 4 கோடியே 11. 1/2 லட்சம் மக்களில் எத்தனை கோடி மக்கள் பிராமணரல்லாதவர்கள் என்று குறிப்பிட்டுள்ளது- 4 கோடி.

48. 1920 - ல் நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி -நீதிக்கட்சி.

49. சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சர்- A.சுப்பராயலு.

50. தேர்தல்களில், முதன்முதலாகப் பங்கேற்ற இந்திய தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்று நீதிக்கட்சியை தோல்வி அடையச் செய்த ஆண்டு - 1937.

51. பிராமணர் அல்லாத சமூக குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென தங்கும் விடுதிகள் எந்த ஆண்டில் உருவாக்கப்பட்டன - 1923.

52. நீதிக்கட்சி முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை எந்த ஆண்டில் அங்கீகரித்தது- 1921.

53. 1926-ல் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்- முத்துலட்சுமி அம்மையார்.

54. பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் இயற்றப்பட்ட ஆண்டு - 1921 செப்டம்பர் 16, 1922 ஆகஸ்ட்.

55. அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்த ஆண்டு - 1924 .

56. பிரிட்டிஷ் இந்திய அரசு பொதுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கிய ஆண்டு - 1929.

57. நீதிக்கட்சி இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றிய ஆண்டு - 1926.

58. தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்த இயக்கம் - சுயமரியாதை இயக்கம் (Self Respect Movement).

59. பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை என பிரகடனம் செய்த இயக்கம்- சுயமரியாதை இயக்கம்.

60. பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த இயக்கம்- சுயமரியாதை இயக்கம்.

61. சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவுகளின் மையப் பொருளாக இருந்தது – இனம்.

62. இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது- சுயமரியாதை இயக்கம்.

63. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றை பாராட்டியது- சுயமரியாதை இயக்கம்.

64. இஸ்லாம் சமூகத்தில் சீர்திருத்த முன்முயற்சிகள் மேற்கொண்ட துருக்கியைச் சேர்ந்த முஸ்தபா கமால் பாட்சா, ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த அமானுல்லா ஆகியோரை திராவிட முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டுமென கூறியவர்- பெரியார்.

65. சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர்- பெரியார் ஈ. வெ .ராமசாமி. 1879- 1973.

66. பெரியாரின் பெற்றோர் - வெங்கடப்பர் , சின்னத்தாயம்மாள்.

67. பெரியார் ஈரோட்டின் நகரசபை தலைவராக பதவி வகித்த ஆண்டு - 1918 – 1919.

68. மது விலக்கு இயக்கத்திற்கு ஆதரவாகத் தனது தோப்பிலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டியவர் - பெரியார்.
69. சட்டசபை போன்ற பிரதிநித்துவ அமைப்புகளில் பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் முனைப்புடன் இருந்தவர் –பெரியார்.
70. பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய ஆண்டு - 1925.
71. பெரியார் வெளியிட்ட இதழ்கள் மற்றும் செய்தித்தாள்கள் வருடங்கள்:
    1. குடிஅரசு- 1925.
    2. ரிவோல்ட் -1928.
    3. புரட்சி -1933.
    4. பகுத்தறிவு -1934.
    5. விடுதலை -1935.
72. சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் - குடிஅரசு.
73. பெரியார் சென்ற வெளிநாடுகள்:
    1. சிங்கப்பூர் -1929 – 1930.
    2. மலேசியா -1954.
    3. எகிப்து, சோவியத் ரஷ்யா , கிரீஸ் , துருக்கி , ஜெர்மனி , இங்கிலாந்து , ஸ்பெயின், பிரான்ஸ் , போர்த்துக்கல் 1931 – 1932.
74. 1954 ல் நடைபெற்ற புத்தரின் 2500 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள பெரியார் எங்கு சென்றார் - பர்மா.
75. பெரியாரின் எந்த நாட்டின் பயண அனுபவங்கள் அவரை சமதர்ம கருத்துக்களின்பால் நாட்டம் கொள்ள வைத்தன- ரஷ்யா , ஐரோப்பா.
76. பௌத்த சமய முன்னோடியும், தென்னிந்தியாவின் முதல் பொதுவுடமை வாதியுமான யாருடன் பெரியார் நெருக்கமான உறவு கொண்டிருந்தார்- சிங்காரவேலர்.
77. அம்பேத்கார் எழுதிய சாதி **Annihilation of caste** எனும் நூலை வெளிவந்தவுடன் பெரியார் தமிழில் பதிப்பித்த ஆண்டு - 1936.
78. இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்ற ஆண்டு - 1937 – 1939.
79. சிறையில் இருந்தபோது நீதிக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்- பெரியார். - நீதிக்கட்சி - சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்து.
80. நீதிக்கட்சி திராவிடர் கழகம் (திசு) எனப் புதுப்பெயர் சூட்டப்பெற்ற ஆண்டு – 1944.
81. குலக்கல்வி திட்டம் - ராஜாஜி.
82. குலக்கல்வி திட்டத்தை கொண்டு வந்தவர் - ராஜாஜி. 1952 – 1954.
83. மாணவர்களுக்கு அவர்களின் தந்தையர்கள் செய்துவந்த தொழில்களில் பயிற்சி அளிப்பது- குலக்கல்வி திட்டம்.
84. குலக்கல்வி திட்டதிற்கு எதிராக பெரியார் மேற்கொண்ட போராட்டங்கள்- ராஜாஜியின் பதவி விலகலுக்கு காரணமாயிற்று
85. பின்னர் சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் ஆனார்- காமராஜர்.
86. சமயம் என்றால் நீங்கள் மூட நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று பொருள் என உறுதிபடக் கூறிவர்- பெரியார்.
87. திருமணம் செய்து கொடுப்பது எனும் வார்த்தைகளை மறுத்த அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன. அவைகளுக்கு மாற்றாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்று வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார் – பெரியார்.
88. கோவில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர்கள் முறையை எதிர்த்தவர்- பெரியார்.

89. பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் - பெண் ஏன் அடிமையானாள்.
90. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என நம்பியவர்- பெரியார்.
91. குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றவர் - பெரியார்.
92. தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்த ஆண்டு-1989.
93. தாத்தா எனப் பரவலாக அறியப்பட்டவர்- இரட்டை மலை சீனிவாசன் .1859-1945
94. 1859 - ஆண்டு இரட்டை மலை சீனிவாசன் - காஞ்சிபுரத்தில் பிறந்தார்.
95. இரட்டை மலை சீனிவாசன் அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு பட்டங்கள்:
    1. ராவ்சாகிப் -1926.
    2. ராவ் பகதூர் -1930.
    3. திவான் பகதூர்- 1936.
96. இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் சுயசரிதையான ஜீவிய சரித சுருக்கம் வெளியிடப்பட்ட ஆண்டு - 1939.
97. 1893 ல் ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கியவர் - இரட்டை மலை சீனிவாசன்.
98. ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டமைப்பு , சென்னை மாகாண ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றிவர்- இரட்டை மலை சீனிவாசன்.
99. காந்தியடிகளை இரட்டைமலை சீனிவாசன் எங்கு சந்தித்து அவருடன் நெருக்கமானார் – தென்னாப்பிரிக்கா.
100. இரட்டை மலை சீனிவாசன் சென்னை மாகாணசட்டசபையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கபட்ட ஆண்டு- 1923.
101. 1930 -1931 லண்டனில் நடைபெற்ற இரண்டாவது வட்டமேசை மாநாடுகளில் கலந்து கொண்டார்- இரட்டைமலை சீனிவாசன்.
102. பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் இவரும் ஒருவர்- இரட்டைமலை சீனிவாசன்.
103. மக்களால் எம்.சி. ராஜா என அழைக்கப்பட்டவர் - மயிலை சின்னதம்பி ராஜா 1883-1943.
104. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் உருவாக்கியவர்களில் ஒருவராவார்- எம்.சி. ராஜா.
105. சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்டமேலவைக்கு தேர்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினராவார் - மயிலை சின்னதம்பி ராஜா.1920-1926.
106. சென்னை சட்டசபையில் நீதிக் கட்சியின் துணைத் தலைவராக செயல்பட்டுள்ளார்- எம்.சி. ராஜா
107. ஆதிதிராவிடர், ஆதிஆந்திரர் எனும் வார்த்தைகளைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்தவர் - மயிலை சின்னதம்பி ராஜா.
108. 1928 - ல் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக நீண்டகாலம் பணியாற்றிவர்- மயிலை சின்னதம்பி ராஜா.
109. சென்னை மாகாணத்தில் தொழிலாளர் சங்கங்களை அமைப்பதில் முன்முயற்சி மேற்கொண்டவர்கள் -பி.பி. வாடியா , ம. சிங்காரவேலர் ,திரு.வி. கல்யாணசுந்தரம்.
110. இந்தியாவின் முதல் தொழில் சங்கமான சென்னை தொழிலாளர் சங்கம் madras Labour Union உருவாக்கப்பட்ட ஆண்டு- 1918.
111. அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு எங்கு எப்போது நடைபெற்ற ஆண்டு - 1920 அக்டோபர் 31 - பம்பாய்.
112. சென்னை மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர் - ம. சிங்காரவேலர் (1860 1946).
113. ம . சிங்காரவேலர் இளமைக் காலத்தில் - பௌத்தத்தை பரிந்துரை செய்தார்.

114. காரல் மார்க்ஸ், சார்லஸ் டார்வின், ஹெர்பர்ட் ஸ்பென்சர், ஆல்பர்ட் ஐன்ஸ்டின் ஆகியோரின் கருத்துக்களைத் தமிழில் வடித்தவர் - ம. சிங்காரவேலர்.

115. 1923 - முதல் முதலாக மே தின விழாவை ஏற்பாடு செய்தவர் - ம. சிங்காரவேலர்.

116. ம. சிங்காரவேலர் தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனைகளைப் வெளிப்படுத்துவதற்காக எந்த பத்திரிக்கையை வெளியிட்டார்-தொழிலாளன் (Worker).

117. பெரியாரோடும் சுயமரியாதை இயக்கத்தோடும் நெருக்கமாக இருந்தவர்- ம. சிங்காரவேலர்.

118. தமிழ் இசை வரலாற்றை முறையாக கற்றாய்ந்து , பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றவர் -ஆபிரகாம் பண்டிதர்.

119. 1912 - ல் ஆபிரகாம் பண்டிதர் தஞ்சாவூர் ஏற்படுத்தி அமைப்பு - சங்கீத வித்யா மகாஜன சங்கம்.

120. தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்ட ஆண்டு - 1943 .

121. சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த யார் இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக அறிமுக செய்தார் – ராஜாஜி.

122. தமிழ் நாட்டில் உருவான பெண்ணிய இயக்கங்கள்:

1. இந்தியப் பெண்கள் சங்கம் (Women's India Association - WIA)
2. அகில இந்தியப் பெண்கள் மாநாடு (All India Women's conference - ALWC)

123. 1917 - ல் இந்தியப் பெண்கள் சங்கம் (WIA) சென்னை அடையாறு பகுதியில் தொடங்கியவர்கள் - அன்னிபெசன்ட், டோரதி ஜினராஜதாசா மார்கரெட் கசின்ஸ்.

9. சர் அலெக்சாண்டர் ஜோர்டன் கார்டிவ் 1913 ஆம் ஆண்டு அளித்த புள்ளி விவரப்படி மக்கள் தொகையில் 3 சதவீதம் மட்டுமே வசிக்கும் பிராமணர்கள் வாய்ப்புகளையும் எடுத்துக் கொண்டார்கள் என நிரூபித்தது .
10. 1916 ஆம் ஆண்டு தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பை நிறுவியவர்கள் -
    டாக்டர் டி.எம். நாயர் , சர் பிட்டி தியாகராயர் , டாக்டர் சி. நடேசனார்.
11. நீதிக்கட்சி :

1. ஆங்கில இதழான நீதி என்ற பெயரின் அடிப்படையிலேயே நீதிக்கட்சி என பெயரிடப்பட்டது.
2. இவர்களின் ஓயாத முயற்சியினால் பிராமணர் அல்லாதோருக்கு சட்டமன்றத்தில் இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தது.
3. பிராமணர் அல்லாதோரின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக பொதுக்கருத்தை உருவாக்குதல்.

12. 1919 ஆம் ஆண்டு மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை கொண்டு வந்ததன் மூலம் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு - 1920.
13. 1920 ஆம் ஆண்டு தேர்தலில் நீதி கட்சி பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று சென்னை மாகாணத்திற்கு - எ. சுப்பராயலு - முதலமைச்சரானார் --
14. 1920 ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில்- காங்கிரஸ் கட்சி ஒத்துழையாமையின் ஒரு பகுதியாக தேர்தலைப் புறக்கணித்தது .
15. நீதி கட்சி :
    1. பல்வேறு ஏற்ற இறக்கம் இருந்தபோதிலும் நீதிக்கட்சி 1921 முதல் 1937 வரை தொடர்ச்சியாக அதிகாரத்தில் இருந்தது.
    2. வகுப்புவாரி அரசாணை மூலம் ஒவ்வொரு பிராமணரல்லாத பிரிவினருக்கும் அனைத்து துறைகளிலும் போதுமான வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட்டது.
    3. பஞ்ச மக்களுக்கு நிலத்தை ஒதுக்கீடு செய்து கொடுத்தனர்
16. சென்னை மாகாணத்தில் இந்து சமய அறநிலைய வாரியத்தை அமைத்த கட்சி –நீதிக்கட்சி.
17. மதிய உணவு திட்டத்தை" பரிசோதனை முறையில் கொண்டு வந்த கட்சி- நீதிக்கட்சி.
18. யாருடைய முயற்சியால் இந்தியாவில் முதல் முறையாக தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது - டாக்டர் முத்துலட்சுமி.
19. பெண்களுக்கு வாக்குரிமை "எந்த கட்சி ஆட்சியின் போது கொண்டுவரப்பட்டது –நீதிக்கட்சி.
20. நீதிக்கட்சி ஆட்சியின் கீழ் முக்கிய சீர்திருத்தங்கள் -
    1. கூட்டுறவு சங்கங்கள் மேம்படுத்தப்பட்டன.
    2. மிராசுதாரர்கள் முறை ஒழிக்கப்பட்டது.
    3. 1929 அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும்1925 ஆந்திரா பல்கலைக்கழகம் ஆகியவை உருவாக்கப்பட்டன.
21. நீதிக்கட்சி ஆட்சியின் கீழ் நீர்பாசன திட்டங்கள் உருவாக்கப்பட்ட ஆண்டு- 1923.
22. இந்தியைக் கட்டாய பாடமாக்குவதை எதிர்த்து "தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை அழித்து வட இந்திய ஏகாதிபத்தியத்தை" நிறுவும் முயற்சி என கூறியவர் - பெரியார்.

23. இந்தித் திணிப்பு என்பது திராவிடர்களை அடிமைப்படுத்தி ஆரியர்களின் மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சி என்று கூறியவர் - பெரியார்.

24. 15 ஆண்டுகளில் 23 முறை சிறை சென்றார் என்பதால் சிறைப்பறவை என்று அடைமொழியிட்டு அழைக்கப்பட்டவர் - பெரியார்.

25. பெரியார் எந்த ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டு இருந்தபோது நீதி கட்சியில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் -1938.

26. நீதிக்கட்சி எந்த ஆண்டு தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்ற தீர்மானத்தை இயற்றியது – 1938.

27. சேரன்மாதேவி குருகுலத்தில் நடந்த சாதி பாகுபாட்டிற்கு எதிராக பிரச்சாரம் செய்தவர்- பெரியார்.

28. சுயமரியாதை இயக்கம் 1925 ஆம் ஆண்டு பெரியாரால் தொடங்கப்பட்டது. இவ்வியக்கத்தின் நோக்கம்.

    1. தேர்தல் அரசியலை தவிர்த்தது.
    2. சமூக சீர்திருத்தம் , ஜாதி முறையை ஒழிப்பது.
    3. பெண்கள் மீதான பாலின அடிப்படையிலான தடை நீக்கம்.
    4. பரம்பரை அர்ச்சகர் உரிமையை எதிர்த்து பிரச்சாரம்.

29. பெண்கள் மாநாட்டில் ஈ.வெ. ராமசாமிக்கு பெரியார் என்ற பட்டம் எந்த ஆண்டு வழங்கப்பட்டது - 1938 நவம்பர்.

30. சுயமரியாதை கருத்துக்களை சிறப்பான முறையில் பிரச்சாரம் செய்த பெரியாரின் நாளேடுகள் - குடியரசு , புரட்சி , விடுதலை .

31. செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாநாடு நடந்த ஆண்டு -1929.

32. 1937 ஆம் ஆண்டு முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் - இராஜாஜி.

33. பள்ளிகளில் இந்தியை கட்டாய பாடமாக அறிமுகப்படுத்தியவர் -இராஜாஜி.

34. பொதுவுடமைக் கட்சி உருவாக்கப்பட்ட ஆண்டு - 1925.

35. சுயமரியாதை இயக்கத்தின் சமூக சீர்திருத்த திட்டங்களால் கவரப்பட்டவர்- M. சிங்காரவேலர்.

36. எந்த ஆண்டு வரை சுயமரியாதை இயக்கம் சென்னை மாகாணத்தில் ஒரு முன்னோடி இயக்கமாக இருந்தது-1929 (1930 இல் புகழ் மங்கத்தொடங்கியது)

37. சுயமரியாதை இயக்கம் வீழ்ச்சிக்கு மூன்று முக்கிய காரணங்கள் .

    1. ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை பிரிவு மக்களிடையே ஆதரவை இழந்தது.
    2. பெரியார் தலைமையில் இருந்த சுயமரியாதை இயக்கம் மிகவும் புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமானது.
    3. உயர்குடியின மற்றும் ஆங்கில ஆதரவு கண்ணோட்டம் ஆகியவை பெருமளவில் அதன் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தகன.

38. ராஜாஜியின் முக்கிய சீர்திருத்தங்கள்-

    1. முழுமையான மதுவிலக்கு.
    2. ஜமீன்தாரி முறை ஒழிப்பு.
    3. ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவு தடை நீக்கம்.
    4. இந்தி மொழியை கட்டாயமாக பள்ளியில் அறிமுகப்படுத்தினார்.

39. இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற ஆண்டு -1937.

40. முதலமைச்சர்

    1. சுப்பராயலு -1920 – 1921.
    2. பனகல் ராஜா- 1921 – 1926.
    3. பி . சுப்புராயன் - 1926 -1930.
    4. பி. முனுசாமி - 1930 – 1932.
    5. பொப்பிலி ராஜா - 1932 -1937.
    6. பி.டி. இராசன் – 1936.
    7. கே.வி. ரெட்டி -1937.
    8. சி. இராஜாஜி - 1937 – 1939.

41. 1944 ஆம் ஆண்டு சேலம் மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயரைத் திராவிடர் கழகம் என்று சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டு வந்தவர்- சி. என். அண்ணாதுரை.

42. திராவிட நாடு திராவிடர்களுக்கே என முழக்கமிட்டவர் - பெரியார்.

43. 1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் இந்திய அரசமைப்பு சட்டத்தின் உறுப்பு 313 ன் படி இந்தி மொழி இந்திய நாட்டின் அலுவலக மொழியாக ஆக்கப்பட்டது. (திமுக துக்க தினமாக அனுசரிக்க தீர்மானித்தது).

44. அறிஞர் அண்ணா திராவிடர் கழகத்தை விட்டு பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு- 1949 செப்டம்பர் 17.

45. சட்டமும் விதிமுறைகளும் மக்களுக்காகவே ஏற்பட்டவை சட்டத்துக்காகவும் விதிமுறைகளுக்காகவும் மக்கள் இல்லை- காமராசர்.

46. சமூக மற்றும் கல்வி அடிப்படையில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சாதகமாக இட ஒதுக்கீடு அளிக்கும் முதலாவது நாடாளுமன்ற சட்டதிருத்தம் இயற்றப்பட்ட ஆண்டு - 1951.

47. பரம்பரைத் தொழில் எனப்படும் குலக்கல்வி என்ற புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்தியவர் - இராஜாஜி.

48. தண்டியாத்திரை பற்றி கருத்து தெரிவித்தவர் -அருந்ததி ராய்.

49. காமராசர் ஆட்சியில் முக்கிய சிறப்பம்சங்கள்.

    1. ஆட்சிக்காலம் 1954 - 1963.

2. தொடக்கக் கல்வி திட்டத்தில் மாற்றங்களை கொண்டு வந்தார்.
3. குலக்கல்வி திட்டத்தை ஒழித்தார்.
4. பள்ளிகளின் எண்ணிக்கை பன்மடங்கு உயர்த்தினார்.
5. பல அணைகளைக் கட்டி நீர்ப்பாசன வசதியை உயர்த்தினார்.
6. நிறைய தொழில்பேட்டைகளை அமைத்தார்
7. மதிய உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

50. காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டு திமுக வெற்றி பெற்ற ஆண்டு-1967.

51. மாநில மறுசீரமைப்பு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு -1956.

52. சி. என். அண்ணாதுரை ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்ட முக்கிய திட்டங்கள்-
1. அனைத்து ஏழைகளுக்கும் வீட்டுவசதி.
2. படியரிசி திட்டத்தின் மூலம் உணவு பாதுகாப்பிற்கு முன்னோடியாக இருந்தது.
3. குடிசை மாற்று வாரியம் அமைத்தது.

53. சி. என். அண்ணாதுரையின் தலைமையிலான அரசாங்கம் மெட்ராஸ் மாநிலத்தின் பெயரை தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்த ஆண்டு - 1969.

54. அண்ணா ஆட்சி காலத்தில் முக்கிய சாதனைகள்-
1. 75 மைல் தொலைவிற்கு மேல் உள்ள பேருந்து தடங்களை தேசிய மயக்கியது.
2. பல்கலைக்கழகத்திற்கு முந்தைய கல்வி மற்றும் தொழில் கல்விக்கு முந்தைய படிப்புகளுக்கு கல்வி கட்டண விதிவிலக்கு அளிக்கப்பட்டது.
3. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட்டது.
4. திருமண சட்டம் இயற்றப்பட்டது.
5. தமிழகத்தில் இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தியது.

55. படி அரிசி , ஒரு ரூபாய் என்ற விலையில் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்- சி.என். அண்ணாதுரை.

56. எம்.ஜி. ராமச்சந்திரன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு -1972.

57. சென்னை பல்கலைக் கழகம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது - 1857.

58. மக்கள் தொகை அடிப்படையில் தமிழகம் இந்தியாவின் எத்தனையாவது பெரிய மாநிலமாக உள்ளது -7.

59. தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பு" பிற்காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது –நீதிக்கட்சி.

60. பிராமணரல்லாதோர் கூட்டறிக்கையினை வெளியிட்டவர் –

| வ.எண். | சென்னை மாகாணம் முதலமைச்சர்கள் | ஆண்டு |
|---|---|---|
| 1 | அ. சுப்பராயலு | 1920 – 1921 |
| 2 | பனகல் ராஜா | 1921-1926 |
| 3 | பி. சுப்புராயன் | 1926 1930 |
| 4 | பி. முனுசாமி | 1930 1932 |
| 5 | பொப்பிலி ராஜா | 1932 -1937 |
| 6 | பி.டி. இராசன் | 1936 |
| 7 | கே.வி. ரெட்டி | 1937 |
| 8 | சி. இராஜாஜி | 1937 - 1939 |
| (குறிப்பு: தமிழ் நாடு அரசு மாநில சுயாட்சி கோரிக்கையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்ட வருடம் 1940 அக்டோபர் 20 முதல் ஏப்ரல் 30) | | |
| 9 | ட. பிரகாசம் | 1946 -1947 |
| 10 | ஓ.பி. இராமசாமி | 1947 – 1949 |
| | முதலமைச்சர்கள் (தேர்தல் நடைமுறைக்குப் பிறகு) | |
| 11 | பி.எஸ். குமாரசாமி ராஜா | 1949-1952 |
| 12 | சி. இராஜாஜி | 1952 - 1954 |
| 13 | கு. காமராஜ் | 1954-1957 |
| 14 | கு. காமராஜ் | 1957-1962 |
| 15 | கு. காமராஜ் | 1962-1963 |
| 16 | எம். பக்தவச்சலம் | 1963-1967 |
| 17 | சி.என். அண்ணாதுரை | 1967-1969 |
| 18 | மு. கருணாநிதி | 1969-1971 |
| 19 | மு. கருணாநிதி | 1971-1976 |
| 20 | எம்.ஜி. இராமச்சந்திரன் | 1977-1980 |
| 21 | எம்.ஜி. இராமச்சந்திரன் | 1980-1984 |
| 22 | எம்.ஜி. இராமச்சந்திரன் | 1985-1987 |
| 23 | ஜானகி இராமச்சந்திரன் | 1988 |
| 24 | மு. கருணாநிதி | 1989-1991 |
| 25 | ஜெ. ஜெயலலிதா | 1991-1996 |
| 26 | மு. கருணாநிதி | 1996-2001 |
| 27 | ஜெ. ஜெயலலிதா | 2001-2001 |
| 28 | ஓ. பன்னீர்செல்வம் | 2001-2002 |
| 29 | ஜெ. ஜெயலலிதா | 2002 -2006 |
| 30 | மு. கருணாநிதி | 2006 - 2011 |
| 31 | ஜெ. ஜெயலலிதா | 2011 |
| 32 | ஓ. பன்னீர்செல்வம் | 2012 (இடைக்கால) |
| 33 | ஜெ. ஜெயலலிதா | மே 16, 2016 – டிசம்பர் 5 2016 |
| 34 | ஓ. பன்னீர்செல்வம் | டிசம்பர் 2016 – பிப்ரவரி 2017 |
| 35 | க. பழனிசாமி | பிப்ரவரி 2017 - தொடர்கிறார் |



A2Z TNPSC -YOUTUBE CHENNEL



PPA99I

| நிகழ்வுகளின் நாட்குறிப்பு | | |
|---|---|---|
| 1914 | – | திடாவிடர் கழகத்தின் தோற்றம் |
| 1916 | – | தென்னிந்திய விடுதலைக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது |
| 1917 | – | நீதிக் கட்சி |
| 1919 | – | மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தங்கள் |
| 1925 | – | பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். |
| 1937 | – | ராஜாஜியின் தலைமையில் காங்கிரசு அமைச்சரவை உருவாக்கப்படுதல் |
| 1937 | – | இந்தி எதிர்ப்புப் போராட்டம் |
| 1944 | – | சேலம் மாநாட்டில் நீதிக் கட்சி திராவிடர் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது |
| 1949 | – | திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது |
| 1946 | – | சென்னை மாகாணத்தில் ப.பிரகாசம் தலைமையிலான காங்கிரசு அரசாங்கம் அமைந்தது. |
| 1947 | – | ஓ.பி. ராமசாமி முதலமைச்சரானார். |
| 1949 | – | பி. குமாரசாமி ராஜா தலைமையிலான அமைச்சரவை அமைந்தது. |
| 1952 | – | முதல் பொதுத் தேர்தல் நடைப்பெற்றது |
| 1956 | – | மாநில மறுசீரமைப்புச் சட்டம் |
| 1965 | – | இந்தி – எதிர்ப்புப் போராட்டம் |
| 1967 | – | சி.என். அண்ணாதுரை தலைமையில் கீழ் தி.மு.க அரசாங்கம் அமைக்கப்பட்டது. |
| 1969 | – | சி.என். அண்ணாதுரை காலமானார் |
| 1969 | – | மு. கருணாநிதி மாநிலத்தின் முதலமைச்சரானார் |
| 1972 | – | அ.இ. அ.தி.மு.க., எம்.ஜி.இராமச்சந்திரனால் (எம்.ஜி.ஆர்) நிறுவப்பட்டது |
| 1974 | – | மாநில தன்னாட்சித் தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. |



A2Z TNPSC -YOUTUBE CHENNEL

# 11TH- STD - உள்ளாட்சி அரசாங்கங்கள் -

**PAGE NO : 113 | 11TH - STD | TOTAL QUESTION : 94**

1. அரசாங்க நிர்வாக கட்டமைப்பில் இறுதிநிலை அலகாக உள்ளது - உள்ளாட்சிகள்.
2. அரசின் திட்டங்களும் வளங்களும் அடித்தட்டு மக்களை சென்றடைய முக்கிய வழியாக விளங்குவது - உள்ளாட்சிகள்.
3. இந்தியாவில் கிராம உள்ளாட்சி அரசாங்கங்கள் - பஞ்சாயத்து ராஜ் - என்ற பொது பெயரில் அழைக்கப்படுகின்றன
4. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் வகைகள்:
    1. மாநகராட்சிகள்.
    2. நகராட்சிகள்.
    3. நகரியங்கள். (தொழில் நகரங்கள்).
    4. பேரூராட்சிகள்.
    5. பாளைய வாரியங்கள். (ராணுவ அமைப்பில் உள்ள இடங்கள்)
5. 10- இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை- மாநகராட்சிகள்.
6. 10 -லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை - நகராட்சிகள்.
7. புதிய தொழிற்சாலைகள் அமைக்கின்ற இடங்களில் நகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன
8. ராணுவத் தளவாட உற்பத்தி தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் இடங்களில் -பாளைய வாரியங்கள்-ஏற்படுத்தப்படுகின்றன.
9. ராஜீவ் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் முக்கிய நோக்கம் :
    1. தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை ஒவ்வொரு வீட்டுக்கும் வழங்குதல்.
    2. அனைத்து வீடுகளுக்கும் மின்சார வசதி வழங்குதல்.
    3. ஊரகப் பகுதிகளுக்கு சாலை வசதிகளை ஏற்படுத்துதல்.
    4. ஊரகப் பகுதிகளுக்கு மின்சாரம் , ஆரோக்கியம், சமூக பாதுகாப்பு மற்றும் வீடு வழங்குதல்.
10. உள்ளாட்சி அரசாங்கங்கள் விதிக்கும் சில வரிகள் - சொத்து வரி , தொழில் வரி , குடிநீர் வரி.
11. ஜைன மதத்தை தோற்றுவித்தவர் - மகாவீரர்.
12. கிராமங்கள் அளவு மற்றும் வழும் முறை பற்றி புத்த இலக்கியங்கள் , ஜைன இலக்கியங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளன .
13. கௌடில்யரின் எந்த நூல் கிராம நிர்வாகம் பற்றி விரிவாக விளக்குகிறது –அர்த்தசாஸ்திரம்.
14. மௌரியர்களின் ஆட்சிக்காலத்தில் நிர்வாக அலகுகளாக இருந்தது - கிராமம் , மாவட்டம்.

15. யாருடைய காலத்தில் உள்ளாட்சி அரசாங்கங்கள் நன்கு மேம்பட்ட நிலையில் செயல்பட்டு வந்துள்ளன - சோழர்கள்.
16. காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் கண்டெடுக்கப்பட்ட யாருடைய கால கல்வெட்டுகள் உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி விரிவாக விளக்குகின்றன - முதலாம் பராந்தக சோழன்.
17. வீரநாராயண சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில் மகாசபைக்கு நாட்டுக்கு துரோகம் இழைத்த துரோகிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டவர்- முதலாம் ராஜராஜ சோழன்.
18. பண்டைய மற்றும் இடைக்காலத்தில் தென்னிந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்கள் வளமையுடன் செயல்பட்டு வந்ததை குறிப்பிட்டவர்கள்:
    1. சர் சார்லஸ் மெட்கேப்.
    2. சர் ஜார்ஜ் பேர்டு வுட்.
    3. எல்பின்ஸ்டோன்.
19. முகலாயப் போரரசு:
    1. பல மாகாணங்கள் - பராக்னாஸ்.
    2. மாகாணங்களில் உட்பிரிவுகள் - சர்க்கார்.
    3. சர்க்கார்கள் பல கிராமங்களைக் கொண்ட தொகுதி - பராக்காஸ்.
20. பிளாசிப்போர் நடைபெற்ற ஆண்டு -1757. (ஆங்கிலேயர் - நவாப்பிடமிருந்து நிலவரி வசூல் உரிமையை பெற்றனர்.)
21. ரிப்பன் பிரபு தீர்மானம் இயற்றப்பட்ட ஆண்டு- 1882.
22. 1926 - இல் உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்க -1417.
23. 1937 - இல் உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை - 6250.
24. 1927 - இல் நீதி கட்சி உறுப்பினர்கள் - 545 பேர்கள் மாவட்ட நிர்வாக அமைப்புகளில் நியமிக்கப்பட்டனர்.
25. இரட்டை ஆட்சி முறை மூலமாக நிர்வாகத் துறைகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.
26. மத்திய அரசு - ஒதுக்கப்பட்ட துறைகள்.
27. மாகாண அரசு - மாற்றி தரப்பட்ட துறைகள்.
28. காவல், சட்டம் ஒழுங்கு, நீதி போன்றவை - ஒதுக்கப்பட்ட துறைகள்.
29. கல்வி மற்றும் பிற துறைகள் - மாற்றி தரப்பட்ட துறைகள்.
30. தன்னிறைவு பெற்ற கிராம சுயராஜ்ஜியம் வலியுறுத்தியவர்- மகாத்மா காந்தி.
31. சுதந்திர இந்தியாவுக்கான காந்திய அரசியலமைப்பு தொடர்பான ஒரு திட்ட வரைபடத்தை தயாரித்தவர்- ஷர்மா நாராயணன்.
32. நிர்ணய சபையால் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் - 1949 நவம்பர் 26.

33. அரசு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவைகள் சுய ஆட்சியின் அலவுகளாக பணிபுரிய தேவையான அதிகாரங்களையும் திறனையும் வழங்க வேண்டும் என அரசியல் கூறுகிறும் பிரிவு - சரத்து 40.

34. சமூக மேம்பாட்டு திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு - 1952.

35. பஞ்சாயத்து அமைப்புகளின் செயல்பாடுகளை பற்றி ஆராயவும் அதனை செம்மைப்படுத்தவும் இந்திய அரசாங்கம் 1977 ஆம் ஆண்டு யார் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது - அசோக் மேத்தா.

36. 1978 ஆண்டு அசோக் மேத்தா குழு தனது பரிந்துரையை சமர்ப்பித்தது. இதன்படி எந்த மாநிலங்களின் பஞ்சாயத்து சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வந்தன-
கர்நாடகா , மகாராஷ்டிரா , ஆந்திரா , மேற்கு வங்காளம் , குஜராத்.

37. முதல் 1986 வரை உள்ளாட்சி அரசாங்கங்களை வலுப்படுத்த ஏற்படுத்தப்பட்ட குழுக்கள்:
    1. சி.எச். அனுமந்த ராவ் குழு - 1984.
    2. ஜி.வி.கே. ராவ் குழு - 1985.
    3. எல்.எம். சிங்லி குழு - 1986.

38. 73 வது , 74 -வது சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்ட ஆண்டு- 1992 .
பகுதி- IX, IX-A என்ற இரு பகுதிகளை இணைத்து, சரத்து 243 - 243 ZG .

39. மக்கள் தொகை 20 லட்சத்திற்கும் மிகாமல் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என கூறும் சட்டப்பிரிவு- 243 -B.

40. ஜவகர்லால் நேரு ராஜஸ்தான் மாநிலம் நகவுரில் பஞ்சாயத்து ராஜ் - க்கான அடிக்கல் நடப்பட்ட ஆண்டு - அக்டோபர் - 2, 1959.

41. பஞ்சாயத்து ராஜ் பற்றி குறிப்பிடும் அட்டவணை- 11 - வது அட்டவணை.

42. கிராம அளவில் - கிராம பஞ்சாயத்து.

43. மாவட்ட அளவில்- மாவட்ட பஞ்சாயத்து.

44. 20 லட்சத்துக்கு மேல் மக்கள் தொகை - இடைநிலை பஞ்சாயத்து.

45. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு - 1 / 3 பங்கு.

46. பஞ்சாயத்துகளின் பதவிக்காலம்- 5 - ஆண்டுகள்.

47. 2011 - ஆம் ஆண்டு இந்தியாவின் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ எத்தனை கிராமப் பஞ்சாயத்துகள் உள்ளன - 2,50,000.

48. பஞ்சாயத்து ராஜ் அமைப்பின் பொன்விழா ஆண்டு (50 ஆண்டு) - அக்டோபர் 2, 2009.

49. மத்திய சட்டமான பாளைய வாரியங்கள் எந்த ஆண்டு சட்டத்தின் அடிப்படையில் செயல்படுகின்றன - 1924.

50. 74 - வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் 1992-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு எந்த ஆண்டு அரசிதழில் வெளியிடப்பட்டது - ஜூன் 1993.

51. பேரூராட்சி :

1. மக்கள் தொகை 5000 க்கு மேலும் 15,000-க்கு மிகாமலும் இருக்கும்.
2. பேரூராட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை - 3 க்கு குறையாமலும் 15 - ஐ விட மிகாமலும் இருக்கும்.
3. சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநில அரசால் நியமிக்கப்படும் நகராட்சி நிர்வாகம் அனுபவம் பெற்ற ஒரு உறுப்பினர் - தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்களாக இருப்பர்.
4. பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

52. கிராமசபை கூட்டங்கள் - 4 முறை.

1. குடியரசு தினம் - ஜனவரி - 26.
2. உழைப்பாளர் தினம் - மே 1.
3. சுதந்திர தினம் - ஆகஸ்ட் - 15.
4. காந்தி ஜெயந்தி - அக்டோபர் - 2.

53. நகராட்சி - மக்கள் தொகை:

1. நகராட்சி -15,000 மேலும் 3 லட்சத்திற்கு கீழும்.
2. வகையினம் அ - 1 லட்சமும் அதற்கு மேலும் - 20 - 50 வரை உறுப்பினர்கள்.
3. வகையினம் ஆ- 50,000 முதல் 1 லட்சம் வரை - 15 - 30 வரை உறுப்பினர்கள்.
4. வகையினம் இ - 50,000 க்கு கீழ் - 10 - 15 வரை உறுப்பினர்கள்.

54. நகர மன்றத்தின் பணிகள் பொறுப்புகள் இந்திய அரசியலமைப்பில் எந்த அட்டவணையில் கூறப்பட்டுள்ளது - 12- வது அட்டவணை.

55. 1992 ஆண்டு சட்டத்தின்படி மாவட்ட திட்ட குழுவில் மொத்த உறுப்பினர்களில் எத்தனை பங்கிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும் – 4 / 5 .

56. இந்தியாவில் உள்ள நகர உள்ளாட்சி அமைப்பின் உச்ச அமைப்பு - மாநகராட்சி.

57. மாநகராட்சியின் தலைமை நிர்வாகி- மாநகராட்சி ஆணையர்.

58. எந்த சட்டத்திருத்தம் வார்டு குழுக்களை ஏற்படுத்தியது - 74 வது திருத்தம்.

59. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பில் முதல் ஐந்து இடங்கள் -

1. புனே - 5.1
2. கொல்கத்தா - 4.6
3. திருவனந்தபுரம் - 4.6
4. புவனேஸ்வர் - 4.6
5. சூரத் - 4.5

60. 74 -வது சட்டத் திருத்தத்தின் மூலம் 12 வது அட்டவணையில் மாநகராட்சி மேற்கொள்ளவேண்டிய எத்தனை பணிகளை குறிப்பிட்டுள்ளது - 18 பணிகள்.

61. மாநகராட்சியின் தலைமை நிர்வாகி – ஆணையர்.

62. மாநகராட்சி ஆணையரை நியமிக்கும் அதிகாரம் - மாநில அரசிடம் உள்ளது.

63. மாநகராட்சி ஆணையரின் பதவிக்காலம் - 3 ஆண்டுகள். மாநில அரசாங்கம் விரும்பினால் பதவிக்காலத்தை நீட்டிக்கலாம்.

64. எந்த சட்ட திருத்தத்தின் மூலம் தமிழகத்தில் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது -73வது ,74.

65. தமிழ்நாட்டில்

    1. கிராம பஞ்சாயத்து - 12,564.
    2. ஊராட்சி ஒன்றியம் - 388.
    3. மாவட்ட பஞ்சாயத்து - 31.

66. மாநகராட்சியின் தலைவர் - மேயர்.

67. தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் - 1958.

68. 73- வது திருத்தத்தின்படி தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு - 1994.

69. தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் திருத்தப்பட்ட ஆண்டு- 1996.

70. 1994 - சட்டத்தின்படி தமிழ்நாட்டில் முதலில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் மொத்தமாக எத்தனை பிரதிநிதிகள் பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்-1,17,000.

71. தமிழகத்தில் நகர உள்ளாட்சி அமைப்புகள் தேர்தல் நடைபெற்ற ஆண்டுகள் - 1996 , 2001 , 2011.

    1. மாநகராட்சிகள் - 15.
    2. நகராட்சிகள் - 148.
    3. பேரூராட்சிகள் - 561.

72. பாளைய வாரியச் சட்டம் - 2006.

73. ஒரு பேரூராட்சி 20,000 முதல் 25,000 வரையிலான மக்கள் தொகையை கொண்டு சிறிய நகரமாகும்.

74. இந்தியாவில் நகர்பாலிகா என்பது 1,00,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள நகர உள்ளாட்சியை நிர்வகிக்கும் அமைப்பு .

75. இந்தியாவில் இரட்டை ஆட்சி 1919 முதல் 1935 வரை நடைபெற்றது.

76. சென்னை மாநகராட்சி உருவாக்கப்பட்டது - 1687.

77. எதன் மூலம் இரட்டையாட்சி முதலில் ஏற்படுத்தப்பட்டது - இந்திய அரசாங்க சட்டம் 1919.

78. நகர்பாலிகா சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு - 1989.

79. 73 மற்றும் 74 வது சட்ட திருத்தத்தில் உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு எவ்வளவு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது - தொகுதியில் பெண்களின் மக்கள்தொகையின் அடிப்படையில் வழங்கப்பட்டது.

80. மாநில நிதி ஆணையத்தின் பொறுப்புகள் - வரி வருவாய் மாநில அரசுக்கும் , உள்ளாட்சி அமைப்புக்கு பகிர்தல் தொடர்பான பரிந்துரை.

81. மாவட்ட திட்ட குழு உருவாக்கப்பட்டது - 73 - வது சட்டத்திருத்தம்.

82. ஜவஹர் ரோஜ்கர் யோஜனா - வேலைவாய்ப்புக்கு உத்திரவாதமாளித்தல்.

83. எவ்வாறு டெல்லி வளர்ச்சி அமைப்பு 1957 டிசம்பர் 30ல் உருவாக்கப்பட்டது -பாராளுமன்ற சட்டத்தின் மூலம்.

84. எந்த தேர்தலில் அரசியல் கட்சிகளுக்கு பங்கு இல்லை - பஞ்சாயத்து தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் தேர்தல்.

85. உள்ளாட்சி அமைப்பின் தந்தை எனக் கருதப்படுபவர் - ரிப்பன் பிரபு.

86. மாநிலங்களில் உள்ளாட்சி தேர்தலை நடத்துவது -மாநில தேர்தல் ஆணையம்.

87. இந்திய அரசியலமைப்பின் உள்ளாட்சி அரசாங்கம் குறித்த சட்ட விதிமுறைகள் -உறுப்பு 40 , உறுப்பு 243 முதல் 243 (0) , உறுப்பு 243 (P) முதல் 243 (ZG)

88. அரசமைப்பு சட்டத்தின் படி மூன்று அடுக்குகளை கொண்ட பஞ்சாயத்துராஜ் அமைப்பினை பொருத்துக- ஊராட்சி ஒன்றியம் - மாவட்ட பஞ்சாயத்து - கிராம பஞ்சாயத்து.

# 11TH- இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் -

**PAGE NO:197 11TH STD - TOTAL QUESTION -120**

1. வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு எங்கு எப்போது வந்த ஆண்டு-1498 மே 20. கோழிக்கோடு.
2. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு -1601.
3. 1614 -சர் தாமஸ் ரோ யாரிடம் தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி பெறுவதில் வெற்றி வெற்றி பெற்று இந்தியாவின் பல பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்தார்- ஜஹாங்கீர்.
4. ஆங்கில பாராளுமன்றம், இந்தியாவை ஆளும் அதிகாரத்தை கிழக்கிந்திய கம்பெனியிடம் இருந்து ஆங்கிலேயருக்கு மாற்றி ஒரு சட்டம் இயற்றிய ஆண்டு-1858.
5. வணிக மூலதனக் காலம்-1757-1813.
6. தொழில் மூலதன காலம்-1813-1858.
7. நிதி மூலதன காலம் -19 நூற்றாண்டின் இறுதி வருடங்களில் இருந்து சுதந்திரம் அமைந்த வரையிலான காலம்.
8. 1793-ஆண்டு நிரந்தர சொத்துரிமை சட்டத்தை யார் அறிமுகப்படுத்தினார் - லார்டு காரன்வாலிஸ்.
9. நிரந்தர சொத்து உரிமை சட்டத்தை உருவாக்கிய பிறகு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி உருவாக்கிய முறை -ஜமீன்தாரி முறை.
10. ரயத்துவாரி முறை முதன்முதலில் எங்கு அறிமுகம் செய்யப்பட்டது -தமிழ்நாடு.
11. ஆசியாவின் மூன்றாவது முக்கிய பொருளாதாரம் மிகுந்த நாடு – இந்தியா.
12. இந்திய அரசு தனது முதல் தொழில் கொள்கையை அறிமுகப்படுத்தி ஆண்டு-1948 ஏப்ரல் 6.
13. 1948 தொழில் கொள்கையின் முக்கிய நோக்கம்- இந்தியாவில் கலப்பு பொருளாதாரம்.
14. 1956- ஆண்டு தொழில் துறை தீர்மான கொள்கை எந்த துறைக்கு முக்கியத்துவம் கொடுத்தது - பொதுத் துறை.
15. வேளாண் துறையில் தொழில்நுட்ப மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு திருப்புமுனையாக அமைந்தது - பசுமை புரட்சி.
16. 1960-1961 ல் ஏழு மாவட்டங்களில் வழிநடத்தும் திட்டம் என்ற புதிய தொழில்நுட்ப முறை அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம்-அதிக விளைச்சல் தரும் ரகங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டம்.
17. இரண்டாவது பசுமைப் புரட்சியின் நோக்கம், 2006-07 இல் 214 மில்லியன் டன்களாக இருந்த உணவு பயிர் உற்பத்தியை 2020 இல் எத்தனை மில்லியன் டன்கள் அளவுக்கு உயர்த்துதல் - 400.

18. புதிய வேளாண் நிதியை எந்தெந்த பெயர்களில் அழைக்கப்படுகிறது புதிய வேளாண் தொழில்நுட்பம், விதை உரங்கள் தண்ணீர் தொழில்நுட்பம், பசுமை புரட்சி.
19. வேளாண்மையின் வளர்ச்சி விகிதத்தை அடுத்த 15 ஆண்டுகளில் எத்தனை ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளது - 5 % இருந்து 6%.
20. முதல் எக்கு தொழிற்சாலை எங்கு அமைக்கப்பட்ட இடம்- ஜாரியாவில்- குல்டி.
21. வங்காள இரும்பு தொழில் கம்பெனி நிறுவப்பட்ட ஆண்டு -1870.
22. 1970 -இல் பெரிய அளவிலான இரும்பு எக்கு தொழிற்சாலை (TISCO) அமைக்கப்பட்ட இடம் - ஜாம்ஷெட்பூர்.
23. 1919 -JJSCO தொழிற்சாலை எங்கு தொடங்கப்பட்டது- பான்பூர்.
24. முதன் முதலில் நிறுவப்பட்ட பொதுத்துறை நிறுவனம் - பத்ராவதியிலுள்ள விஸ்வேஸ்வரய்யா இரும்பு எக்கு தொழில் நிறுவனம்.
25. மத்திய பிரதேசத்தில் உள்ள பிலாய் பொது நிறுவனத்திற்கு உதவி செய்த நாடு-ரஷ்யா.
26. மேற்கு வங்காளத்தில் உள்ள துர்காபூர் பொதுத்துறை நிறுவனத்திற்கு உதவி - இங்கிலாந்து.
27. ஓரிசாவில் உள்ள ரூர்கேலா பொதுத்துறை நிறுவனத்திற்கு உதவி-ஜெர்மனி.
28. இந்தியக் நிறுவனம் (SAIL) எப்போது நிறுவப்பட்ட ஆண்டு - 1974.
29. உலகளவில் இந்திய எஃகு உற்பத்தியில் எத்தனையாவது இடம்-8.
30. உலகளவில் இந்தியா கச்சா சணல் உற்பத்தியில் எத்தனையாவது இடம் –முதலிடம்.
31. உலகளவில் சணல் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா எத்தனையாவது இடம்-2.
32. 1818 முதல் நவீன துணி உற்பத்தி ஆலை அமைக்கப்பட்ட இடம் -கொல்கத்தா -கிளோஸ்டர் துறைமுகம்.
33. 1854, மும்பையின் நூற்பு மற்றும் நெசவு கம்பெனி உருவாக்கியவர் -KGN டேபேர்.
34. இந்தியாவில் வேளாண் சார்ந்த தொழில்களில் பருத்தி தொழிலுக்கு அடுத்தபடியாக உள்ள தொழில் - சக்கரை தொழில்.
35. சர்க்கரை உற்பத்தியில் இந்திய அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவு எந்த மாநிலம் பெற்றுள்ளது - மகாராஷ்டிரா.
36. உலகின் மூன்றாவது பெரிய தொழிலாக இந்தியாவில் விளங்குவது - நைட்ரஜனை பயன்படுத்தி தயாரிக்கும் உரத் தொழில்.
37. 1812 இயந்திரத்தால் செயல்படும் காகித ஆலை உருவாக்கப்பட்ட இடம் – வங்காளத்தில்- செராம்பூர்.
38. உலகிலுள்ள காகித தொழிற்சாலைகளின் பட்டியலில் இந்தியா எந்த இடத்தில் உள்ளது - 15 இடம்.
39. இயற்கையான பட்டு தயாரிப்பில் இந்தியா எந்த இடத்தில் உள்ளது -2 இடம்

40. இயற்கையான பட்டு தயாரிப்பில் முதலிடம் - சீனா.
41. இயற்கையான பட்டு தயாரிப்பில் இந்தியா உலக அளவில் எத்தனை சதவீதம் உற்பத்தியை கொண்டுள்ளது- 16%.
42. இந்தியா வணிக அடிப்படையில் உற்பத்தி செய்யும் பட்டு துணி வகைகள் - 5 . மல்பெரி பட்டு , வெப்பமண்டல டஸ்ஸர் பட்டு , ஓக் டசர் பட்டு எரி, முகா பட்டு
43. 1889 முதல் முறையாக எண்ணெய் கிணறு தோண்டப்பட்ட இடம் - அசாம் -டிக்பாய்
44. 1956 ONGC எண்ணெய் பரிவாயு கழகம் அமைக்கப்பட்ட இடம் - உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள டேராடுன்.
45. குறு உற்பத்தி நிறுவனங்களின் தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு - 25 லட்சம் வரை.
46. சிறு உற்பத்தி நிறுவனங்களின் தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு - 25 லட்சம் முதல்-5 கோடி வரை.
47. நடுத்தர உற்பத்தி நிறுவனங்களின் தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு – 5 கோடி முதல் -10 கோடி வரை.
48. குறு சேவை நிறுவனங்களின் உபகரணங்களுக்கான முதலீடு - 10 லட்சம் வரை.
49. சிறு சேவை நிறுவனங்களின் உபகரணங்களுக்கான முதலீடு 10 லட்சம் முதல்- 2 கோடி வரை.
50. நடுத்தர சேவை நிறுவனங்களின் உபகரணங்களுக்கான முதலீடு-2கோடி முதல் -5 கோடி வரை.
51. அரசாங்கத்தின் பங்குகள் பெரும் பான்மை கொண்ட வங்கிகள் -பொதுத்துறை வங்கிகள்.
52. பொதுத்துறை வங்கிகள் - SBI BANK.
53. பொதுத்துறை வங்கியான பாரத ஸ்டேட் வங்கியில் இந்திய அரசு எவ்வளவு பங்குகளை கொண்டுள்ளது -58.60%.
54. பஞ்சாப் நேஷனல் வங்கியில் இந்திய அரசாங்கத்தின் பங்கு எத்தனை சதவிகிதம் -58.87%.
55. இந்தியாவில் உள்ள மொத்த வங்கிகளில் எத்தனை சதவிகிதம் வங்கிகள் பொதுத்துறை வகைகளாக உள்ளன -72.9%.
56. இந்தியா 14 பெரிய வணிக வங்கிகளை தேசிய மயமாக்க முடிவு செய்யப்பட்ட ஆண்டு - 1969 ஜூலை 19.
57. 1980 இல் இந்திய அரசு மேலும் எத்தனை வங்கிகளை தேசியமயமாக்கியது- 6.
58. ஐந்தாண்டு திட்டங்கள் வாயிலாக பொருளாதார திட்டங்களை மேற்கொள்ளும் முறை எந்த நாட்டில் இருந்து பெறப்பட்டது - முன்னாள் சோவியத் யூனியன் (ரஷ்யா).
59. இதுவரை இந்தியா எத்தனை ஐந்தாண்டு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது- 12.
60. இந்தியாவின் இறுதியான ஐந்தாண்டு திட்டம்- 12-வது ஐந்தாண்டு திட்டம் .2012-17.
61. ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு பதிலாக அறிமுகப்படுத்திய திட்டம் - நிதி ஆயோக்.

62. முதல் ஐந்தாண்டு திட்டத்தின் காலம்- 1951-56

63. முதல் ஐந்தாண்டு திட்டம் என்பவரின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது - ஹாரேட் டாமர்.

64. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மை நோக்கம் -வேளாண்மை.

65. முதல் ஐந்தாண்டு திட்டம் வளர்ச்சி வெற்றி - 3.6%.

66. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம்- 1956-61.

67. இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் யாருடைய மாதிரி அடிப்படையாகக் கொண்டது- பிசி மகலநோபிஸ்.

68. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய நோக்கம் -தொழில் முன்னேற்றம்.

69. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வளர்ச்சியுடன் வெற்றி - 4.1%.

70. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் -1961-66.

71. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் - காட்கில் திட்டம்.

72. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மை நோக்கம் -சுதந்திரமான பொருளாதார ,சுய முன்னேற்ற நிலை ஏற்படுத்துதல்.

73. நான்காம் ஐந்தாண்டு திட்டக் காலம்- 1969-74.

74. நான்காம் ஐந்தாண்டு திட்டக் காலத்தின் 2 முக்கிய நோக்கங்கள்-நிலையான வளர்ச்சி, தற்சார்பு நிலை.

75. ஐந்தாண்டு திட்டத்தின் திட்ட விடுமுறை காலம் -1966-69.

76. ஐந்தாம் ஐந்தாண்டு திட்டத்தின் காலம் -1974-79.

77. ஐந்தாம் ஐந்தாண்டு திட்டத்தில் எதற்கு முன்னுரிமை- வேளாண் தொழில்துறை , சுரங்கத் தொழில்

78. ஐந்தாம் ஐந்தாண்டு திட்டத்திற்கான முன்வரைவு யாரால் தயாரிக்கப்பட்டது- D.P. தார்.

79. ஐந்தாம் ஐந்தாண்டு திட்டத்தின் வளர்ச்சிப் வெற்றி - 4.8%.

80. ஐந்தாம் ஐந்தாண்டு திட்டம் எந்த ஆண்டு கைவிடப்பட்டது - 1978.

81. ஐந்தாண்டு திட்டத்தில் சுழல் திட்டத்தின் காலம் - 1978-79.

82. திட்ட விடுமுறைக்கான முதன்மை காரணம்- இந்தியா பாகிஸ்தான் போர், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தோல்வி.

83. ஓராண்டு திட்டங்கள் எந்த காலகட்டத்தில் உருவாக்கப்பட்டது- திட்ட விடுமுறை காலம்.1966-69.

84. ஓராண்டு திட்டங்கள் எதற்கு மூலம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது - வேளாண்மை, வேளாண் சார் துறைகள் ,தொழில்துறை.

85. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - 1980-85.

86. ஆறாம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படை நோக்கம் - வறுமை ஒழிப்பு, தொழில்துறை சார்பு.

87. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் நோக்கம் - முதலீட்டு திட்டம்.

88. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றி வளர்ச்சி வீதம் - 5.7%.

89. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - 1985-90.

90. ஏழாம் ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கம் - தன்னிறைவு பொருளாதாரத்தை உருவாக்குதல் மற்றும் வேலைவாய்ப்பு வழங்குதல்.

91. ஏழாம் ஐந்தாண்டு திட்டத்ததின் வளர்ச்சி வீதம் - 6%.

92. ஆண்டு திட்டங்கள் என அழைக்கப்படும் இரு ஓராண்டு திட்டங்கள் -1990-91,1991-92.

93. எட்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் காலம்- 1992-97.

94. எட்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் எதற்கு முக்கியத்துவம் - வேலைவாய்ப்பு, கல்வி, சமூகநலம், மனிதவள மேம்பாடு நடவடிக்கை.

95. எட்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் வளர்ச்சி -6.8%.

96. முதன்முறையாக பொது துறைக்கும் தனியார் துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட ஐந்தாண்டு திட்டம்- ஏழாம் ஐந்தாண்டு திட்டம்.

97. ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டத்தின் காலம் - 1997-2002.

98. ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டம் முக்கியத்துவம் - சமூக நீதியுடன் கூடிய சமமான வளர்ச்சி.

99. பத்தாம் ஐந்தாண்டு திட்டத்தின் காலம் - 2002-2007.

100. இந்தியாவிற்கான புதிய பொருளாதார கொள்கை எந்த ஐந்தாண்டு திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது - எட்டாம் ஐந்தாண்டு திட்டம்.

101. பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் - 2007-2012.

102. பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய நோக்கம் - விரைவான மற்றும் அதிகமான உள்ளடக்கிய வளர்ச்சி.

103. பனிரெண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் காலம் - 2012-17.

104. பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய நோக்கம் - விரைவான அதிகமான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி.

105. பனிரெண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் வளர்ச்சி இலக்கு - 8% .

106. எந்த ஐந்தாண்டு திட்டத்தில் அடுத்த 10 ஆண்டுகளில் தலா வருவாயை இரு மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது - பத்தாம் ஐந்தாண்டு திட்டம்.

107. நிதி ஆயோக் எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது -2015 ஜனவரி 1.

108. அரசாங்கத்திற்கு மக்களின் உண்மையான வாழ்க்கை தரத்தை கண்டறிய பயன்படுகிறது- மனித மேம்பாட்டு குறியீடு (HDI).

109. 1990 மனித மேம்பாட்டு குறியீடு யாரால் எப்போது மேம்படுத்தப்பட்டது - மஹபூப் உல் ஹக் PAK, ,அமர்த்தியா குமார் சென் IND.

110. பரிமாண குறியீடு என்பது -உண்மை மதிப்பு - குறைந்தபட்ச மதிப்பு / அதிகபட்ச மதிப்பு - குறைந்தபட்ச மதிப்பு.

111. மனித மேம்பாட்டு குறியீடுகான கணக்கீடு ஆனது மனித வளர்ச்சிக்கான முக்கிய அம்சங்களை புறக்கணித்துள்ளது என்று கூறியவர் - பிஸ்வஜித் குஹா.

112. ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்டத்தின் மனித மேம்பாட்டு அறிக்கையினை பெறுத்துள்ளது - HDI1.

113. மனித மேம்பாட்டுக் குறியீட்டில் முதல் மூன்று நாடுகள் - நார்வே ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து.

114. வாழ்க்கை குறியீட்டு எண்ணை ( PQLI) உருவாக்கியவர் - டி.மோரிஸ்.

115. உடல் மற்றும் பணம் சார்ந்த மேம்பாட்டை குறிப்பிடுவது - HDI.

116. உடல்சார்ந்த மேம்பாட்ட மட்டும் குறிப்பிடுவது- PQLI.

117. இந்திய தொழில்கள் எத்தனை வகைப்படும்-4

118. முதன் முதலில் நிறுவப்பட்ட பொதுத்துறை நிறுவனம் எது-விஸ்வேஸ்ரய்யா இரும்பு

119. சணல் தொழிற்சாலை முதல்முறையாக உருவாக்கப்பட்ட இடம்- ரேஷ்ரா

120. இந்தியா எஃகு உற்பத்தியில் எத்தனையாவது இடம்-8 இடம்.

# 11TH- இந்திய பொருளாதாரம்

**PAGE NO : 168** **11TH STD -** **TOTAL QUESTION - 128**

1. இலக்கமுறை(digital) பொருளாதாரத்தில் இந்தியா ஒரு உலகளாவிய போட்டியாளராகும் என்று கூறியவர் - சுந்தர் பிச்சை, CEO கூகுல்.
2. ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பை குறிப்பது - மொத்த உள்நாட்டு உற்பத்தி GDP.
3. ஒரு நாட்டின் மக்களின் வாழ்க்கை தரத்தின் அளவீடுகள் :
    1. மனிதவள மேம்பாட்டு குறியீடு - HDI.
    2. வாழ்க்கை தரக்குறியீடு - PQLI.
    3. மொத்த நாட்டு மகிழ்ச்சி குறியீடு - GNHI.
4. மக்கள் தொகை அதிகரிக்க தொடங்கியதால் பெரும் பிரிவினை ஆண்டு என அழைக்கப்படும் ஆண்டு - 1921.
5. மொத்த நாட்டு மகிழ்ச்சி என்ற தொடர் உருவாக்கப்பட்ட ஆண்டு -1972.
6. மொத்த நாட்டு மகிழ்ச்சி என்ற தொடரை உருவாக்கியவர் -ஜிக்மே - சிங்யே - வாங்சுக் .
7. பூட்டான் நாட்டின் நான்காவது மன்னர்- ஜிக்மே - சிங்யே - வாங்சுக்.
8. நிலைத்த முன்னேற்றம் ,சுற்றுச் சூழல் பாதுகாப்பு, கலாச்சார மேம்பாடு ,சிறந்த நிர்வாகம், போன்றவை உள்ளடக்கியது- மொத்த நாட்டு மகிழ்ச்சி.
9. தொழில்மயமான வளங்களை முழுமையாகப் பயன்படுத்தும் நாடுகள்- வளர்ந்த பொருளாதார நாடுகள்.
10. வளர்ந்த பொருளாதார நாடுகளுக்கு எ.கா:
    1. அமெரிக்க ஐக்கிய நாடுகள்
    2. கனடா
    3. இங்கிலாந்து
    4. பிரான்ஸ்
11. முன்னேற்றம் அடையாத , வளர்ச்சி குன்றிய, பின்தங்கிய ,மூன்றாம் உலக நாடுகள் :
    1. ஆப்பிரிக்கா.
    2. பங்காளதேஷ்.
    3. மியான்மர்.
    4. பாகிஸ்தான்.
    5. இந்தோனேசியா.
12. உலகின் வலிமையான மற்றும் பெரிய பொருளாதாரங்களின் வரிசையில் இந்தியா எத்தனையாவது இடம் - 7 . இடம்
13. பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது - கலப்பு பொருளாதாரம்.

14. இந்தியாவில் எத்தனை சதவீத மக்கள் தங்கள் வாழ்க்கை ஆதாரமாக வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்- 60%.
15. இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வேளாண்துறையில் இருந்து எத்தனை சதவீதம் கிடைக்கிறது - 17%.
16. உலக பொருளாதாரத்தில் இந்தியா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) எத்தனையாவது இடம் -7.
17. உலக பொருளாதாரத்தில் இந்தியா வாங்கும் சக்தியில் (PPP) எத்தனையாவது இடம் - 3.
18. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கும் துறை -பணிகள் துறை.
19. 2014 - 2015 உள்நாட்டு உற்பத்தி எத்தனை சதவீதம் - 7.6%.
20. 2016 - 2017 உள்நாட்டு உற்பத்தி எத்தனை சதவீதம் - 7.1%.
21. மக்கள் தொகை அதிகரிப்பு ஒவ்வொரு 1000 பேருக்கும் எத்தனை சதவீதத்தில் அதிகரிக்கிறது- 1.7 %
22. இந்தியாவில் ஆண்டுதோறும் ஏற்படும் மக்கள் தொகை பெருக்கம் எந்த நாட்டின் மொத்த மக்கள் தொகைக்கு சமமாக உள்ளது -ஆஸ்திரேலியா.
23. உலக நிலப்பரப்பில் இந்தியா எத்தனை சதவீதம் - 2. 4%.
24. உலக வருவாயில் இந்தியா எத்தனை சதவீதம் - 1.2%.
25. உலக மக்கள் தொகையில் இந்தியா எத்தனை சதவீதம் - 17.5%.
26. உலக மக்கள் தொகையில் எத்தனை பேரில் ஒருவர் இந்தியர் – 6 பேர்.
27. கர்நாடகத்தின் முக்கிய தங்க சுரங்க பகுதி :
    1. கோலார் தங்க வயல்.
    2. ஹட்டி தங்க வயல்.
28. இந்திய மக்கள் தொகை 100 கோடியை தாண்டிய ஆண்டு - 2001.
29. மக்கள் தொகை 1.33% லிருந்து 1.25% ஆக குறைந்தது இது "சிறு பிளவு ஆண்டு " என அழைக்கப்படுகிறது - 1951.
30. இந்திய மக்கள்தொகை உயர்வு வீதம் 1.96% அதாவது 2% இது மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு என அழைக்கப்படுகிறது -1961.
31. 1000- மக்கள் தொகைக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை குறிப்பது – குழந்தை பிறப்பு விகிதம்.
32. 1000 மக்கள் தொகைக்கு இறப்பவர்களின் எண்ணிக்கையை குறிப்பது - இறப்பு விகிதம்.
    1. 1951 - பிறப்பு வீதம் - 39.9 - இறப்பு வீதம்- 27.4.
    2. 2001- பிறப்பு வீதம் - 25.4 - இறப்பு வீதம் 8.4.
    3. 2011- பிறப்பு வீதம் - 21.8 - இறப்பு வீதம் 7.11.
33. மிகக் குறைந்த பிறப்பு விகிதம் உள்ள மாநிலம் - கேரளா - 14.7%.
34. அதிக அளவு பிறப்பு விகிதம் உள்ள மாநிலம் - உத்தர பிரதேசம் - 29.5%.
35. மிகக் குறைந்த இறப்பு விகிதம் உள்ள மாநிலம் - மேற்கு வங்காளம் - 6.3%.

36. அதிக அளவு இறப்பு விகிதம் உள்ள மாநிலம் - ஓரிசா - 9.2%.

37. 2001 - 2011 மாநிலங்களுக்கு இடையே 10 ஆண்டுகளில் அதிக மக்கள்தொகை பெருக்கத்தை கொண்டுள்ள மாநிலம் - பீகார்.

38. 2001 - 2011 மாநிலங்களுக்கு இடையே 10 ஆண்டுகளில் குறைந்த பிறப்பு விகிதத்தையும் கொண்டுள்ள மாநிலம் - கேரளா.

39. (BIMARU) பிமாரு என அழைக்கப்படும் மாநிலங்கள்:

1. பீகார் (BI).
2. மத்திய பிரதேசம் (MA).
3. ராஜஸ்தான் (R).
4. உத்தரப் பிரதேசம் (U).

40. ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கு மக்களின் எண்ணிக்கையைக் குறிப்பது- மக்கள் தொகை அடர்த்தி.

41. மக்கள் தொகை அடர்த்தி - $\frac{\text{மொத்த மக்கள்தொகை}}{\text{அப்பகுதியின் நிலப்பரப்பு}}$

1. 1951- மக்கள் தொகை அடர்த்தி - 117.
2. 2001- மக்கள் தொகை அடர்த்தி - 325.
3. 2011- மக்கள் தொகை அடர்த்தி - 382.

42. இந்தியாவின் சராசரி மக்கள் தொகை அடர்த்தியை விட மிகுந்து காணப்படும் மாநிலங்கள் - கேரளா, மேற்கு வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம்.

43. மேற்கு வங்காளம் மக்கள் தொகை அடர்த்தி - 880 .

44. பீகார் மக்கள் தொகை அடர்த்தி - 1102 .

45. மிகக் குறைவான மக்கள் தொகை அடர்த்தி உடைய மாநிலம்-அருணாச்சல பிரதேசம். சதுர கிலோ மீட்டருக்கு 17 நபர்கள்.

46. 1000 ஆண்களுக்கு பெண்களின் விகிதத்தை குறிப்பது - பாலின விகிதம்.

47. பாலின விகிதம் - 1000 ஆண்களுக்கு உள்ள பெண்கள்:

1. 1951 - பாலின விகிதம் - 946.
2. 2001 - பாலின விகிதம் - 933.
3. 2011 - பாலின விகிதம் - 940.

48. 2011- குறைவான பாலின விகிதம் உடைய மாநிலம் - ஹரியானா - 877.

49. 2011- அதிக பாலின விகிதம் உடைய மாநிலம் - கேரளா .1084

50. 1901-1911ஆண்டு காலங்களில் வாழ்நாள் எதிர்பார்ப்பு விகிதம் - 23.

51. வாழ்நாள் எதிர்பார்ப்பு விகிதம்:

1. 1951 - வாழ்நாள் எதிர்பார்ப்பு விகிதம் - 32.1 ஆண்கள்- 32.5 ,பெண்கள்- 31.7.
2. 1991 - வாழ்நாள் எதிர்பார்ப்பு விகிதம் - 58.7. ஆண்கள் - 58.6,பெண்கள்- 59.0.
3. 2001 - வாழ்நாள் எதிர்பார்ப்பு விகிதம் - 62.5. ஆண்கள் - 61.6,பெண்கள்- 63.3.
4. 2011 - வாழ்நாள் எதிர்பார்ப்பு விகிதம் - 63.5. ஆண்கள்- 62.6 ,பெண்கள்- 64.2.

52. இந்திய கல்வி முறை, அடிப்படையில் எத்தனை நிலைகளை கொண்டுள்ளது - 6.

1. குழந்தைக் கல்வி
2. தொடக்கக்கல்வி
3. இடைநிலைக் கல்வி
4. மேல்நிலைக்கல்வி
5. இளநிலைப் பட்டம்
6. முதுநிலைப் பட்டம்

53. எழுத்தறிவு வீகிதம் : 1951.

1. 4 -ஆண்களில்- ஒருவர்.
2. 12- பெண்களில்- ஒருவர்.
3. சராசரியாக 6 -பேருக்கு - ஒருவர்.

54. எழுத்தறிவு விகிதம்:

1. 1951 ஆண்டு - சராசரி -18.3 - ஆண்கள் - 27.2. - பெண்கள் - 8.9.
2. 2001 -ஆண்டு - சராசரி - 64.8 -ஆண்கள் - 75.3. -பெண்கள் - 53.7.
3. 2011 -ஆண்டு - சராசரி - 74.04 -ஆண்கள் - 82.1. -பெண்கள் -65.5.

55. எழுத்தறிவு விகிதம்:

1. கேரளா - 94 .- அதிகம்.
2. மிசோரம் - 91.3%.
3. கோவா - 88.7% .
4. தமிழ்நாடு - 80.1%.
5. பீகார் - 61.8% - குறைவு.

56. உலகின் வலிமையான (ம) பொரிய பொருளாதாரங்களின் வரிசையில் இந்திய எந்த இடத்தில் உள்ளது – 7.

57. மக்கள்தொகை அதிகரிக்க துவங்கியதால் எந்த ஆண்டை பெரும் பிரிவினை ஆண்டு என்று கூறுகிறோம் -1921.

58. இந்தியாவில் குறைந்த நிலவுடமை மற்றும் தீர்வுகல் என்ற கட்டுரையை எழுதியவர்- அம்பேத்கர் .

59. யாருடைய காலத்தில் இந்திய தொழில் நுட்ப கழகம் மற்றும் ஆராய்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன - ஜவஹர்லால் நேரு.

60. 1976 - வரை மாநில அரசின் பொறுப்பில் இருந்த கல்வி அதன் பிறகு மத்திய மாநில அரசுகளின் கூட்டுப்பொறுப்பில் வந்தது.

61. வரவு செலவு திட்டத்தில் 3% - (GRD) நிதி கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டு பெருமளவு நிதி பள்ளிக் கல்விக்கே செலவிடப்படுகிறது.

62. இந்திய ரயில்வே முதல் wi-fi வசதியை எங்கு துவங்கியது - பெங்களூரு.

63. தேசிய துறைமுக வாரியம் உருவாக்கப்பட்ட ஆண்டு - 1950.

64. நிலக்கரி உற்பத்தியில் எந்த இடத்தில் இந்தியா உள்ளது - 3 .

65. 2011 - ன் படி அதிக எழுத்திறவு விகிதம் பெற்றுள்ள மாநிலம் - கேரளா 92%.

66. 2011 - ன் படி குறைவான எழுத்தறிவு விகிதம் பெற்றுள்ள மாநிலம் - பிகார் 53%.

67. இவற்றுள் மக்கள் தொகை அடர்த்தி மிக குறைவாக உள்ள மாநிலம் -அருணாச்சலப் பிரதேசம்.

68. திட்டமிடுதலை நம் நாட்டில அறிமுகப்படுத்தியவர் - ஜவஹர்லால் நேரு.

69. பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமரத்தியா சென் பெற்ற ஆண்டு – 1998.

70. நாட்டுவரமானத்தை மொத்த மக்கள் தொகையில் வகுக்கக் கிடைப்பது - தலா வருமானம்.

71. ஜனநாயக சமதர்மத்தைக் கொண்டுவந்தவர் - ஜவஹர்லால் நேரு .

72. மூலதன செறிவு நுட்ப முறையில் உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று தொழில் நுட்ப தெரிவு என்ற புத்தகத்தில் அமர்த்தியாகுமார்சென் என்பவர் குறிப்பிடுகிறார்.

73. ஜே.சி.குமரப்பா எழுதிய புத்தகம்:

1. நிலைத்த பொருளாதாரம்.
2. இயேசுவின் வழிமுறைகள்.
3. கிறிஸ்துவம் அதன் பொருளாதரமும்.

74. இந்திய விமான போக்குவரத்து நிறுவனம் ஏர் இந்தியா (ம) இந்தியன் ஏர்லைன்ஸ் ஆகியவை ஒன்றாக இணைந்த ஆண்டு - 27.8.2007.

75. பொது (ம) தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது- கலப்புப் பொருளாதாரம்.

76. மக்கள் தொகையின் இயல்புகளைப் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு - மக்கள் தொகையியல்.

77. 2011 - மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இளைஞர்களின் மக்கட்தொகை அளவில் உள்ளதால் இது மக்கள் தொகை மாறுதலைக் குறிக்கிறது.

78. B .R .அம்பேத்கார் இந்தியப் பொருளாதாரப் பிரச்சனைகளை எதன் அடிப்படையில் ஆராய்கிறார் - இந்தியப் ரூபாயின் சிக்கல்கள்.

79. V.K.R.V இராவ் யாருடைய மாணவராக இருந்தார் - ஜே.எம்.கீன்ஸ்.

80. பெரும் பிரிவினை ஆண்டு-1921.

81. சிறு பிளவு ஆண்டு-1951.

82. மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு-1961.

83. இந்தியாவின் இருப்பு பாதையின் நீளம் - 63000 கி. மீ.

84. மின் மயமாக்கப்பட்ட பாதையின் நீளம் - 13000 கி. மீ.

85. புதுப்பிக்க இயலாத மின் ஆற்றல் மூலம் - நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு.

86. புதுப்பிக்க கூடிய மின் சக்தி மூல வளங்கள் - சூரியக் சக்தி, காற்று சக்தி, அலைகள் சக்தி, புவி வெப்ப சக்தி, உயிரி எரிவாயு சக்தி.

87. புதுப்பிக்கக்கூடிய வளங்கள் :

1. காடுகள்
2. வனவிலங்குகள்
3. காற்று
4. கடல் வளங்கள்
5. நீர்மின்சக்தி
6. உயிரினத் தொகுதி
7. காற்றாலை மின் உற்பத்தி

88. புதுப்பிக்க இயலாத வளங்கள் :

1. படிம எரிபொருட்கள்
2. நிலக்கரி
3. பெட்ரோலியம்
4. கனிம வளங்கள்

89. இந்தியா 32.8 லட்சம் சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்புடன் உலகின் எத்தனை யாவது இடத்தை பெற்றுள்ளது- 7. (உலக நிலப்பரப்பில் 2.42%)

90. 2007 - ஆண்டு கணக்கீட்டின்படி இந்தியாவின் காடுகள் எத்தனை மில்லியன் ஹெக்டேர் - 69.09 மில்லியன் ஹெக்டேர்.

91. இந்தியாவின் காடுகள் மொத்த நிலப்பரப்பில் எத்தனை சதவீதம் - 21.02%.

92. காடுகள் பரப்பளவு :

1. மொத்த காடுகள் - 69.09. மில்லியன் ஹெக்டேர்.
2. அடர்ந்த காடுகள் - 8.35. மில்லியன் ஹெக்டேர்.
3. ஓரளவு அடர்ந்த காடுகள் - 31.90 .மில்லியன் ஹெக்டேர்.
4. பரந்தவெளி காடுகள்- 28.84. மில்லியன் ஹெக்டேர்.

93. நிலக்கரி உற்பத்தியில் இந்தியா எந்த இடத்தில் உள்ளது - 3 .

94. எந்த மாநில நிலக்கரி வயல்களில் இருந்து அதிக அளவு நிலக்கரி கிடைக்கிறது:

1. மேற்கு வங்காளம்
2. ஜார்கண்ட்

95. இந்தியாவிலுள்ள இருப்பு:

1. ஹேமடைட்- 14,630 மில்லியன் டன்
2. மேக்னடைட் -10,619மில்லியன் டன்

96. அலுமினியம் தயாரிக்க பயன்படும் முக்கிய தாது - பாக்சைட்.

97. 60% மைக்கா உற்பத்தியுடன் முதலிடம் வகிக்கும் நாடு - இந்தியா.

98. சுத்திகரிக்கப்படாத எண்ணெய் எடுக்கப்படும் இடங்கள்:

1. டிக்பாய் , பாடர்பூர்
2. நாகர்காட்டிகா , காசிம்பூர்
3. பள்ளியரியா , ருத்ராபூர்
4. சிவசாகர் , மார்ன் -அசாமின்
5. காம்பே வளைகுடா
6. அங்கலேஸ்வர்
7. காலோல் -குஜராத்தின்

99. தங்கம் கிடைக்கக்கூடிய பகுதி:

1. கோலார் மாவட்டத்தில் உள்ள - கோலார் தங்க வயல் - கர்நாடகா.
2. ரெய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள- ஹட்டி தங்க வயல் - கர்நாடகா.
3. அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள - ராம்கிரி தங்கவயல் - ஆந்திரா.

100. காந்திய பொருளாதார சிந்தனைகளைத் தொடர்ந்து வலியுறுத்தியவர்-J.C. குமரப்பா.

101. ஜனநாயக சமதர்மத்தை கொண்டு வந்தவர்-ஜவகர்லால் நேரு.

102. பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை அமர்த்தியா சென் பெற்ற ஆண்டு -1998.

103. அம்பேத்கர் முனைவர் பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரை- இந்தியாவின் தேசிய பங்கீடு பற்றிய வரலாறு மற்றும் பகுப்பாய்வு ஆய்வறிக்கை.

104. கிராம பொருளாதார முன்னேற்ற கொள்கைகளில் முன்னோடி- ஜோசப் செல்லத்துரை குமரப்பா.

105. ஜோசப் செல்லத்துரை குமரப்பா - பிறப்பு - (தஞ்சாவூர் - 1892 ஜனவரி 4).

106. குமரப்பாவை" பச்சை காந்தி "என்று அழைத்தவர் -இராமச்சந்திர குஹா.

107. P.R.பிரமானந்தாவின் கூற்றுப்படி, சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களாக யாரை குறிப்பிட்டார் -

1. D.R. காட்கில் 2. C.N, வக்கில் 3. V.K.R.V.ராவ்

108. 1921 ல் அம்பேத்கர் M.Sc பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரை-பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதி பரவலாக்கள்.

109. காந்தியப் பொருளாதாரம் என்ற கருத்தை உருவாக்கியவர்- ஜோசப் செல்லத்துரை குமரப்பா.

110. H.W. சிங்கர், J.M.கீன்சின் மாணவர்களில் சிறந்தவராக யார் கருதுகிறார்- V.K.R.V. ராவ்.

111. இந்திய பொருளியல் வாழ்வில் என்ன தவறு - என்ற புத்தகத்தின் ஆசிரியர் 1938 -V.K.R.V. ராவ்.

112. வறுமை மற்றும் பஞ்சம்: உரிமம் மற்றும் இறப்பு பற்றிய ஒரு கட்டுரையின் ஆசிரியர் -1981- அமர்த்தியா சென்.

113. 1923 ல் எந்த ஆய்வறிக்கையை ஏற்று லண்டன் பொருளாதார பள்ளி அம்பேத்கருக்கு D.SC பட்டம் வழங்கியது-ரூபாயின் பிரச்சனைகள்.

114. இந்திய ரிசர்வ் வங்கியானது அம்பேத்கர் எழுதிய எந்த நூலின் வழிகாட்டுதலின்படி கருத்தாக்கம் பெற்றது -ரூபாயின் பிரச்சனைகள் அதன் தோற்றமும் அதன் தீர்வும்.

115. முழு வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும்" என்ற ஆய்வுக் கட்டுரையின் ஆசிரியர் - V.K.R.V. ராவ்.

116. அனைத்திந்திய கிராம தொழில் கழகத்தை" எந்த ஆண்டு குமரப்பா தோற்றுவித்தார் -1935.

117. குமரப்பா வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது எழுதிய புத்தகங்கள்:

1. நிலைத்த பொருளாதாரம், இயேசுவின் வழிமுறைகள் – 1945.
2. கிறிஸ்தவம் : அதன் பொருளாதாரமும் வாழ்க்கைமுறையும் – 1945.

118. யங் இந்தியா பத்திரிகையில் பணியாற்றிய கொண்டு அகமதாபாத்தில் உள்ள குஜராத் வித்யா பீடத்தில் பொருளாதார பேராசிரியராக பணியாற்றி வந்தவர் - ஜோசப் செல்லத்துரை குமரப்பா.

119. இந்தியாவின் சுற்றுச்சூழல் சூழலியல் குறித்து அடித்தளமிட்டவர்-ஜோசப் செல்லத்துரை குமரப்பா.

120. உலக வறுமையை ஒழிப்பதில் சிறந்த கொள்கைகளை வகுத்து தந்தவர் - V.K.R.V. ராவ்.

121. சீனா, கிழக்கு ஐரோப்பா ,ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அரசு முறை பயணம் சென்று அங்கிருந்து கிராம வளர்ச்சித் திட்டங்களை பார்வையிட்டு இந்தியாவில் அமல்படுத்த முனைந்தவர்-ஜோசப் செல்லத்துரை குமரப்பா.

122. ராவ் அவர்களின் எந்த புத்தகம் பேரியல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கியது - முன்னேற்றம் அடையாத நாடுகளில் முதலீடு, வருமானம் மற்றும் பெருக்கி ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு (1952).

123. உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று எந்த புத்தகத்தில் அமர்த்தியாசென் குறிப்பிட்டுள்ளார் -தொழில் நுட்பத் தெரிவு.

124. சிந்தனையாளர், ஆசிரியர், பொருளாதார ஆலோசகர் மற்றும் நேரடி கொள்கை வடிவமைப்பாளர் என்ற பார்வையில் J.M. கீன்சின் அடிகளைப் பின்பற்றியவர்- V.K.R.V. ராவ்.

125. ராவ் தேசிய அளவிலான 3 ஆராய்ச்சி நிறுவனங்களை உருவாக்கினார்:

1. டெல்லி பொருளாதாரப் பள்ளி -டெல்லி.
2. பொருளாதார வளர்ச்சி கழகம் -டெல்லி.
3. சமூக பொருளாதார மாற்றத்திற்கான கழகம் (பெங்களூர்)

126. தேசிய வளர்ச்சிக் கழகத்தை அறிமுகப்படுத்தியவர் -ஜவகர்லால் நேரு.

127. இந்தக் கொள்கையின் அடிப்படையில் காந்தியப் பொருளாதாரம் இயங்குகிறது -ஒழுக்கநெறி அடிப்படை.

128. B.R. அம்பேத்கர் இந்திய பொருளாதார பிரச்சினைகளை இதன் அடிப்படையில் ஆராய்கிறார் - இந்திய ரூபாயின் சிக்கல்கள்.

# 11TH- இந்தியாவின் மேம்பாடு அனுபவங்கள் -

**PAGE NO:197 11TH STD - TOTAL QUESTION -82**

1. **LPG** என்பதன் பொருள்- தாராளமயம்,தனியார்மயம் ,உலகமயமாதல்.
2. புதிய பொருளாதார கொள்கையின் மூன்று முக்கிய தூண்கள் :
    1. தாராளமயம்
    2. தனியார்மயம்
    3. உலகமயமாதல்.
3. பொதுத்துறை நிர்வாகம் மற்றும் உரிமையை தனியாருக்கு மாற்றுவது - தனியார்மயமாதல்.
4. உள்நாட்டு பொருளாதாரத்தையும் ஏனைய உலக பொருளாதாரத்தையும் இணைப்பது - உலகமயமாதல்.
5. உலகமயமாக்கலின் நேர்மறை விளைவுகள் .
    1. சந்தை விரிவாக்கம்.
    2. உள்கட்டமைப்பு வளர்ச்சி.
    3. உயர்ந்த வாழ்க்கைத் தரம்.
    4. பன்னாட்டு ஒத்துழைப்பை.
6. உலகமயமாக்கலின் எதிர்மறை விளைவுகள்.
    1. நெருக்கடி போட்டி.
    2. முற்றுரிமை அதிகரிப்பு.
7. பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது - முதலீட்டு விலக்கல்.
8. தாராளமயமாக்கலின் நேர்மறை விளைவுகள்:
    1. வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பு.
    2. உற்பத்தி அதிகரிப்பு.
    3. தொழில்நுட்ப வளர்ச்சி மேம்பாடு.
    4. **GDP** வளர்ச்சி வீதம் அதிகரிப்பு.
9. புதிய தொழில் கொள்கையை அறிவித்த ஆண்டு - 1991 ஜூலை 24.
10. **GDP** வளர்ச்சி – இந்தியா:
    1. 2014 - 5.6%
    2. 2015 - 6.4%
    3. 2016 -7.0%
    4. 2017 - 7.1 %

11. வெளிநாட்டு நேரடி முதலீடு – **FDI.**
12. வெளிநாட்டு தொகுப்பு முதலீடு – **FPI.**
13. பன்னாட்டு பண நிதியம் – **IMF.**
14. உள்நாட்டு மொத்த உற்பத்தி – **GDP.**
15. வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு வாரியம் – **FIPB.**
16. இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தி- **2251** பில்லியன் அமெரிக்க டாலர்.
17. உலக மொத்த **GDP**யில் மதிப்பில் இந்தியாவின் பங்கு - **2.9%.**
18. இந்தியா உலக மக்கள் தொகையில் - **17.5%.**
19. இந்தியா உலக நிலப்பரப்பில் - **2.4%.**
20. தொழிலுக்கு உரிமம் பெறுவதிலிருந்து இருந்து விலக்கு அளித்தல் மற்றும் சிவப்பு நாடா முறையை முடிவுக்கு கொண்டு வருதல் ஆகியவை எந்த ஆண்டு தொழில் கொள்கையின் முக்கிய அம்சம்-**1991.**
21. போட்டி குழு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு - **2010.**
22. எந்த ஆண்டு புதிய தொழில் கொள்கை முற்றுரிமை வாணிப கட்டுப்பாட்டு சட்டத்தை அகற்றியது - **1991 .**
23. தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நேரடி வெளிநாட்டு முதலீடு செய்ய பன்னாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளவும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கவும் அமைக்கப்பட்டது - முதலீட்டு ஊக்குவிப்பு வாரியம்.
24. பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு – **2016** பிப்ரவரி **18.**
25. பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் படி சந்தா தொகை:
    1. விவசாயிகள் கோடைகால பயிர்களுக்கு - **2%** சதவிகிதம்.
    2. குறுவை சாகுபடி பயிர்களுக்கு - **1.5%** சதவிகிதம் .
26. பிரதான் மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் படி தோட்டப்பயிர்கள் மற்றும் பணப் பயிர்களுக்கு வருடாந்திர சந்தாசத விகிதமாக இருக்கும் -**5%.**
27. காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா எத்தனாவது மிகப்பெரிய உற்பத்தியாளர்- **2.**
28. **1955** ஆண்டு அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின் படி ஏற்படுத்தப்பட்டத - குளிர்பதன கிடங்கு ஆணை-**1964.**
29. கடன் தேவைப்படுகிற ஒரு விவசாயின் தகுதிக்கு ஏற்ப கடன் மிக எளிதாக மற்றும் சரியான நேரத்தில் வழங்குவதற்கான ஒரு திட்டம் - உழவர் கடன் அட்டை திட்டம். (கிசன் கிரெடிட் கார்டு).
30. உழவர் கடன் அட்டை திட்டம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு - **1998.**
31. உழவர் கடன் அட்டை திட்டம் யாரால் ஏற்படுத்தப்பட்டது - இந்திய மைய வங்கி மற்றும் விவசாயம் கிராமப்புற மேம்பாட்டு தேசிய வங்கி. **NABARD BANK.**

32. வேளாண்மை அல்லது தோட்டக்கலை அல்லது கால்நடை பொருட்களை வர்த்தகம் செய்வதற்கு மாநில அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டபூர்வமான அமைப்பு- விவசாயப் பொருட்களுக்கான அங்காடி குழு.

33. விவசாயிகளுக்கான மிகப்பெரிய உள்ளீடு -விதைகள்.

34. எந்த ஆண்டு உருவாக்கப்பட்ட வர்த்தக கொள்கையின்படி அனைத்து இடைவினை மற்றும் மூலதன மூலதன பண்டங்களுக்கான இறக்குமதி சுதந்திரம் ஆக்கப்பட்டது - ஏப்ரல்-1,1992.

35. இறக்குமதிக்கான தீர்வுகளை பெருமளவு குறைக்க பரிந்துரை செய்துள்ள குழு - செல்லையா குழு.

36. இந்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம் 2015-2020 வரையிலான காலத்திற்கான புதிய அயல்நாட்டு வாணிபம் கொள்கையை அறிவித்த ஆண்டு- 2015 ஏப்ரல்-1.

37. ஏற்றுமதி இறக்குமதி கொள்கையின்படி ஏற்றுமதி உதவிகளை 25 சதவீத அளவை குறைக்கவும் இந்திய பொருட்களை ஊக்குவிக்கவும் உருவாக்கப்பட்ட கருத்து- இந்திய தயாரிப்பு.

38. பாதுகாப்பு, ராணுவ கிடங்கு, விண்வெளி மற்றும் அணுசக்தி போன்றவை தொடர்பான ஏற்றுமதி கோரிக்கைகளுக்கு கால அளவு - 24 மாதங்கள்.

39. உலக வர்த்தகத்தில் 3% ஆக இருக்கிற இந்தியாவின் பங்கை எந்த ஆண்டுக்குள் ஏற்றுமதி இறக்குமதி கொள்கை இருமடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கபடுகிறது- 2020.

40. சிறப்பு பொருளாதார மண்டல கொள்கை உருவாக்கப்பட்ட ஆண்டு - 2000.

41. 2005 ஆண்டின் சிறப்பு பொருளாதார மண்டல கொள்கையின்படி எத்தனை சிறப்பு பொருளாதார மண்டலாங்கள் அறிவிக்கப்பட்டன- 400.

42. 1990 துவக்க காலத்தில் எத்தனை சிறப்பு பொருளாதார மண்டலங்கள் துவங்கப்பட்டன-7.

43. ஆசியாவின் முதல் ஏற்றுமதி செயலாக்க மண்டலத்தை இந்திய அரசு எந்த ஆண்டு எந்த இடத்தில் துவக்கியது- 1965, காண்ட்லா.

44. ஏற்றுமதி செயலாக்க மண்டலம் மாதிரிகளின் பயன்பாட் உணர்ந்த நாடுகளில் முதன்மையான நாடு - இந்தியா.

45. எந்த வரி என்பது நுகர்வோர் நகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும் -GST. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி.

46. பலமுனை வரி- மதிப்பு கூட்டப்பட்ட வரி VAT.

47. பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி நடைமுறைக்கு வந்த- ஆண்டு 2017.

48. பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி நாடாளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட ஆண்டு - மார்ச்- 29, 2017.

49. எந்த ஆண்டு யார் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைப்படி சட்டரீதியான நீர்மை விகிதம் மற்றும் ரொக்க இருப்பு வீதம் குறைக்கப்பட்டது- 1991 நரசிம்மம் குழு.

50. 1984-85 இல் வேளாண்துறையின் வளர்ச்சி -3.62%. 1995-96 முதல் 2004 -2005 வரை - 1.97% குறைந்தது

51. பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு -16 பிப்ரவரி 2016.

52. பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம்:

    1. கோடை காலப் பயிர்களுக்கு சந்தா – 2 %.
    2. குறுவை சாகுபடி பயிர்களுக்கு சந்தா - 1.5 %.
    3. தோட்டப்பயிர்கள் மற்றும் பணப் பயிர்களுக்கு சந்தா - 5 %.

53. NABARD - National Bank of Agriculture and Rural Development.

54. ICAR - Indian Council of Agricultural Research.

55. APMC - Agricultural Produce Market Committee.

56. SEZ - Special Economic Zones.

57. EPZ - Expert Processing Zone.

58. பல மாநில அரசு நிறுவனங்கள் மூடப்பட்ட ஆண்டு – 2003.

59. 1500 க்கும் மேற்பட்ட பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்ட ஆண்டு - 2001 .

60. வர்த்தக கொள்கை உருவாக்கப்பட்ட ஆண்டு - ஏப்ரல் 1 ,1992.

61. எத்தனை பொருட்கள் மட்டுமே தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ளன- 71.

62. வர்த்தக கொள்கை சீர்திருத்தங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட ராஜா செல்லையா குழுவின் பரிந்துரைப்படி அதிகபட்ச இறக்குமதி சுங்கத்தரவை - 50%.

63. 1980 துவக்கத்தில் மேலும் 7 EPZகள் துவங்கப்பட்டன - Export processing zone . பம்பாய்,நொய்டா,சூரத் சென்னை,ஃபால்டா ,விசாகப்பட்டினம்.

64. GST வரி விகிதங்கள்: 5 .

    1. 0%
    2. 5%
    3. 12%
    4. 18%
    5. 28%

65. நரசிம்மம் குழு பரிந்துரைப்படி, சட்டரீதியாக நீர்மை விகிதம் மற்றும் ரொக்க இருப்பு விகிதம் குறைக்கப்பட்ட ஆண்டு -1991- ( SLR. , CRR. )

66. யாருடைய குழு அறிக்கையின்படி வாராக்கடன் மற்றும் சொத்து மதிப்பை கணக்கிட புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டன- நரசிம்மம் குழு.

67. GDP ஐப் பொறுத்து இண்டியா எத்தனையாவது இடத்தில் உள்ளது - 9.

68. ராஜ் கிருஷ்ணாவால் வார்க்கப்பட்ட இந்து வளர்ச்சி வீதம் என்பது - குறைவான பொருளாதார வளர்ச்சியை குறிக்கும்.

69. தனியார் மயமாதலைக் குறிக்கும்:

    1. முதலீட்டை திரும்பப் பெறுதல்.
    2. தேசியமயம் நீக்கல்.

3. தொடர் நிறுவனமாக்கல்.

70. இன்றைய நாட்களில் வளர்ச்சிக்காக ஒவ்வொரு நாடும் ஒன்றையொன்று சார்ந்து இருக்க வேண்டும்.

71. LPGக்கு எதிரான வாதம் -மக்கள் மற்றும் மண்டலங்களிடையே ஏற்றத்தாழ்வு.

72. FDI என்பதன் விரிவாக்கம் - வெளிநாட்டு நேரடி முதலீடு.

73. FPI என்பதன் விரிவாக்கம் -வெளிநாட்டு தொகுப்பு முதலீடு.

74. உலக அளவில் இந்தியா-பழங்கள் உற்பத்தியில் மிகப்பெரிய உற்பத்தியாளராக விளங்குகின்றது.

75. வெளிநாட்டு முதலீடு உள்ளடக்கியது - FDI மற்றும் FPI.

76. விவசாய உற்பத்தி அங்காடிக் குழு - சட்டப்பூர்வமான குழு.

77. புதிய பொருளாதாரக் கொள்கை எதனை உள்ளடக்கியது:

1. வெளிநாட்டு முதலீடு.
2. வெளிநாட்டு தொழில்நுட்பம்.
3. வெளிநாட்டு வர்த்தகம்.

78. நிதி தொடர்பான நரசிம்மம் குழுவின் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு-1991.

79. உழவர் கடன் அட்டையைப் பயன்படுத்தி விவசாயிகள் - கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற முடியாது .

80. இந்தியாவில் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் எங்கு ஏற்படுத்தப்பட்டது -காண்ட்லா.

81. ஜூலை1, 2017 நாளின் படி GST யில் அதிகபட்ச வரிவிதிப்பு - 28%.

82. தொழில் உடைமை பொதுத்துறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றுவது-தனியார் மயமாக்கல்.

# 11TH- STD ஊரக பொருளாதாரம்-

**PAGE NO:242 11TH STD - TOTAL QUESTION -90**

1. இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என கூறியவர் - காந்தியடிகள்.
2. இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊரகப் பகுதிகளுக்கு அடிப்படை அடிப்படை அலகுகாக அமைவது -வருவாய் கிராமம்.
3. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் உள்ள மொத்த கிராமங்கள் - 6,40,867.
4. 121 கோடியாக உள்ள மொத்த மக்கள் தொகையில் மக்கள் ஊரகங்களில் வசிக்கின்ற மக்கள் - 68.84%.
5. ஓர் இந்திய உழவன் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து கடனிலே இறந்து அவன் சந்திக்கும் கடனையே விட்டு செல்கிறான் என்று கூறியவர் -ஆங்கில எழுத்தாளர் சர் மால்கம் டார்லிங்.
6. ஒருபுறம் கிராமங்கள் காளியாகவும் மறுபுறம் நகரங்கள் நெரிசலாக உள்ளன இது இரட்டை நஞ்சாக்கள என குறிப்பிட்டவர் - சுமாசர்.
7. தற்போதைய வளர்ச்சி வகை முறை அபாயகரமானது என்று -சிறியது அழகு -என்ற நூலில் விளக்கியவர்-சுமாசர்.
8. PURA என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்- அப்துல் கலாம்.
9. பணிக்கான படிப்பு என்ற ஆய்விற்காக 2010 ஆம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்கள் - பீட்டர் டயமண்ட், கிரிஸ்டோர் பிசாரிட்ஸ், டேல் மார்ட்டின்கன்.
10. பொருளாதார கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் எப்படி வேலை இன்மை வேலை காலி இடங்கள் மற்றும் கூலி ஆகியவற்றை பாதிக்கிறது என அறிந்து கொள்ள பயன்படும் முறை – DMP. முறை.
11. வேளாண் தொழிலாளர் விசாரணணக் குழு அறிக்கையின்படி எத்தனை சதவிகித வேளாண் தொழிலாளர்கள் குறை வேலை உடைமையில் உள்ளனர் - 84%.
12. SSI ஆனது எந்த ஆண்டின் சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி சட்டத்தின்படி வகைப்படுத்தப்படுகிறது -2006.
13. கிராம மக்கள் குறிப்பிட்ட காலத்தில் வாங்கிய கடனை திருப்பி செலுத்த இயலாமல் கடனின் அளவு அதிகரித்துக்கொண்டே செல்லும் நிலை- ஊரக கடன் சுமை.
14. இந்தியாவில் 2015ஆம் ஆண்டு சமூக பொருளாதார மற்றும் சாதி ரீதியான கணக்கெடுப்பின்படி எத்தனை சதவிகித மக்கள் ஊரகப் பகுதிகளில் வசிக்கின்றனர்- 73% .

15. 1975 -ஆண்டு இந்திய அரசாங்கம் ஊரக வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து ஆராய ஊரக வங்கிகள் பணிபுரிந்து கொண்டு குழு அமைக்கப்பட்டு எந்த வங்கிகள் ஏற்படுத்தப்பட்டன - வட்டார ஊரக வங்கிகள். Regional Rural Banks.
16. ஒரே மாதிரியான சமூக பொருளாதார பின்னணி கொண்ட 20 பெண்கள் வரை கொண்ட தன்னிச்சையான அமைப்பு - சுய உதவி குழு.
17. SBLP திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு- 1992.
18. NABARD இன் எந்த திட்டத்தின்படி உறுப்பினர்கள் கடனை சரியாக திருப்பி செலுத்திய பதிவை வைத்திருக்கும் சுய உதவி குழுக்கள் வங்கியில் கடன் பெற இயலும் - SHG வங்கி இணைப்பு திட்டம்.
19. சிறு குறு நிதி நிறுவனங்களுக்குகும் வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கும் மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் வழங்கும் வங்கி- முத்ரா வங்கி. MUDRA .
20. MUDRA முத்ரா வங்கி எப்போது துவங்கப்பட்டது - 2015 ஏப்ரல்-8.
21. தேசிய ஊரக நல அமைப்பு- NRHM ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு- 2005 ஏப்ரல் 12.
22. இனப்பெருக்கம், தாய்மைப்பேறு , சிசு , குழந்தை மற்றும் வளரிளம் பருவத்தினரின் நலனுக்காக பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் அமைப்பு - தேசிய ஊரக நல அமைப்பு.
23. ஊரகப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை வாங்கவோ அல்லது விற்கவோ ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பு - ஊரக அங்காடி.
24. இந்தியாவின் ஊரக சாலை பகுதி - 26.50 லட்சம் கிலோமீட்டர்.
25. இதில் சாலைகள் போடப்பட்ட பகுதி -13.5 லட்சம் கிலோமீட்டர்.
26. உலகிலேயே மிகப்பெரிய சாலை தொடர்பு வசதி அமைப்புகள் உள்ள நாடு- இந்தியா.
27. 1950 ஆம் ஆண்டில் இந்திய சாலைகளின் நீளம் -4 லட்சம் கிலோமீட்டராக இருந்தது.
28. ஊரகப் பகுதிகளுக்கு மின் வசதியை ஏற்படுத்தித் தருவது - ஊரக மின்மயமாக்கல்.
29. மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் முதல் பொருளாதார பேராசிரியர்- கில்பெர்ட் ஸ்லேட்டர்.
30. 1918 - ஆண்டு கில்பெர்ட் ஸ்லேட்டர் வெளியிட்ட புத்தகம் -தென்னிந்திய கிராமங்கள்.
31. தேவைக்கு அதிகமாக வேலையை பலர் செய்வது -குறை வேலையின்மை.
32. 2011-2012 மதிப்பீட்டின்படி ஊரகப் பகுதியில் எத்தனை கோடி மக்கள் ஏழையாகவும் வறுமைக்கோட்டிற்கு கீழும் வசிக்கின்றனர் -22%.
33. உலக ஏழை மக்களின் தொகையில் எத்தனை சதவீதம்% இந்தியாவில் உள்ளனர்-22%
34. 20 அம்ச திட்டம் -1975.
35. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் (IRDP)- 1978.
36. ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சி (TRYSEM) -1979.
37. வேலைக்கு உணவு திட்டம் (FWP)-1977.

38. தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் (NREP)-1980.
39. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (RLEGP) - 1983.
40. ஜவகர் வேலைவாய்ப்பு திட்டம் (JRY) - 1989.
41. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம்( MGNREGS ) - 2006.
42. பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் சதக் யோஜனா (PMAGSY) - 2010.
43. பாரத் நிர்மான் யோஜனா - 2005.
44. இந்திரா ஆவாஸ் யோஜனா - 1985 - 1986.
45. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற மறுசீரமைப்பு திட்டம் (JNNURM) -2005.
46. ராஜீவ் ஆவாஸ் யோஜனா (RAY) -2009.
47. தேசிய ஊரக நல திட்டம் -2005.
48. தேசிய ஊரக வாழ்வாதார திட்டம்-2011.
49. தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் -2013.
50. 2016 அக்டோபர் 4, நிலவரப்படி வேலையின்மை:
    1. ஊரக வேலையின்மை -7.8%
    2. நகர்புற வேலையின்மை -10.1%
    3. இந்திய மொத்த வேலையின்மை- 8.5%
51. 2018 -ல் இந்திய சாலைகளின் நீளம் - 34 லட்சம் கிலோமீட்டர்.
52. 1950 - 51 ல் இந்திய சாலைகளின் நீளம் - 4 லட்சம் கிலோமீட்டர்.
53. ஒரு சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கையை குறிப்பது - மக்கள் தொகை அடர்த்தி.
54. HDI - மனிதவள மேம்பாட்டு குறியீடு.
55. WEI - மகளிர் வல்லமை குறியீடு.
56. GDI - பாலின வேறுபாடு குறியீடு.
57. PQLI - இயல் தர வாழ்க்கைக் குறியீடு.
58. GNHI - மொத்த தேசிய மகிழ்ச்சி குறியீடு.
59. ஊரகப் பகுதியில் ஒரு மனிதன் எடுத்துக் கொள்ள வேண்டிய கலோரி அளவு -2400.
60. திட்டக்குழுவின் கணக்கீட்டின்படி 2009 - 2010 ல் ஊரகப் பகுதியில் வறுமையில் உள்ள மக்கள் சதவிகிதம்-54.10%. மொத்த வறுமை சதவீதம் - 33.80%
61. ஊரக வறுமைக்கான காரணங்கள்:
    1. நிலங்கள் சரியாக பிரிக்கப்படாமை.
    2. பண்ணை சார்ந்த தொழில்களில் வேலைவாய்ப்பின்மை.
    3. பொதுத் துறைகளில் முதலீடு இன்மை.

4. பணவீக்கம் .
5. குறைந்த உற்பத்தி திறன்.
6. குறைந்த பொருளாதார வளர்ச்சி விகிதம்.

62. வேளாண் தொழிலாளர்கள் விசாரணைக் குழு அறிக்கையின்படி 84 சதவீத வேளாண் தொழிலாளர்கள் குறை வேலையுடைமையில் உள்ளனர்.
63. அவர்கள் ஆண்டுக்கு சராசரியாக 82 நாட்கள் வேலையின்றி உள்ளனர் .
64. ஊரக வேலையின்மைக்கான காரணங்கள்:
    1. திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் இன்மை.
    2. வேளாண்மை பருவகாலம் சார்ந்தது.
    3. துணைத் தொழில்கள் இன்மை & வேளாண்மையை இயந்திரமயமாக்கல்
    4. மூலதன செறிவு தொழில்நுட்பம் & கல்வி முறையில் உள்ள குறைபாடுகள் .
65. இந்தியாவில் உள்ள ஊரக குடும்பங்களில் கடனாளிகளின் பங்கு எவ்வளவு- 3/4 பங்கு.
66. கில்பெர்ட் ஸ்லேட்டர் தமிழ்நாட்டில் எந்தெந்த கிராமங்களை ஆய்வுசெய்து 1918 ஆம் ஆண்டு "சில தென்னிந்திய கிராமங்கள்" என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
    1. வடமலைபுரம் -ராமநாதபுரம்.
    2. கங்கைகொண்டான் -திருநெல்வேலி.
    3. பாலக்குறிச்சி -தஞ்சாவூர்.
    4. துசி -வட ஆர்க்காடு.
67. ஊரகப் பகுதிகளுக்கு மின் அனுப்புகையில் ஏற்படும் இழப்பானது-25%சதவீதம் .
68. 2011 -கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் ஊரகத்தில் வாழும் மக்கள் தொகை சதவீதம் -60%
69. 2017 -மார்ச் முடிவில் இந்தியாவில் முழுமையாக மின் தொடர்பை பெற்ற கிராமங்களின் சதவீதம்- 99.25 %.
70. ஓர் அறையையே வீடாக பயன்படுத்தும் குடும்பங்கள்- 38%.
71. இரண்டு அறைகளை வீடாக பயன்படுத்தும் குடும்பங்கள்- 36%.
72. NABARAD கணக்கீட்டின்படி-2.2மில்லியன் சுய உதவிக்குழுக்கள்இந்தியாவில்உள்ளன.
73. சுய உதவி குழுக்கள் மாதாந்திர சேமிப்பு தொகை - ரூ 10 முதல் ரூ 50 வரை.
74. குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி சட்டம் -2006.
75. ஊரக வேலையின்மை வகை -3
    1. வெளிப்படையான வேலையின்மை.
    2. மறைமுக வேலையின்மை அல்லது குறை வேலையுடைமை.
    3. பருவகால வேலையின்மை.

76. ஊரக பொருளாதாரத்தில் உள்ள பிரச்சினைகள்.

1. எழுத்தறிவின்மை, போதிய தொழில்நுட்ப அறிவின்மை.
2. வேளாண்மைப் பொருட்களை அங்காடிபடுத்தும் வசதிகள் குறைவு.
3. நீர் மின்சாரம் , போக்குவரத்து, கல்வி நிறுவனங்கள், தகவல் தொடர்பு மருத்துவ வசதி போதுமானதாக இல்லை.
4. நலிவடைந்த ஊரகத் தொழிற்சாலைகள்.
5. பழமையான தொழில்நுட்ப முறைகள்.

77. அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான வருமானத்தை ஈட்ட முடியாத நிலை -வறுமை.

78. ஊரகப் பகுதியில் மறைமுக வேலையின்மை -25% முதல் 30% வரை.

79. இந்தியாவில் 2009ம் ஆண்டில் குறு கடன் வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை -150.

80. இந்தியாவில் உடல் நலத் தரத்தில் முன்னிலையில் உள்ள மாநிலம்-கேரளா.

81. ஊரகப் பகுதியின் அடிப்படை அலகாக கருதப்படுவது-வருவாய் கிராமம்.

82. ஊரகப் பகுதியை கண்டறியும் பண்பு-குறைந்த மக்கள் தொகை அடர்த்தி.

83. ஊரகப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு -வேளாண்மையை சார்ந்திருத்தல்.

84. தேவைக்கு அதிகமாக வேலையில் ஈடுபடும் மக்களின் நிலைமை -மறைமுக வேலையின்மை.

85. ஊரகப் பகுதி, ஊரக மக்கள் மற்றும் ஊரக வாழ்க்கையை மேம்படுத்துதல் என்பது- ஊரக மேம்பாடு.

86. ஊரக பொருளாதாரத்தில் வேளாண்மை பிரச்சனைகளுக்கு தொடர்புடையதாக கருதப்படுவது - சிறிய அளவு நில உடைமை.

87. ஊரக கடனுக்கு காரணம்-ஏழ்மை.

88. குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலை வாய்ப்பு பெறுவது - பருவகால வேலைவாய்ப்பு

89. ஊரக சாலையின் பயன்பாடாக கருதப்படுவது--

1. ஊரக அங்காடி வசதி
2. வேலைவாய்ப்பு
3. ஊரக வளர்ச்சி

90. முழுமையான மின் வசதி பெற்றுள்ள மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள்-20.

1. சண்டிகர்.
2. டெல்லி.
3. ஹரியானா.
4. இமாச்சல் பிரதேசம்.
5. பஞ்சாப்.
6. ராஜஸ்தான் .
7. டையூ மற்றும் டாமன்.
8. தாத்ரா மற்றும் நாகர் ஹவேளி.
9. கோவா.
10. குஜராத்.

11. மகாராஷ்டிரா.
12. ஆந்திர பிரதேசம்.
13. கேரளா.
14. லட்சத்தீவு.
15. புதுச்சேரி.
16. தமிழ்நாடு.
17. தெலுங்கானா.
18. அந்தமான் நிக்கோபர்.
19. சிக்கிம்.
20. திரிபுரா.

# 11TH- தமிழ்நாட்டுப் பொருளாதாரம்-

**PAGE NO:242 11TH STD - TOTAL QUESTION -184**

1. உழைப்பின் இயல்பு சரியாக உணரப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டால் உணவு உடல் வளர உதவுவதைப் போல, உழைப்பு உயர்வான திறமையை வளர்க்க உதவும எனக் கூறியவர் -ஜே.சி. குமரப்பா.
2. வேலையின் தன்மைக்கேற்ப சரியாக ஊக்குவித்து செயல்படுத்தினால் அதே அளவிற்கு உடலுக்கு தேவையான உணவு கிடைக்கச் செய்யும் எனக் கூறியவர்- ஜே.சி குமரப்பா.
3. பூகோள ரீதியாக தமிழ்நாடு எத்தனையாவது பெரிய மாநிலம் -11.
4. மக்கள் தொகை அடிப்படையில் தமிழ்நாடு -6.இடம்.
5. தமிழ்நாடு நீர் வளம் -3%
6. தமிழ்நாடு நிலப்பரப்பு - 4%
7. அணைக்கட்டுகள்-81.
8. கால்வாய்கள்- 2239.
9. குளங்கள் - 41262.
10. குழாய் கிணறுகள்-3,20,707.
11. திறந்தவெளிக் கிணறுகள்-14,92,359
12. தமிழ்நாடு எத்தனையாவது பெரிய பொருளாதாரமாக உள்ளது -3.
13. மொத்த உள்நாட்டு உற்பத்தி பாங்களிப்பில் தமிழ்நாடு -2இடம்.
14. தலா வருமானம் ,முதலீடு ,நேரடி அன்னிய முதலீடு ,தொழில்துறை உற்பத்தி , ஆகியவற்றில் தமிழ்நாடு -3-வது இடம்.
15. மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாடு -3-வது இடம்.
16. மூலதன முதலீடு , மொத்த தொழில்துறை உற்பத்தி- 3- இடம்.
17. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு -1 -இடம்.
18. சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு -3- இடம்.
19. சிமெண்ட் உற்பத்தியில் ஆந்திர பிரதேசம் -1 இடம். ராஜஸ்தான் - 2 இடம்.
20. நிதி ஆயோக் அறிக்கையின் படி சுகாதார குறியீட்டில் தமிழ்நாடு -3-வது இடம்.
21. உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் அதிகம் உள்ள மாநிலம்- தமிழ்நாடு.
22. குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டு திட்டங்களில் தமிழகம்-1இடம்.
23. கல்வியறிவு ,குழந்தை இறப்பு விகிதம் ,மகப்பேறு இறப்பு விகிதம் , முன்னணியில் உள்ள மாநிலம் கேரளா.

24. எழுத்தறிவு விகிதம் தமிழ்நாட்டின் தரம்-8 இடம்.
25. சுகாதார குறியீட்டில் தமிழ்நாடு -3-வது இடம்.
26. தமிழகத்தில் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் - 14.
27. தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஆறுகள் எண்ணிக்கை - 17.
28. தமிழகத்தில் கிணற்றுப்பாசனம் எத்தனை சதவிகிதம் உள்ளது- 56%.
29. தமிழகத்தில் உள்ள சுரங்க திட்டங்களில் முன்னோடித் திட்டமாக விளங்குவது- நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம் NLC.
30. மாங்கனீசு சுரங்கம் தமிழ்நாட்டில் எங்கு உள்ளது - சேலம்.
31. பாக்ஸைட் சுரங்கம் தமிழ்நாட்டில் எங்கு உள்ளது - ஏற்காடு.
32. இரும்பு தாது சுரங்கம் தமிழ்நாட்டில் எங்கு உள்ளது- கஞ்சமலை
33. மாலிப்டினம் இந்தியாவிலேயே எங்கு மட்டுமே கிடைக்கிறது -மதுரை மாவட்டம் கரடிக் குட்டம்.
34. இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு -12வது இடம்.
35. 2011 -ஆண்டு மக்கள்தொகை அடர்த்தி தேசிய சராசரி-382.
36. 2011 -ஆண்டு தமிழ்நாட்டு மக்கள்தொகை அடர்த்தி - 555.
37. இந்திய அளவில் நகரமயமாதலின் சராசரி அளவு - 31.5%.
38. தமிழ்நாட்டின் நகரமயமாதலின் சராசரி அளவு - 48.4%.
39. இந்திய அளவில் மொத்த மக்கள் தொகையில் தமிழகம் எத்தனை சதவிகிதம்-6%
40. பெண்களின் வாழ்வியல், மேம்பாடு அடைந்திருப்பதை குறிப்பது- சமச்சீர் பாலின விகிதம்.
41. தமிழ்நாட்டின் பாலின விகிதம் - 995.
42. வாழ்நாள் எதிர்பார்ப்பு தமிழ்நாடு:
    1. ஆண்கள் -68.6.
    2. பெண்கள் -72.7.
    3. மொத்தம் -70.6.
43. வாழ்நாள் எதிர்பார்ப்பு இந்தியா:
    1. ஆண்கள்- 66.4.
    2. பெண்கள் - 69.6.
    3. மொத்தம் -67.9.
44. பாலின விகிதத்தில் தமிழ்நாடு - 3-வது இடம்.
45. தமிழ்நாட்டின் பாலின விகிதம் அதிகமாக உள்ள மாவட்டம் - நீலகிரி.
46. பாலின விகிதம் குறைவாக உள்ள மாவட்டம் - அரியலூர்.
47. நிதி ஆயோக் அறிக்கையின்படி 2016ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் (1வயதுக்குள்) - 17.
48. SPIC அமைந்துள்ள இடம் - தூத்துக்குடி.

49. நிதி ஆயோக் அறிக்கையின்படி மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தை கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு - 3 வது இடம்.
50. மகப்பேறு இறப்பு விகிதத்தில் முதலிடம் -கேரளா.
51. இந்தியாவின் சராசரி ஆயுட்காலம்- 67.9 ஆண்டுகள்.
52. தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது எந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமம்- குவைத்.
53. வாங்கும் சக்தி யின் அடிப்படையில் எந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாக உள்ளது - ஐக்கிய அரபு எமிரேட் .
54. தமிழ்நாட்டில் மாநில உள்நாட்டு உற்பத்தியில் எந்த துறை முதலிடம் -சேவைத்துறை.
55. தமிழ்நாட்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எந்த துறை இரண்டாம்-தொழில்துறை.
56. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம்- 2200 டாலர்.
57. இந்தியாவின் தனிநபர் வருமானம் -1670 டாலர்.
58. தமிழ்நாட்டில் எத்தனை வேளாண் காலநிலை மண்டலம் உள்ளது -7.
59. உதிரிப்பூக்கள் உற்பத்தியில் தமிழ்நாடு எத்தனையாவது இடம்- 1 .இடம்.
60. பழங்கள் உற்பத்தியில் தமிழ்நாடு எத்தனையாவது இடம்- 3 .இடம்.
61. நெல் உற்பத்தியில் முதலிடம் உள்ள மாநிலம் -மேற்கு வங்காளம்.
62. நெல் உற்பத்தியில் தமிழ்நாடு எத்தனையாவது இடம் உள்ளது- 2 .இடம்.
63. தோட்டக்கலை பயிர், வாழை, தேங்காய் உற்பத்தியில் தமிழ்நாடு - 1 .இடம்.
64. ரப்பர் உற்பத்தியில் தமிழ்நாடு- 2 .இடம்.
65. மிளகு உற்பத்தியில் தமிழ்நாடு- 3 .இடம்.
66. கரும்பு உற்பத்தியில் தமிழ்நாடு- 4 .இடம்.
67. உணவு தானியங்கள் மற்றும் பிற தானியங்களின் உற்பத்தி திறனில் முதன்மை மாநிலமாக திகழ்வது - தமிழ்நாடு.
68. மக்காச்சோளம், கம்பு ,நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள், பருத்தி, உற்பத்தியில் தமிழ்நாடு - 1 .இடம்.
69. நெய் ,தேங்காய் , உற்பத்தியில் தமிழ்நாடு -2 .இடம்.
70. கரும்பு ,சூரியகாந்தி ,சோளம் , உற்பத்தியில் தமிழ்நாடு -3 .இடம்.
71. இந்தியாவில் மருத்துவ தலைநகரம் மற்றும் வங்கி தலை நகரம் என அழைக்கப்படுவது - சென்னை.
72. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது-சென்னை.
73. பன்னாட்டு அளவில் கார் உற்பத்தி ஜாம்பவான்களின் தலை நகரம் –சென்னை.
74. பேருந்து கட்டுமான தொழிலுக்கு பெயர் பெற்ற ஊர் - கரூர்.

75. ஆசியாவிலேயே மிகப்பெரிய சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத காகித நிறுவனங்களில் ஒன்றாக செயல்படுவது-கரூர்.தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனம்.
76. எஃகு நகரம் என்று அழைக்கப்படுவது- சேலம்.
77. தமிழகத்தின் நுழைவாயில் – தூத்துக்குடி.
78. சென்னைக்கு அடுத்தபடியாக வேதிப்பொருட்கள் உற்பத்தியில் தூத்துக்குடி-2 .இடம்.
79. இந்தியாவின் மிகப் பெரிய ஜவுளி உற்பத்தி மையம் -தமிழ்நாடு.
80. இந்தியாவின் நூல் கிண்ணம் என அழைக்கப்படுவது- தமிழ்நாடு.
81. பின்னலாடை களின் நகரம் என அழைக்கப்படுவது - திருப்பூர்.
82. தென் இந்தியாவின் மொத்த மற்றும் சில்லரை ஆயத்த ஆடை களுக்கான முக்கிய ஜவுளி சந்தையாக உள்ள மாவட்டம்- ஈரோடு .
83. மொத்த சிமெண்டு தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு -2 .இடம்.
84. மொத்த சிமெண்டு தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் முதலிடம் -ஆந்திர பிரதேஷ்.
85. ஜவகர்லால் நேரு அவர்களால் குட்டி ஜப்பான் என்றழைக்கப்படும் நகரம் - சிவகாசி.
86. இந்தியாவின் மிகப்பெரிய எஃகு உருக்காலை நிறுவனமான SAIL தமிழகத்தில் எங்கு உள்ளது- சேலம்.
87. காற்றழுத்த விசை குழாய் நகரம் என அழைக்கப்படுவது- கோயம்புத்தூர்.
88. எந்த சட்டத்தின்படி குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன-MSMED-2006.
89. கிராம மக்களுக்கு தேவையான மின்சாரத்தை வழங்கும் ஒரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமாக விளங்குவது - முப்பந்தல் காற்றாலை மையம்.
90. சூரிய மின்சக்தி உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குவது- தமிழ்நாடு.
91. சூரிய மின்சக்தி திட்டங்களை செயல்படுத்த உகந்த மண்டலமாக கருதப்படுவது-தென் தமிழகம்.
92. உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதத்தில் முதன்மை மாநிலம்-தமிழ்நாடு.
93. தமிழ்நாடு எத்தனை அடுக்கு உடல்நலக் அடிப்படை கட்டமைப்பை கொண்டுள்ளது-3.
94. இந்தியாவில் இணையத்தின் பயன்பாட்டின் முதன்மை மாநிலம்- மகாராஷ்டிரா.
95. தங்க நாற்கர திட்டம் முனையமாக விளங்கும் மாநிலம்- தமிழ்நாடு.
96. சாலைப் போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு -2 .இடம்.
97. இந்தியாவின் மூன்றாவது பெரிய சர்வதேச விமான நிலையம்- சென்னை
98. கண்டைனர் கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் இரண்டாவது முக்கிய செயற்கை துறைமுகம் - சென்னை துறைமுகம்.
99. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் முதன்மை புகலிடமாக திகழ்வது- தமிழ்நாடு.
100. தேசிய அளவில் வேலைவாய்ப்பின்மை அளவின் சராசரி-50.

101. தேசிய அளவில் தமிழ்நாடு வேலைவாய்ப்பின்மையில் - 22-ஆவது இடம்.

102. ஒரு மாநிலத்தின் ஒரு ஆண்டில் ஒரு உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பு-மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி.GSDP.

103. தனிநபர் வருமானம் -மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி / மாநில மக்கள் தொகை.

104. பாலின விகிதம் அதிகமாக உள்ள யூனியன் பிரதேசம் –பாண்டிச்சேரி.

105. வரலாற்று ரீதியாக தமிழகம் ஒரு - வேளாண்மை மாநிலம் .

106. தமிழ்நாட்டில் ஏறக்குறைய- 110 தொழில் பூங்காக்கள் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளோடு செயல்பட்டு வருகின்றன.

107. தீப்பெட்டி தயாரிப்பில் முன்னோடியாக உள்ள மாவட்டம் -சிவகாசி.

108. இந்தியாவில் மொத்த தீப்பெட்டி உற்பத்தியில் சிவகாசி- 90 சதவீதம் பங்கு.

109. ஒவ்வொரு ஆண்டும் பன்னாட்டு தோல் பொருட்கள் கண்காட்சி எங்கு நடைபெற்று வருகிறது- சென்னை.

110. தமிழகம் தோல் பொருட்கள் ஏற்றுமதியில் -30%.

111. தமிழகம் தோல் பொருட்கள் தயாரிப்பில் -70%.

112. மின்னாற்றல் உற்பத்தி:

1. தமிழ்நாடு - 26,865 MW .
2. கர்நாடகா -18,641 MW .
3. ஆந்திரா -17,289 MW.
4. தெலுங்கானா -12,691 MW.
5. கேரளா - 4,141 MW.

113. எந்த காற்றாலை மையம் கிராம மக்களுக்கு தேவையான மின்சாரத்தை வழங்கும் ஒரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமாக உள்ளது -முப்பந்தல்.

114. தமிழ்நாட்டின் முக்கிய அணுமின் நிலையங்கள்.

1. கல்பாக்கம் - 1834 MW
2. கூடங்குளம் - 470 MW

115. தமிழ்நாட்டில் செயல்படும் அனல் மின் நிலையங்கள்.

1. அத்திப்பட்டு - வடசென்னை.
2. எண்ணூர் - மேட்டூர்.
3. நெய்வேலி - தூத்துக்குடி.

116. டீசலை அடிப்படையாக கொண்ட அனல் மின் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் -34%

1. அனல் மின் உற்பத்தி- 13304 ( 49.52%) மில்லியன் அலகுகள்.
2. புனல் மின் உற்பத்தி - 2203 (8.20%) மில்லியன் அலகுகள்.
3. அணுமின் உற்பத்தி -986 (3.67%) மில்லியன் அலகுகள்.

4. காற்று, சூரிய ஒளி -10372 ( 38.61%) மில்லியன் அலகுகள்.
5. மொத்தம் -26865 (100%) மில்லியன் அலகுகள்.

117. சூரிய மின் உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலம்- தமிழ்நாடு.

(மொத்த மெகாவாட் திறன் - 31 ஜனவரி 2017)

1. தமிழ்நாடு -1590.97.
2. ராஜஸ்தான் -1317.64.
3. குஜராத் -1159.76.
4. தெலுங்கானா -1073.41.
5. ஆந்திரா -979.65.

118. தமிழ்நாட்டில் உள்ள வங்கி கிளைகள்:

1. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் - 5337. ( 52% பங்குகள்)
2. தனியார் வணிக வங்கிகள் - 3060. ( 30%)
3. பாரத் ஸ்டேட் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் -1364. (13%)
4. வட்டார கிராம வங்கிகள்- 537. (5% )
5. அயல் நாட்டு வங்கி கிளைகள் - 2.

119. தமிழ்நாட்டின் உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை வீதம் (2016 - 2017)- 46.9.%

120. மகாராஷ்டிரா உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விதம் ( 2016 - 2017)-30.2.%

121. தென்னக ரயில்வேயின் தலைமையிடம்-சென்னை .

122. தமிழ்நாடு கல்லூரிகள்:

1. பல்கலைக்கழகங்கள் - 59.
2. மருத்துவ கல்லூரிகள் - 40.
3. பொறியியல் கல்லூரிகள் - 517.
4. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்- 2260.
5. பல் தொழில்நுட்ப கல்லூரிகள் - 447.
6. பல் மருத்துவ கல்லூரிகள்- 20.

123. தமிழ்நாட்டில் எத்தனை தேசிய நெடுஞ்சாலைகள் 5036 கிலோமீட்டர் தொலைவினை இணைகின்றன - 28.

124. தமிழ்நாடு மூன்றடுக்கு உடல்நல அடிப்படைக் கட்டமைப்பை கொண்டுள்ளன:

1. மருத்துவமனைகள்
2. ஆரம்ப சுகாதார நிலையங்கள்
3. சமூக நல மையங்கள்

125. தமிழ்நாடு – மருத்துவமனைகள்:

1. மாவட்ட மருத்துவமனைகள்- 34.

2. துணை மருத்துவமனைகள் -229.
3. ஆரம்ப சுகாதார நிலையங்கள்- 1254.
4. துணை நிலையங்கள்-7555.
5. சமூக நல மையங்கள் -313.

126. இந்தியாவில் இணையத்தின் பயன்பாடு - 2016 மார்ச் மாதம் புள்ளிவிவரப்படி:
1. மகாராஷ்டிரா -29.47 மில்லியன் மக்கள்.
2. தமிழ்நாடு -28.01 மில்லியன் மக்கள்.
3. ஆந்திரா -24, 87 மில்லியன் மக்கள்.
4. கர்நாடகா -22.63 மில்லியன் மக்கள்.
5. இந்தியாவில் மொத்தம்-342.65 மில்லியன் மக்கள்.

127. நம் மாநிலத்தில் உள்ள மிகப்பெரிய மற்றும் இரண்டாவது மிகப் பெரிய பேருந்து நிலையங்கள்:
1. சென்னையிலுள்ள கோயம்பேடு பேருந்து நிலையம்.
2. ஈரோடு மத்திய பேருந்து நிலையம்.

128. தமிழ்நாட்டின் மொத்த சாலை நீளம்-1,67,000 km.

129. தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை துறையால் பராமரிக்கப்படும் சாலை நீளம் -60,628 km.

130. சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு – 2 இடத்தில் உள்ளது

131. தமிழ்நாட்டில் உள்ள இருப்பு பாதையின் மொத்த நீளம் - 6693 km.

132. தமிழ்நாட்டில் 690 ரயில் நிலையங்கள் – 690.

133. சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதிவிரைவு மெட்ரோ ரயில் போக்குவரத்து தொடங்குவதற்கான பணி மே 2017 -முதல் அமைக்கப்பட்டுள்ளது.

134. தமிழ்நாட்டில் நான்கு முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன:
1. சென்னை
2. கோயம்புத்தூர்
3. மதுரை
4. திருச்சிராப்பள்ளி.

135. மும்பை ,டெல்லிக்கு அடுத்தபடியாக இந்தியாவின் மூன்றாவது பெரிய சர்வதேச விமான நிலையம் – சென்னை.

136. தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகங்கள்: 3 (மேலும் 23 துறைமுக்கள் உள்ளன)
1. சென்னை
2. எண்ணூர்
3. தூத்துக்குடி.

137. கன்டெய்னர்களைக் கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் இரண்டாவது முக்கிய செயற்கை துறைமுகம் - சென்னை.

138. தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுத்துறை -TTDC.

139. இந்திய மாநிலங்களில் 25-கோடி சுற்றுலா பயணிகளுடன் தமிழ்நாடு - முதலிடம் .

140. தமிழ்நாடு சுற்றுலா துறையின் ஆண்டு வளர்ச்சி சராசரி 16 சதவீதம்.

141. தோராயமாக 28 லட்சம் வெளிநாட்டு பயணிகள் மற்றும் 11 கோடி உள்நாட்டு பயணிகள் தமிழகத்திற்கு வருகை புரிகின்றனர்.

142. இந்திய உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை 2016. முதல் மூன்று மாநிலங்கள்:

1. தமிழ்நாடு.
2. உத்தரப் பிரதேசம்.
3. ஆந்திர பிரதேசம்.

143. வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களில் முதல் மூன்று மாநிலங்கள்:

1. தமிழ்நாடு.
2. மத்திய பிரதேசம்.
3. உத்திரபிரதேசம்.

144. தேசிய அளவில் வேலைவாய்ப்பின்மை அளவில் சராசரி 1000 பேருக்கு.-50

145. தமிழ்நாட்டில் வேலையின்மை 1000 பேருக்கு- 42பேர் வேலையில்லாமல் உள்ளனர்.

146. வேலையின்மை பட்டியலில் தமிழகம் எத்தனையாவது இடத்தில் உள்ளது-22.

147. தமிழ்நாடு இந்தியாவின் வளமான மாநிலங்களில் ஒன்றாகும் 1994 லிருந்து நமது மாநிலம் வறுமையில் நிலையான சரிவை சந்தித்து வருகிறது.

148. சேவைத்துறை வளர்ச்சியின் விளைவாக 2005 க்குப் பிறகு இந்தியாவின் மிக வேகமாக வளரும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது.

149. தமிழ்நாட்டில் எதில் வளமானது -மனித வளம்.

150. நீர் பாசனத்தின் முக்கிய ஆதாரம் -கிணறுகள்.

151. தமிழ்நாட்டின் நுழைவாயில்- தூத்துக்குடி.

152. எஃகு நகரம் - சேலம்.

153. பம்ப் நகரம் -கோயம்புத்தூர்.

154. குறு சிறு நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டில் தமிழ்நாட்டின் தரம் - 1.

155. தமிழ்நாட்டில் தோராய பிறப்பு விகிதம் (1000 பேருக்கு)- 15.7.

156. தமிழ்நாட்டில் தோராய இறப்பு விகிதம் (1000 பேருக்கு) - 7.4.

157. தமிழ்நாட்டில் வளர்ச்சி விகிதம் (1000 பேருக்கு)- 8.3.

158. அதிக மக்கள்தொகை உடைய மாவட்டங்கள் :

1. சென்னை.
2. காஞ்சிபுரம்.
3. வேலூர்.
4. திருவாரூர்.

**159. குறைவான மக்கள்தொகை உடைய மாவட்டங்கள்:**

1. பெரம்பலூர்.
2. நீலகிரி.
3. அரியலூர்.
4. தேனி.

**160. மக்கள் தொகை அடர்த்தி:**

1. சென்னை -26903 (மிக அதிகம்)
2. கன்னியாகுமரி -1106 ( மிக அதிகம்)
3. நீலகிரி -288 ( குறைவான அடர்த்தி)
4. திருச்சிராப்பள்ளி -602 (குறைவான அடர்த்தி)

**161. அதிக பாலின விகிதம் கொண்ட முதல் மூன்று மாவட்டங்கள்:**

1. நிலகிரி - 1041.
2. கன்னியாகுமரி -1031.
3. நாகப்பட்டினம் - 1025.

**162. குறைவான பாலின விகிதம் உடைய முதல் இரண்டு மாவட்டங்கள்:**

1. தேனி - 900.
2. தர்மபுரி - 946.

**163. அதிக குழந்தை பாலின விகிதம் கொண்ட மாவட்டங்கள்:**

1. நீலகிரி - 985 .
2. கன்னியாகுமரி -964.

**164. குறைவான குழந்தை பாலின விகிதம் கொண்ட மாவட்டங்கள்:**

1. கடலூர் - 896 .
2. அரியலூர் - 897.

**165. தமிழ்நாடு எழுத்தறிவு வீதம் :**

1. எழுத்தறிவு விகிதம் - 2011- 80.33% - 2001- 73.45%
2. ஆண் எழுத்தறிவு விகிதம் - 2011- 86.81% - 2001-82.33%.
3. பெண் எழுத்தறிவு விகிதம் - 2011- 73.86% - 2001-64.55%.

**166. அதிக எழுத்தறிவு விகிதம் கொண்ட மாவட்டங்கள் :**

1. கன்னியாகுமரி - 92.14%.
2. சென்னை - 90.33.

**167. குறைந்த எழுத்தறிவு விகிதம் கொண்ட மாவட்டங்கள்:**

1. தர்மபுரி - 64.61%.

2. அரியலூர் -71.99%.

168. தனிநபர் வருமானம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது- மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி/ மாநில மக்கள்தொகை.

169. 1-ஒரு வயது பூர்த்தி அடையும் முன் இறக்கும் பச்சிளம் குழந்தைகளின் எண்ணிக்கை 1000 - சிசு இறப்பு விகிதம்

170. 5-வயது பூர்த்தி அடையும் முன் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 1000 -குழந்தை இறப்பு விகிதம்.

171. காட்டாமணக்கு போன்ற தாவரங்கள் இருந்து தயாரிக்கப்படும் எண்ணெய்- உயிரி எரிபொருள்.

172. தமிழ்நாடு பள்ளிகளின் எண்ணிக்கை.

1. துவக்கப் பள்ளிகள் - 35,414.
2. நடுநிலைப் பள்ளிகள் -9,708.
3. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் -12,911.

173. ராணிப்பேட்டை, ஆம்பூர், வானணியம்பாடி - தோல்.

174. சேலம் - விசைத்தறி, கைத்தறி, ஜவுளி, எஃகு, மரவள்ளி.

175. சங்ககிரி - லாரி கலத்தொகுதி.

176. திருச்செங்கோடு - ஆழ்துளையிடும் பணிகள்.

177. நாமக்கல்-போக்குவரத்து, கோழிப்பண்ணை.

178. கரூர் -வாகன புனைபவர், விசைத்தறி.

179. ஈரோடு - விசைத்தறி, மஞ்சள்.

180. கோயம்புத்தூர் - நூற்பு ஆலைகள், பொறியியல் தொழிற்சாலைகள்.

181. திருப்பூர்- பின்னலாடைகள், ஆயத்த ஆடைகள்.

182. ராஜபாளையம் - பருத்தி, அறுவைச்சிகிச்சை பொருட்கள்.

183. சிவகாசி - தீப்பெட்டி, பட்டாசு தொழிற்சாலை, அச்சிடுதல்.

184. நாட்டின் இருப்பில் தமிழகத்தின் பங்கு.

1. லிக்னைட் - 87%
2. வேர்மிகுலைட் - 66%
3. கார்னெட் - 42%
4. ஜேர்கான் - 39%
5. கிராபைட்- 33%
6. லெமனைட் - 28%
7. ரூட்டைல் - 27%
8. மோனசைட் - 25%
9. மேக்னசைட் - 17%

# 12TH- STD - இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி -

**PAGE NO: 01** **12TH STD** **TOTAL QUESTION -100**

1. காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய ஆண்டு - **1915.**
2. தேசியம் என்பது:
   1. ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல் என பொருள் .
   2. அது தனது நாட்டை ஏனைய நாடுகளை காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்து அல்லது
   3. ஏனைய நாடுகளுக்கு போட்டியாக தனது நாட்டின் பண்பாடு மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்பு கவனம் செலுத்தும் ஒரு தேசிய உணர்வு (அ)மனப்போக்காகும்.
3. இண்டிகோ கழகம் நடைபெற்ற ஆண்டு (வடக்கு வங்காளம்)- **1859 - 1860.**
4. **1919-** இந்திய தேசிய இயக்கத்திற்கு தலைமையற்றியவர் -மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி.
5. **1770 -1900** ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பஞ்சத்தின் காரணமாக எத்தனை மில்லியன் மக்கள் உயிரிழந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது - **25 மில்லியன்.**
6. **1793 -1900** வரையிலான காலப்பகுதியில் உலகில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற போர்களில் மரணமடைந்தோரின் எண்ணிக்கை - **5 மில்லியன்.**
7. **1891 -1900** வரையிலான பத்தாண்டுகளில் பஞ்சத்தினால் மட்டுமேஇந்தியாவில் **19** மில்லியன் மக்கள் உயிரிழந்ததாக குறிப்பிட்டுள்ள மெட்ராஸ் டைம்ஸ் பத்திரிக்கையின் ஆசிரியர் - வில்லியம் டிக்பை.
8. **1866** -ஒரிசா பஞ்சத்தின்போது ஒன்றரை மில்லியன் மக்கள் பட்டினிக்குப் பலியான நிலையில் ஆங்கிலேயர் எத்தனை மில்லியன் பவுண்ட் அரிசியை இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்தனர் - **200 மில்லியன்.**
9. ஒரிசா பஞ்சத்தின் தூண்டுதலின் காரணமாக இந்தியாவின் வறுமை குறித்துத் தனது வாழ்நாள் முழுவதுமான ஆய்வைத் தொடங்கியவர் - தாதாபாய் நெரோஜி.
10. எந்த காலப்பகுதியில் தொடர்ந்து இரண்டாண்டுகள் பருவமழைப் பொய்த்துப் போனதால் மதராஸ் மாகாணத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது - **1876-1878.**
11. ஒரிசா பஞ்சத்தின் போது பின்பற்றப்பட்ட தலையிடாக் கொள்கையையே பின்பற்றிய அரசப்பிரதிநிதி - லிட்டன் பிரபு.
12. மதராஸ் மாகாணத்தில் எத்தனை மில்லியன் மக்கள் பஞ்சத்திற்குப் பலியானதாக மதிப்பிடப்பட்டுள்ளது - **5 மில்லியன்.**
13. சிலோன் ஆளுநர் மதராஸ் மாகாண ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் பெருந்தோட்டங்களில் வேலை செய்யக் கூலிகளை அனுப்பிவைக்கக் கேட்டுக் கொண்ட ஆண்டு - **1815.**
14. மதராஸ் மாகாண ஆளுநர் கடிதத்தை மேல் நடவடிக்கைக்காக எந்த மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைத்தார் - தஞ்சாவூர்.
15. எந்த ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டதால் பேரசின் காலனிகளுக்கு குடிபெயரும் செயல்பாடுகள் ஊக்கம் பெற்றன - **1843.**
16. தமிழ்நாட்டிலிருந்து குடிபெயர்ந்து இலங்கையில் காபித் தோட்டங்களில் வேலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை:
    1. **1837 - 10,000.**
    2. **1846 - 80,000.**
    3. **1855 - 1, 28,000.**

4. 1877 - 3,80,000 .

17. எந்த ஆண்டு மொரிஷியஸில் 30,218 ஆண்களும் 4,307 பெண்களும் குடியேறியதாக அரசே அறிவித்தது - 1843.
18. நூற்றாண்டின் இறுதியில் எத்தனை தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்தது மெரிஷியஸ் சென்றனர் - 5,00,000.
19. இந்தியக் கவுன்சில் ஆங்கிலக் கல்விச் சட்டத்தை இயற்றிய ஆண்டு - 1835.
20. இந்தியாவில் அறிமுகம் செய்யவேண்டிய ஆங்கிலக் கல்விமுறையை வடிவமைத்தவர் - டி.பி. மெக்காலே.
21. பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய டங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்ட ஆண்டு - 1857.
22. 1834 - 1838 வரை கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவில் முதல் சட்ட உறுப்பினராக அங்கம் வகித்தவர் - T.B, மெக்காலே.
23. மெக்காலே இந்தியாவிற்கு வருவதற்கு முன்னதாக பொதுக்கல்விக்கான பொதுக்குழு உருவாக்கப்பட்ட ஆண்டு - 1823.
24. கல்வி தொடர்பாகவும், எம்மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழிகாட்டுவது -பொதுக்குழு வின் பொறுப்பாகும்.
25. கீழ்த்திசைக் குழு கல்வி எந்த மொழிகளில் கற்பிக்கப்பட வேண்டும் எனும் கருத்தை முன்வைத்தது - பிராந்திய மொழிகளில்.
26. ஆங்கில மரபுக் குழு மேலைக் கல்வி எந்த வழியில் கற்பிக்கப்பட வேண்டும் எனும் கருத்தை முன் வைத்தது - ஆங்கில மொழி.
27. மெக்காலே எந்த குழுவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார் - ஆங்கில மரபு.
28. 1835 - இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள் எனும் குறிப்புகளை வெளியிட்டார்- T.B, மெக்காலே.
29. பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் பல்கலைகழகங்கள் நிறுவப்பட்ட ஆண்டு - 1857.
30. இந்திய தண்டனைச் சட்டம் -1870.
31. பிராந்திய மொழிச் சட்டம் -1878.
32. சையத் அகமது கானால் நிறுவப்பெற்றது-அலிகார் இயக்கம்.
33. சீர்திருத்த இயக்கங்கள்:
    1. பிரம்ம சமாஜம் - ராஜாராம் மோகன்ராய் -1828.
    2. பிரார்த்தன சமாஜம் -ஆத்மராம் பாண்டுரங் -1867.
    3. அலிகார் இயக்கம் - சையது அகமது கான்
34. மீட்பு இயக்கங்கள்:
    1. ஆரிய சமாஜம்
    2. ராமகிருஷ்ணர் இயக்கம்
    3. தியோபந்த் இயக்கங்கள்
35. ராஜா ராம்மோகன்ராய் பிரம்ம சமாஜத்தை நிறுவிய ஆண்டு - 1828.
36. பிரார்த்தனை சமாஜம் நிறுவிய ஆண்டு - 1867.
37. ஆரிய சமாஜம் நிறுவிய ஆண்டு -1875 .
38. ராஜா ராம்மோகன் ராயின் வங்கமொழிப் பத்திரிகை - சம்வத் கௌமுதி,
39. ராஜா ராம்மோகன் ராயின் பாரசீக மொழிப் பத்திரிக்கையான - மிராத்-உல். அக்பர்.
40. அராபிய, பாரசீக, சமஸ்சகிருத மொழிகளிலிருந்த மத, வரலாற்று இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அனைவருக்கும் கிடைக்கச் செய்த அறிஞர்கள் - வில்லியம் ஜோன்ஸ், சார்லஸ் வில்கின்ஸ், மேக்ஸ் முல்லர்

41. தேசியத்தின் குறிக்கோளானது இந்தியச் சிந்தனையை, இந்திய குணநலன்களை, இந்திய உணர்வுகளை, இந்திய ஆற்றலை, இந்தியாவின் உன்னதத்தை மீட்டெடுப்பதாகும். மேலும் உலகைத் தடுமாறச் செய்யும் பிரச்சனைகள இந்திய மனப்பாங்குடன் இந்திய நிலைப்பாட்டில் தீர்த்து வைப்பதாகும் என எழுதியவர் - அரவிந்தகோஷ்.
42. சென்னைவாசிகள் சங்கம் (Madras Native Association - MNA)எனும் அமைப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு - 1852 பிப்ரவரி 26.
43. சென்னைவாசிகள் சங்கம் உருவாவதற்கு உந்து சக்தியாய்த் திகழ்ந்தவர்-கஜுலு லட்சுமி நரசு.
44. சென்னைவாசிகள் சங்கத்தின் மனு இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது ஆண்டு - மார்ச் 1853.
45. இந்தியச் சீர்திருத்தக் கழகத்தின் தலைவரான H.D செய்மோர் சென்னை வந்த ஆண்டு – அக்டோபர்-1853.
46. எந்த ஆண்டு பட்டயச்சட்டம் இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சித் தொடர அனுமதி வழங்கியது - 1853.
47. லட்சுமிநரசு இயற்கை எய்திய ஆண்டு - 1866.
48. சென்னைவாசிகள் சங்கம் எந்த ஆண்டுக்கு பிறகு செயலிழந்தது -1881.
49. சென்னை மகாஜன சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு - மே 1884.
50. சென்னை மகஜன சங்கம் தொடக்க விழா நடைபெற்ற ஆண்டு- 1884 மே 16.
51. இந்திய தேசிய காங்கிரஸ் இறக்குமதியாகும் பருத்தி இழைத் துணிகளின் மீது இறக்குமதிவரி விதிக்கப்பட வேண்டுமென ஜவுளி ஆலை உரிமையாளர்கள் இயக்கம் நடத்திய ஆண்டு - 1875.
52. அரசுப் பணிகள் இந்திய மயமாக்கப்பட வேண்டுமென்றக் கோரிக்கை ஓங்கி ஒலித்த ஆண்டு - 1877.
53. வட்டார மொழிப் பத்திரிகைச் சட்டத்திற்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்ற ஆண்டு - 1878.
54. இல்பர்ட் மசோதாவிற்கு ஆதரவாக கிளர்ச்சிகள் நடைபெற்ற ஆண்டு - 1883.
55. பணி நிறைவு பெற்ற இந்தியக் குடிமைப் பணி அதிகாரி டிசம்பர் 1884-சென்னையில் பிரம்ம ஞான சபையின் கூட்டமொன்றிற்குத் தலைமை ஏற்றிருந்தார்-ஆலன் ஆக்டவியன் ஹியூம்.
56. இந்திய தேசிய காங்கிரஸ் பம்பாயில் உருவாக்கப்பட்ட ஆண்டு- 1885 டிசம்பர் 28.
57. இந்திய தேசிய காங்கிரஸ் முதல் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவர் - W.C பானர்ஜி.
58. 1897 - சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன் எனக் கூறியவர்- பாலகங்காதர திலகர்.
59. ஆங்கிலேயர்களால் மேற்கொள்ளப்பட்ட வங்கப் பிரிவினை இந்தியர்களால் ஆவேசமாக எதிர்க்கப்பட்ட ஆண்டு - 1905.
60. 1905 தொடங்கப்பட்ட ஆங்கிலேய ஆட்சியை நேரடியாக எதிர்த்தது - சுதேசி இயக்கம்.
61. 1885 -இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டபோது அதன் உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பகுதியினர் - பத்திரிகையளரகளாக இருந்தனர்.
62. இந்தியாவின் குரல். ராஸ்த் கோப்தார் எனும் இரு பத்திரிகைகளைத் தொடங்கி அவற்றின் ஆசிரியராகவும் பணியாற்றியவர் - தாதாபாய் நௌரோஜி.
63. சுரேந்திரநாத் பானர்ஜி ஆசிரியராகப் பணிபுரிந்த பத்திரிகை - பெங்காலி.
64. கேசரி, மராட்டா ஆகியப்பத்திரிகைகளின் ஆசிரியராக பணியாற்றியவர் - பாலகங்காதர திலகர்.
65. இந்தியாவில் ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக நாடுதழுவிய எதிர்ப்புக்கு அவர் அழைப்பு விடுத்தவர்- திலகர்
66. திலகர் கைது செய்யப்பட்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124யு யின் கீழ்குற்றம் சாட்டப்பட்டார் - 1897 ஜூலை 27.

67. இந்திய தேசியத்தின் முதுபெரும் தலைவர் என அறியப்படுபவர் - தாதாபாய் நௌரோஜி.
68. தொடக்கால தேசிய இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவர் - தாதாபாய் நௌரோஜி.
69. தாதாபாய் நெரோஜி பம்பாய் மாநகராட்சிக் கழகத்திற்கும்,நகரசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு - 1870.
70. தாதாபாய் நௌளரோஜி 1892 இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் அவர் லண்டனில் எந்த அமைப்புகளை உருவாக்கினார் - இந்திய சங்கம் , கிழக்கிந்தியக்கழகம்.
71. தாதாபாய் நெரோஜி எத்தனை முறை இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் -3 முறை.
72. தாதாபாய் நௌளரோஜி எழுதிய எந்த புத்தகம் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு அவர் செய்த முக்கியப் பங்களிப்பாகும் - வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும். இந்நூலில் அவர் செல்வச்சுரண்டல் எனும் கோட்பாட்டை முன் வைத்தார்.
73. 1835 -1872 முடிய ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக எத்தனை மில்லியன் பவுண்டுகள் மதிப்புடையப் பொருட்கள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் ஆனால் அந்த அளவிற்கானப் பணம் இந்தியா வந்து சேரவில்லை எனவும் கூறினார் -13 மில்லியன்.
74. லண்டனில் வாழும் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு லாபத்தில் வழங்கப்பட வேண்டிய பங்கு பணி நிறைவு பெற்றுவிட்ட அதிகாரிகளுக்கும் தளபதிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியம் ஆகிய இவையனைத்துக்கும் பதிலாகவே அப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக வாதாடினார் - தாதாபாய் நௌளரோஜி.
75. இவையனைத்தும் தாயகக் கட்டணம் எனும் பெயரில் ஆண்டொன்றுக்கு எத்தனை மில்லியன் பவுண்டுகள் நஷ்டம் ஏற்படுத்துவதாக நௌளரோஜி உறுதிபடக் கூறினார்-30 மில்லியன்.
76. வைகுண்ட சுவாமிகள், இராமலிங்க அடிகள், அயோத்திதாசர் - தமிழ்நாடு.
77. நண்பன் பகைவன் என்ற வேறுபாடின்றி முழுவீச்சிலான பழிவாங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது கொள்ளையடிப்பதை பொறுத்தமட்டில் நாம் உண்மையாகவே நாதிர்ஷாவை மிஞ்சிவிட்டோம்" என்று கடிதம் எழுதியவர் -எல்பின்ஸ்டன். சர்ஜான் லாரன்ஸ்.
78. யார் அரச பிரதிநிதியாக இருந்தபோது இல்பர்ட் மசோதா மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்கும் அதிகாரம் பெற்றனர் - ரிப்பன் பிரபு.
79. இந்தியாவில் கம்பெனியின் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கொண்ட 14000 நபர்களால் கையெழுத்திடப்பட்ட தனது இரண்டாவது மனுவை ஆங்கில பாராளுமன்றத்திற்கு அனுப்பிய அமைப்பு - சென்னை வாசிகள் சங்கம்.
80. சென்னை மகாஜன சபையை இந்திய தேசிய காங்கிரசுடன் இணைத்த மாநாடு -பம்பாய்.
81. காங்கிரசின் முக்கிய கோரிக்கைகள்:
    1. அரசாங்கத்தில் பங்கேற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது இந்திய தேசிய காங்கிரசின் முக்கிய கோரிக்கையாகும்.
    2. நிலவரி குறைக்கப்பட வேண்டும் எனவும் ஜமீன்தார்களின் சுரண்டல்களிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் காங்கிரஸ் கோரியது.
    3. இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மீது அதிக வரி விதிக்கும் படி காங்கிரஸ் பரிந்துரை செய்தது.
    4. குடிமைப் பணித் தேர்வுகள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டும்.
82. தீவிர தேசியவாதிகள்:
    1. பிபின் சந்திர பால்.

2. பால கங்காதர திலகர்.
3. லாலா லஜபதி ராய்.

83. இந்தியாவில் ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக நாடு தழுவிய எதிர்ப்புக்கு திலகர் அழைப்பு விடுத்ததால் கைது செய்யப்பட்ட ஆண்டு - ஜூலை - 27 1897.
84. தாதாபாய் நௌரோஜி இங்கிலாந்து பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு-1892.
85. இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு நடைபெற ஆண்டுகள்: 1930, 1935 ,1941, 1945.
86. இந்திய தேசிய காங்கிரஸ் சிறப்பு மாநாடுகள் நடைபெற்ற ஆண்டு:
    1. 1918 – பம்பாய்.
    2. 1920 – கல்கத்தா.
    3. 1923 – டெல்லி.
    4. 1942 – பம்பாய்.
87. ஜோதிபா பூலே - பூனே.
88. நாராயண குரு -கேரளா.
89. அய்யன்காளி - கேரளா.
90. பாலகங்காதர திலகர் -கேசரி
91. தாதாபாய் நெரோஜி - இந்தியாவின் குரல்
92. மெக்காலே - இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்
93. வில்லியம் டிக்பை - மெட்ராஸ் டைம்ஸ்
94. ஆங்கிலக் கல்விச் சட்டம் - 1835
95. அடிமைமுறை ஒழிப்பு - 1843
96. சென்னைவாசிகள் சங்கம் - 1852
97. இண்டிகோ கலகம் -1859-60
98. சரியான கால வரிசையைத் தேர்வு செய்க:
    1. சென்னைவாசிகள் சங்கம்.
    2. இந்தியச் சங்கம்.
    3. கிழக்கிந்திய கலகம்.
    4. சென்னை மகாஜன சபை.

# 12TH- STD - தீவிர தேசியவாதத்தின் எழுச்சி சுதேசி இயக்கமும்-

**PAGE NO: 17 12TH STD TOTAL QUESTION -90**

1. ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு முதன்மையான எடுத்துக்காட்டு- வங்கப்பிரிவினை.
2. பிரிவினைத் திட்டம் முதன்முதலில்-மிதவாத தேசியவாதிகளால் எதிர்க்கப்பட்டது.
3. தீவிர தேசியவாதிகள்:
   1. பாலகங்காதர திலகர் - மகாராஷ்டமிரா.
   2. பிபின் சந்திர பால் - வங்களம்.
   3. லாலா லஜபதி ராய் - பஞ்சாப்.
4. சுதேசி இயக்கத்தின் ஆக்கபூர்வமானத் திட்டங்கள்:
   1. அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது.
   2. அரசால் நிர்வகிக்கப்படும் கல்வி நிலையங்களைப் புறக்கணிப்பது.
5. இந்தியாவின் பலபகுதிகளில் எந்த மொழிப் பத்திரிகைகள் பெற்ற வளர்ச்சி சுதேசி இயக்கத்தின் முக்கியச் சாதனையாகும - வட்டார.
6. தமிழ்நாட்டில் சுதேசமித்திரன், மகாராஷ்டிராவில் - கேசரி, வங்காளத்தில்- யுகந்தர் ஆகிய பத்திரிக்கைகளின் ஒரு சில எடுத்துக்காட்டுகளாகும் .
7. பொதுக்கூட்டங்கள் சட்டம் -1907.
8. வெடி மருந்துச் சட்டம் -1908.
9. செய்தித்தாள் சட்டம், தூண்டுதல் குற்றச் சட்டம் -1908.
10. இந்தியப் பத்திரிகைச் சட்டம் -1910.
11. கர்சன் பிரபு புதிய தலைமை ஆளுநராகவும் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகவும் பணி நியமனம் செய்யப்பட்ட ஆண்டு - 1899 ஜனவரி 6.
12. 1899 - கல்கத்தா மாநகராட்சிக் குழுவில் அங்கம் வகித்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்தவர் - கர்சன் பிரபு.
13. எந்த ஆண்டு இயற்றப்பட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி கல்கத்தா பல்கலைக்கழகம் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டது - 1904.
14. அலுவலக ரகசிய சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு- 1904.
15. வங்காளத்தை பிரிக்க 1905 இல் ஆணை பிறப்பித்தவர் -கர்சன் பிரபு.
16. டிசம்பர் 1903 இல் தன்னுடைய இந்தியாவின் பிரதேச மறுவிநியோகம் தொடர்பான குறிப்புகளில் ஒரு திட்டத்தை தீட்டியிருந்தார்- கர்சன் பிரபு.
17. அதுவே பின்னர் திருத்தம் செய்யப்பட்டு ரிஸ்லி அறிக்கை என்ற பெயரில் வெளியிடப்பட்டது.
18. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக வங்காளத்தில் நடைபெறும் அரசியல் நடவடிக்கைகளை அடக்கி இந்து - முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை உருவாக்குவது என்பதே கர்சனுடைய- நோக்கமாகும்

19. புவியியல் அடிப்படையில் எந்த ஆறு இயற்கையாகவே வங்காளத்தைப் பிரிப்பதாக அமைந்திருந்தது - பாகீரதி.
20. முந்தைய முஸ்லிம் ஆட்சி முதலாக முஸ்லிம் மக்கள் ஒருபோதும் அனுபவித்திராத ஓர் ஒற்றுமையைப் புதிய மாகாணமான கிழக்கு வங்காளத்தில் அனுபவிப்பார்கள் என டாக்காவில் கர்சன் முஸ்லிம்களுக்கு உறுதியளித்தார் - பிப்ரவரி 1904.
21. ரவீந்திரநாத் தாகூரைமையமாகக் கொண்டு -வங்கமொழி இலக்கிய மதிப்பைப் பெற்றுவிட்டது.
22. வங்கப் பிரிவினை அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது -1905 ஜூலை 19.
23. 1905 ஜூலை 17 -கல்கத்தாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் எதிர்ப்பை மக்களிடையே விரிவுபடுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.
24. அதே கூட்டத்தில் ஆங்கிலப்பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிக்க அறைகூவல் விடுத்தவர் - சுரேந்திரநாத் பானர்ஜி.
25. கல்கத்தா நகர அரங்கில் (Town Hall) நடைபெற்ற மற்றொரு கூட்டத்தில் சுதேசி இயக்கம் முறையாகப் பிரகடனம் செய்யப்பட்டது - 1905 ஆகஸ்டு 7.
26. அதிகாரபூர்வமாக வங்காளம் பிரிக்கப்பட்ட நாளான துக்கதினமாக கடைபிடிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டது - 1905 அக்டோபர் 16.
27. சென்னையைச் சேர்ந்த தேசியவாதியான - சுதேசி இயக்கத்தின் குறிக்கோள் குறித்து "தேசிய வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் தங்களின் சார்பு நிலைக்கு எதிரான புரட்சி" எனச் சுருக்கமாக விளக்கினார் - G.சுப்பிரமணியம்.
28. சுதேசி என்பதன் பொருள் -'ஒருவரது சொந்தநாடு' .
29. சுதேசி இயக்கமானது நம்முடைய தொழில்களின் முன்னேற்றத்திற்கானது மட்டுமல்ல; நமது தேசிய வாழ்க்கை சார்ந்த அனைத்துத் துறைகளின் மேம்பாட்டிற்கானது" - கோபால கிருஷ்ண கோகல.
30. யாருடைய கருத்துப்படி ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்திசெய்யப்படும் பொருட்களுக்கு அப்பொருட்களின் பயன்பாடு குறைவான மனநிறைவைக் கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் - மகாதேவ் கோவிந்த் ரானடே.
31. 1920 - களில் காந்தியடிகள் அனைத்து இந்தியர்களும் தாங்கள் பிறந்த நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளோடு இணைத்துச் சுதேசி சிந்தனைக்குப் புதிய பொருளைக் கொடுத்தார்.
32. சுய உதவி பொருளாதார வளர்ச்சிக்கு அழைப்பு விடுத்தவர் - ரவீந்திரநாத் தாகூர்.
33. சுய உதவி எனும் செய்தியை மக்களிடம் பரப்புவதற்கு மேளாக்கள் எனும் திருவிழாகளை பயன்படுத்த அழைப்பு விடுத்தவர்-சுதேசி இயக்கம் -ரவீந்திரநாத் தாகூர்.
34. வட்டார மொழியில் கல்வி " எனும் கருத்தை கூறியவர் -சதீஷ் சந்திரா.
35. சதீஷ் சந்திராவால் "விடிவெள்ளி கழகம்" நிறுவப்பட்ட ஆண்டு-1902.
36. வட்டார மொழியில் கல்வி, எனும் கருத்து சுதேசி இயக்கத்திற்கு வெகு முன்னரே 1902-விடிவெள்ளிக் கழகம் (Dawn Society) நிறுவப்பட்ட போதே உருவாகி விட்டது- சதீஷ் சந்திரா.
37. தீவிர தேசியவாதத் தலைவர்களின்பொதுவான குறிக்கோள்களில் ஒன்று - சுயராஜ்ஜியம் (அ) சுயாட்சி .

38. யாருடைய கருத்துப்படி சுயராஜ்ஜியம் என்பது அந்நியர் ஆட்சியிலிருந்து முற்றிலுமாக விடுதலையடைதல் என்பதாகும் -பிபின் சந்திரபால்.

39. 1906- யார் இந்திய அரசப்பிரதிநிதியாகப் பணியமர்த்தப்பட்டதிலிருந்து மிதவாத தேசியவாதிகளுக்கும் தீவிர தேசியவாதிகளுக்கும் இடையில் நிலவிய கருத்து வேற்றுமை மேலும் தீவிரமடைந்த - மிண்டோ பிரபு.

40. எந்த ஆண்டு கல்கத்தா மாநாட்டில் மிதவாத தேசியவாதிகளின் கோரிக்கையை ஏற்று தாதாபாய் நௌரோஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் பிளவு தவிர்க்கப்பட்டது -1906.

41. தீவிர தேசியவாதிகளின் கோட்டை எது - பூனா.

42. தீவிர தேசியவாதிகள் இல்லாத புதிய காங்கிரஸ்- மேத்தா காங்கிரஸ்.

43. 1870 இல் யார் விளக்கியவாறு எஃகினாலான உடலையும் நரம்புகளையும் வளர்ப்பதற்காக பல்வேறு இடங்களில் அக்காரா எனப்படும் உடற்பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டன - விவேகானந்தர்.

44. ஜதிந்தரநாத் பானர்ஜி, அரவிந்த கோஷின் சகோதரரான பரீந்தர்குமார் கோஷ் ஆகியோரால் கல்கத்தாவில் நிறுவப்பெற்ற அமைப்பு- அனுசீலன் சமிதி.

45. புலின் பிகாரி தாஸ் என்பவரின் முயற்சியினால் டாக்கா அனுசீலன் சமிதி உருவான ஆண்டு - 1906.

46. சுதேசி இயக்கத்தின் மூலம் புறக்கணிக்கப்பட்டது :

1. அன்னிய பொருட்களை புறக்கணிப்பது.
2. அரசு பள்ளிகளையும் கல்லூரிகளையும் புறக்கணிப்பது.
3. நீதிமன்றங்களை புறக்கணித்தல்.
4. பட்டங்களை துறந்து விடுதல்.
5. அரசுப் பணிகளை கைவிடுதல்.
6. ஆங்கிலேயரின் அடக்கு முறை தாங்க இயலாத அளவிற்கு சென்றால் ஆயுதப் போராட்டங்களை கைக்கொள்வது.

47. சுதேசி போராட்டக்காரர்களை கொடூரமாக நடத்திய ஆங்கில அதிகாரி- டக்ளஸ் கிங்ஸ்போர்டு.

48. அலிப்பூர் குண்டுவெடிப்பு வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடினார் - சித்தரஞ்சன் தாஸ்.

49. அரவிந்த கோஷ் இயற்கை எந்திய ஆண்டு - 1950.

50. மிண்டோ-மார்லி அரசியல்அமைப்புச் சீர்திருத்தங்கள்அறிவிக்கப்பட்ட ஆண்டு - டிசம்பர் 1908.

51. எந்த ஆண்டு முதல் தீவிர தேசிய வாதம் சரிய தொடங்கியது -1908.

52. சென்னைக்கு வருகை தந்த பிபின் சந்திர பால் சென்னைக் கடற்கரையில் ஆற்றிய உரைகள் பார்வையாளர்களிடையே உத்வேகத்தை ஏற்படுத்தின -1907.

53. வ.உ. சிதம்பரம் ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தும் கருத்தை வெளிப்படுத்தியபோது தமிழ்நாட்டின் சுதேசி இயக்கம் தேசத்தின் கவனத்தைப் பெற்றது - 1906.

54. சுதேசி நீராவி கப்பல் நிறுவனத்தின் முதலீடு:

    1. மொத்த முதலீடு -ரூ 10 லட்சம்.
    2. பங்கு பிரிப்பு - 40,000.
    3. ஒரு பங்கு - ரூ 25.

55. 1906 - சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எனும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தவர்-வ உ.சி.

56. S.S.கலியா, S.S.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்- வ.உ.சி.

57. சுதேசி கப்பல் நிறுவனத்தின் வெற்றி குறித்து யார் தன்னுடைய கேசரி, மராட்டா பத்திரிகைகளில் எழுதினார - லோகமான்ய திலகர்.

58. ஒரு நல்ல பேச்சாளரை வ.உ.சி தேடிக் கொண்டிருந்த தருணத்தில் சுதேசி இயக்கத்தைப் போதித்து வந்த யாரை சந்தித்தார் - சுப்ரமணிய சிவா.

59. 1907 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வ.உ.சி யும் ,சுப்பிரமணிய சிவாவும் தூத்துக்குடிக் கடற்கரையில் தினந்தோறும் பொதுக் கூட்டங்களில் பேசினர் .

60. கோரல்மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை வாழ்க்கைச் சூழல்கள் வ.உ.சி., சிவா ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தது - 1908.

61. பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்டதை " சுதேசி தினமாக" திருநெல்வேலியில் கொண்டாடியபோது கைது செய்யப்பட்டவர்கள்- (1908 மார்ச் 12).

    1. வ.உ.சி.
    2. சுப்பிரமணிய சிவா.
    3. பத்மநாபர்.

62. சுயராஜ்ஜியம் என்பது நிர்வாகத்தின் மீதான இந்தியர்களின் கட்டுப்பாடு அல்லது சொந்த மக்களின் நிர்வாகம் என்பது மட்டுமே தவிர இங்கிலாந்து உடனான உறவுகள் அனைத்தையும் துண்டித்துக் கொள்வது அல்ல -பால கங்காதர திலகர்.

63. சுயராஜ்யம் என்பது அன்னியர் ஆட்சியிலிருந்து முற்றிலுமாக விடுதலை அடைதல் என்பதாகும்- பிபின் சந்திரபால்.

64. கோரல் பருத்தி நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஆண்டு - மார்ச் 1908.

65. தமிழில் வெளியிடப்பட்ட முதல் தினசரி பத்திரிகை- சுதேசமித்திரன்.

66. தி இந்து (The Hindu) மற்றும் சுதேசமித்திரன் (தமிழில் வெளியிடப்பட்ட முதல்தினசரி) எனும் பத்திரிகைகளை நிறுவியவர் - ஜி சுப்பிரமணியம்.

67. சக்ரவர்த்தினி எனும் மாத இதழின் ஆசிரியராக யார் பணியாற்றினார். அது பெண்களின் மேம்பாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பத்திரிகையாகும்-சுப்பிரமணிய பாரதி.

68. சுப்ரமணிய பாரதியின் அயர்லாந்து நாட்டுப் பெண்மணியும் விவேகானந்தரின் சீடருமான சகோதரி நிவேதிதாவை - 1905 சந்தித்தது முதலாவதாகும். குருமணி (ஆசிரியர்) என அவரால் குறிப்பிடப்பட்ட அப்பெண்மணி அவரின் தேசியவாதச் சிந்தனைகளுக்கு ஊக்கமளித்தார் .

69. திலகரின் **Tenets of New party** எனும் நூலை தமிழில் மொழியாக்கம் செய்தவர் - பாரதி.

70. பாரதி ஆசிரியராகப் பணியாற்றிய எந்த வார இதழ் தீவிர தேசியவாதிகளின் குரலாக மாறியது - இந்தியா.

71. 6 - மாத காலச் சிறை தண்டனைக்கு பின்னர் பிபின் சந்திர பால் -1907 மார்ச் 9 விடுதலை செய்யப்பட்டார்.

72. வ.உ.சி. யும், சுப்ரமணிய சிவாவும் குற்றம் செய்தனர் என அறிவிக்கப்பட்டு தேச துரோகக் குற்றத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்ட ஆண்டு - 1908 ஜூலை 7.

73. அரசுக்கு எதிராகப் பேசிய குற்றத்திற்காகச் சிவாவுக்கு 10-ஆண்டுகள் நாடு கடத்துதல் தண்டனையும் அவருக்கு உடந்தையாக இருந்ததற்காக வ.உ.சி.க்கு ஆயுள் தண்டனையும் (20 ஆண்டுகள்) விதிக்கப் பெற்றது.

74. அரசை எதிர்த்துப் பேசிய குற்றத்திற்காக மேலும் ஒரு ஆயுள் தண்டன விதிக்கப்பெற்றார் - வ.உ.சி.

75. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ராபர்ட் ஆஷ், மணியாச்சி ரயில் நிலையத்தில் வாஞ்சிநாதனால் - சுட்டுக் கொல்லப்பட்ட ஆண்டு - ஜூன் 1911இல்

76. 1880 - திருவாங்கூர் அரசின் பகுதியில் பிறந்த வாஞ்சிநாதன் அவ்வரசின் ஆட்சியிலிருந்த புனலூரில் வனத்துறையில் காவலராகப் பணியாற்றினார்.

77. பாண்டிச்சேரியில் வாஞ்சிநாதனுக்கு கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தும் பயிற்சியை வழங்கியவர் - வ.வே. சுப்ரமணியம்.

78. தன்னாட்சி இயக்கம் - 1916

79. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது - லாலா லஜபதி ராய்.

80. விடிவெள்ளிக் கழகத்தின் முன்னெடுப்பில் கல்விக்கான தேசிய கழகம் உருவாக்கப்பட்ட ஆண்டு -1905 நவம்பர் 5.

81. வங்காள தேசியக் கல்லூரியும் பள்ளியும் நிறுவப்பட்ட ஆண்டு - 1906 ஆகஸ்ட்.

82. புரட்சிகர வார இதழ்-யுகாந்தர்.

83. 1906 ஆகஸ்ட் இல் சங்பூரில் முதல் சுதேசி கொள்கையை நடத்தியது - கல்கத்தா அனுசீலன் சமிதி

84. மணிக்தலா என்னும் இடத்திலிருந்த ஒரு பண்ணை வீட்டில் ஒரு மதசார்பு பள்ளியோடு குண்டுகள் தயாரிப்பதற்கான ஒரு தொழில் கூடத்தை நிறுவியவர்-ஹேம்சந்திர கனுங்கோ.

85. டக்ளஸ் கிங்ஸ்போர்டு எனும் ஆங்கில அதிகாரியை கொலை செய்யும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது - குதிராம் போஸ், பிரஃபுல்லா சாக்கி.

86. 1908 -ஏப்ரல் 30 - தவறுதலாக குண்டுவீசி 2 ஆங்கிலப் பெண்கள் கொலை செய்யப்பட்டனர்.

87. அலிப்பூர் குண்டு வெடிப்பு வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடியவர் -சித்தரஞ்சன் தாஸ்.

88. அரவிந்த் கோஷ் விடுதலைக்கு பின்னர் ஒரு ஆன்மீக

89. பாதையை தேர்ந்தெடுத்து 1950 இல் இயற்கை எய்தும் வரை எங்கு தங்கியிருந்தார் – பாண்டிச்சேரி.

90. மின்டோ-மார்லி அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்ட ஆண்டு-1908 டிசம்பர்.

# 12TH- STD - இந்திய விடுதலை போரில் முதல் உலக போரின் தாக்கம்-

**PAGE NO: 34 12TH STD - TOTAL QUESTION -90**

1. ஜப்பான் ரஷ்யாவை வீழ்த்தியது ஆண்டு - 1905.
2. திலகர் தலைமையில் தீவிரத் தேசிய தன்மையோடு செயல்பட்டவர்கள் காங்கிரசை கட்டுப்படுத்திய ஆண்டு - 1916.
3. அன்னிபெசன்ட் அம்மையார் பிரிட்டனில் இருந்த போது தீவிரமாக பங்காற்றின இயக்கங்கள்:
   1. அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கம்
   2. ∴பேபியன் சோஷலிசவாதிகள்
   3. குடும்ப கட்டுபாடு இயக்கங்கள்
4. அன்னிபெசன்ட் அம்மையாரின் ஆதரவாளர்கள்:
   1. ஜம்னா தாஸ்
   2. துவாரகா தாஸ்
   3. ஜார்ஜ் அருண்டேல்
   4. ஷங்கர்லால் பன்கர்
   5. இந்துலால் யக்னிக்
   6. சி.பி. ராமசாமி
   7. பி.பி. வாடியா
5. பிரிட்டன் முதல் உலகப் போரில் ஈடுபடும் அறிவிப்பை வெளியிட்ட ஆண்டு -1914.
6. பிரம்மஞான சபையின் உறுப்பினராக அன்னிபெசன்ட் அம்மையார் இந்தியாவிற்கு வந்த ஆண்டு - 1893.
7. மேற்கத்திய இந்தியாவில் யார் தலைமையில் தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்டது -திலகர்.
8. தென்னிந்தியாவில் யார் தலைமையிலும் தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்டது - அன்னிபெசண்ட் அம்மையார்.
9. எந்த ஆண்டு இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையே கையெழுத்தான லக்னோ ஒப்பந்தம் இந்திய தேசியத்துக்கு மேலும் வலிமை சேர்த்தது - 1916.
10. அகில இந்திய தன்னாட்சி இயக்கம்.
11. பிரம்மஞான சபையின் (தியாசாபிகல் சொசைட்டி) உறுப்பினராக டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார் இந்தியாவுக்கு வந்த ஆண்டு - 1893.
12. இங்கிலாந்தின் கடினமான தருணம் இந்தியாவின் வாய்ப்புக்கான தருணம் என்று முழக்கமிட்டவர் - அன்னிபெசன்ட் அம்மையார்.
13. இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இந்திய கட்சி ஒன்றை ஏற்படுத்த முயன்று தோல்வி கண்டவர் -அன்னிபெசன்ட் அம்மையார்.

14. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டை குறிக்கோள்கள் -
    1. பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது
    2. தாய்நாடு பற்றிய பெருமை உணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது
15. பனாரஸில் (வாரணாசியில்) மத்திய இந்துக் கல்லூரியை நிறுவியவர் - அன்னிபெசண்ட் அம்மையார்.
16. பனாரஸில் (வாரணாசியில்) இந்தக் கல்லூரி 1916ஆம் ஆண்டு யார் மூலமாக பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்பட்டது - பண்டித மதன்மோகன் மாளவியா.
17. எந்த ஆண்டு யார் எச்.எஸ்.ஆல்காட்.அவர்களின் மறைவுக்குப் பிறகு பிரம்மஞான சபையின் உலக அளவிலான தலைவராக அன்னிபெசண்ட் அம்மையார் பதவி வகித்தார்- 1907.
18. பிரம்மஞான சபையின் கொள்கைகளை அதன் தலைமையகம் - சென்னை.
19. எந்த ஆண்டு பிரிட்டன் முதல் உலகப்போரில் ஈடுபடும் அறிவிப்பை வெளியிட்டது -1914.
20. அன்னிபெசண்ட் அம்மையார் 1914 இல் எந்த வாரந்திர பத்திரிகை தொடங்கினார்- தி காமன்வீல்.
21. அன்னிபெசண்ட் அம்மையார் எந்த ஆண்டு "How India Wrought for Freedom" என்ற தலைப்பிலான புத்தகத்தைப் பதிப்பித்தார் - 1915.
22. அன்னிபெசண்ட் அம்மையார் எந்த ஆண்டு இல் நியூ இந்தியா என்ற தினசரியைத் தொடங்கினார்- 1915 ஜூலை 14.
23. அன்னிபெசண்ட் அம்மையார் அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கத்தின் அடிப்படையில் இந்தியாவில் தன்னாட்சி இயக்கத்தை துவக்கப்போவதாக எந்த ஆண்டு முறைப்படி அறிவித்தார்- 1915 செப்டம்பர் 28.
24. ஒன்று திலகர் தலைமையிலும் மற்றொன்று அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையிலும் எந்த ஆண்டு நாட்டில் இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன - 1916.
25. எந்த ஆண்டு எப்போது நடந்த பம்பாய் மாகாண மாநாட்டில் திலகரின் தன்னாட்சி இயக்கம் நிறுவப்பட்டது -1916- பம்பாய் பெல்காமில்.
26. திலகரின் இயக்கத்துக்கு எத்தனை கிளைகள் ஒதுக்கப்பட்டன - 6.
27. அன்னிபெசன்ட் அம்மையார் தெடங்கிய தன்னாட்சி இயக்கத்தின் கிளைகள் அமைந்த இடங்கள்- 6.
    1. கான்பூர்
    2. அலகாபாத்.
    3. பனாரஸ்
    4. மதுரா.
    5. கள்ளிக்கோட்டை
    6. அகமதுநகர்.
28. மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் பிரபலமடைந்திருந்த திலகரின் இயக்கம், ஏப்ரல் 1917இல் 14 ஆயிரம் உறுப்பினர்களில் இருந்து எந்த ஆண்டு இன் தொடக்கத்தில் 32 ஆயிரம் உறுப்பினர்களாக அதிகரித்தது - 1918.

29. தன்னாட்சி பற்றிய கொள்கைகளை பரப்பியதற்காக 1916 ஜூலை 23இல் எத்தனையாவது பிறந்த நாளில் திலகர் கைது செய்யப்பட்டார் - 60.

30. எந்த ஆண்டு அயர்லாந்தில் தன்னாட்சி இயக்கம் முடுக்கம் பெற்றதை அடுத்து அயர்லாந்து அரசு சட்டத்தின் (1920) கீழ் வட அயர்லாந்தின் ஆறு நாடுகளிலும் பிறகு தெற்கில் ஆங்கிலோ-அயர்லாந்து ஒப்பந்தத்தின் (1921) கீழ் எஞ்சிய 26 நாடுகளிலும் தன்னாட்சி அமையப்பெற்றது - 1880.

31. அன்னிபெசன்ட் அம்மையார் தொடங்கிய தன்னாட்சி இயக்கத்தில் உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டவர்கள்-

1. ஜவகர்லால் நேரு.
2. முகமது அலி ஜின்னா.
3. பி. சக்கரவர்த்தி .
4. ஜிதேந்திர லால்பானர்ஜி.
5. சத்தியமூர்த்தி.
6. சுரேந்திரநாத் பானர்ஜி.
7. கலிக்குஸ்மான்.
8. மதன் மோகன் மாளவியா.

32. காங்கிரஸ் கட்சியிடமிருந்து எந்த அறிகுறியும் தென்படாத காரணத்தால் எந்த ஆண்டு மதராஸில் தன்னாட்சி இயக்கத்தை அன்னிபெசண்ட் தொடங்கினார் - செப்டம்பர் 1916.

33. அன்னிபெசண்ட் அம்மையார் மற்றும் அவரது கூட்டாளிகள் பி.பி வாடியா , ஜார்ஜ் அருண்டேல் ஆகியோர் அரசியல் காரணங்களுக்காக ஊட்டியில் சிறை பிடிக்கப்பட்ட ஆண்டு - 1917 ஜூன்.

34. அன்னிபெசண்ட் பெசண்ட் அம்மையாருக்கு ஆதரவாக அரசப் பட்டத்தை துறந்தவர் - சர்.எஸ். சுப்ரமணியம்.

35. தலைவர்கள் விடுதலையாகாவிட்டால் சட்டமறுப்பு இயக்கத்தை அரசுக்கு எதிராகப் பயன்படுத்துவது குறித்து எந்த ஆண்டு கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் திலகர் வலியுறுத்தினார்- 1917 ஜூலை 28.

36. தன்னாட்சி நிறுவனங்கள் மற்றும் பொறுப்பான அரசு என்பதே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் குறிக்கோள் என்று புதிய வெளியுறவு அமைச்சர் மாண்டேகு எந்த ஆண்டு அறிவித்தார் - 1917 ஆகஸ்டு 20.

37. 1917 இல் இந்திய தேசிய காங்கிரஸ் கல்கத்தா மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் - அன்னிபெசண்ட்.

38. தன்னாட்சி இயக்கத்தின் வீழ்ச்சி.

39. indian unrest' என்ற புத்தகத்தின் ஆசிரியர் - வேலண்டைன் சிரோலி.

40. வேலண்டைன் சிரோலிக்கு எதிராக தாம் தொடுத்த அவதூறு வழக்கை நடத்துவதற்காக செப்டம்பர் எந்த ஆண்டு திலகர் பிரிட்டனுக்குச் சென்றார் -1918.

41. பிரிட்டிஷ் அரசின் கீழ் இந்தியா தன்னாட்சி பெறுவது அல்லது கனடா ஆஸ்திரேலியா ஆகியவற்றின் வழியில் தன்னாட்சிப் பகுதித்தகுதியைப் பெறுவது ஆகியவற்றுக்காகப் பிரிட்டிஷ்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைக் கோருவதற்காக எந்த தன்னாட்சி இயக்கம் பெயர் மாற்றம் செய்யப்பட்டது -இந்திய காமன்வெல்த் லீக்.

42. 1929 இல் தன்னாட்சி இயக்கத்தை இந்திய லீக் என்று யார் மாற்றம் செய்தார் -வி.கே கிருஷ்ணமேனன்.
43. பிரிட்டிஷார் எந்த ஆண்டு மிண்டோ- மார்லி சீர்திருத்தங்களை நிறைவேற்றினர் - 1909.
44. சோஹன் சிங் பக்னாவைத் தலைவராகக் கொண்டு பசிபிக் பிரதேச இந்துஸ்தான் அமைப்பை சான்பிரான்சிஸ்கோவில் வசித்துவந்த லாலா ஹர்தயாள் எந்த ஆண்டு நிறுவினார் - 1913.
45. பசிபிக் பிரதேச இந்துஸ்தான் அமைப்பு எவ்வாறு அழைக்கப்பட்டது - கதார் கட்சி.
46. உருது மொழியில் கதார் என்றால் என்ன பொருள் - கிளர்ச்சி.
47. எந்த பத்திரிகையையும் கதார்கட்சி வெளியிட்டது - கதார்.
48. காதர் கட்சி பற்றி:
    1. அமெரிக்கா மற்றும் கனடாவில் குடியேறிய சீக்கியர்களை பெரும்பாலும் இந்த கட்சியில் இடம் பெற்றிருந்தனர்.
    2. காதர் என்ற பத்திரிகையும் இக்கட்சி வெளியிட்டது.
    3. 1913 நவம்பர் முதல் தேதி சான்பிரான்சிஸ்கோவில் இது பதிப்பிக்கப்பட்டு வெளியானது.
    4. இப்பத்திரிகை உருது, பஞ்சாபி,. இந்தி மற்றும் இதர மொழிகளிலும் வெளியானது.
49. எப்போது சான் பிரான்சிஸ்கோவில் இது பதிப்பிக்கப்பட்டு வெளியானது - 1913 நவம்பர் -1.
50. எந்த பெயரிடப்பட்ட கப்பல் இந்தியாவில் இருந்து குடியேறிவர்களுடன் கனடாவில் இருந்து திரும்பியது - கோமகடமரு.
51. இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் விடுதலை இயக்கத்திற்கும் வழிவகுத்த ஒப்பந்தம்-லக்னோ ஒப்பந்தம்.
52. லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி - ஜின்னா.
53. ஜின்னாவை "இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் தூதர்" என்று அழைத்தவர் - சரோஜினி அம்மையார்.
54. காலனி ஆதிக்க அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள்.
55. தேசியவாதிகளின் நடவடிக்கைகள் பற்றியத் தகவல்களை இரகசியமாகச் சேகரிப்பதற்காக எந்த ஆண்டு யார் குற்ற உளவுத்துறையை (CID) உருவாக்கினார் - 1903, கர்சன் பிரபு.
56. சுதேசி இயக்கம் - 1905.
57. போல்ஷ்விக் புரட்சி -1917.
58. மதராஸ் தொழிற்சங்கம் - 1918 ( பி.பி. வாடியா)
59. பத்திரிக்கைகள் (குற்றங்களுக்குத் தூண்டும்) சட்டம் - 1908.
60. வெடிபொருட்கள் சட்டம் - 1908.
61. இந்திய பத்திரிகைகள் சட்டம் - 1910.

62. தேசத்துரோக கூட்டங்கள் தடுப்புச் சட்டம் - 1911

63. வெளிநாட்டினரின் நுழைவுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் வெளிநாட்டினர் அவசரச்சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது - 1914.

64. போருக்குப் பிறகு துருக்கியின் நிலையைப் பலவீனப்படுத்த முடிவுசெய்தபிரிட்டன் எந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது - செவ்ரெஸ்.

65. கலீபா மற்றும் இசுலாமிய புனிதத் தலங்களின் பொறுப்பாளராகத் யார் விளங்கினார் - துருக்கிய சுல்தான்.

66. போருக்குப் எந்த இரு முஸ்லிம் சகோதரர்கள் கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினர் - மௌலானா முகமது அலி, மௌலானா சௌஹத் அலி.

67. தென்னாப்பிரிக்காவில் ஆற்றிய மனிதாபிமானப் பணிகளுக்காக காந்தியடிகளுக்கு எந்த தங்கப்பதக்கம் வழங்கிசிறப்பிக்கப்பட்டது - கெய்சர்-இ- ஹிந்த்.

68. எந்த ஆண்டு ஆம்புலன்ஸ் படையில் இந்திய ஆர்வலர்களின் ஒரு அதிகாரியாகச் செயல்பட்ட அவரது சேவைகளைப் பாராட்டி ஜுலு போர் வெள்ளிப்பதக்கம் காந்தியடிகளுக்கு வழங்கப்பட்டது - 1906.

69. 1899 -1900 களில் போயர் போரின்போது தூக்குபடுக்கை கொண்டு செல்வோர் படையில் இந்திய ஆர்வலர்களின் துணைக் கண்காணிப்பாளராக சேவை புரிந்தமைக்காக காந்திக்கு எந்த வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டது - போயர் போர்.

70. கிலாபத் இயக்கத்தின் தொடர்பில் ஒத்துழையாமை இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கியபோது திரும்ப ஒப்படைத்த பதக்கங்கள்:

1. கெய்சர் - இ - ஹிந்த்.
2. ஜு லு போர் வெள்ளிப் பதக்கம்.
3. போயர் போர் வெள்ளிப்பதக்கம்.

71. கடந்த ஒரு மாத காலமாக நடந்த நிகழ்வுகளை பார்க்கும்போது கிலாபத் இயக்க விஷயத்தில் ஏகாதிபத்திய அரசு நேர்மையற்ற நியாயமற்ற வகையிலும் மற்றும் கிரிமினல் போலவும் நடந்து கொண்டதுடன், தங்கள் நேர்மையற்ற தன்மையை பாதுகாக்க தவறுக்கு மேல் தவறு செய்தன. இத்தகைய அரசு மீதான மதிப்பையோ அல்லது அன்பையோ என்னால் இருப்பு வைக்க இயலவில்லை" என்று பதக்கத்தை திருப்பி அளித்தவர் - மகாத்மா காந்தி.

72. எந்த ஆண்டின் போல்ஷ்விக் புரட்சியின் வெற்றி இந்திய தொழிலாளர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது - 1917.

73. 1918 இல் முதன்முறையாக அமைக்கப்பட்டத்தொழிற்சங்கமாகயார் அவர்களால் மதராஸ் தொழில் சங்கம் நிறுவப்பட்டது - பி.பி.வாடியா.

74. எந்த ஆண்டில் 1,40,854 உறுப்பினர்களைக் கொண்ட 64 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பம்பாயில் லாலா லஜபதி ராயை சந்தித்தனர்-1920 அக்டோபர் 30.

75. அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸை நிறுவியவர் - லாலாலஜபதிராய்.

76. 1919 - 1920 இல் 107 ஆக இருந்த பதிவு பெற்ற தொழிற்சங்கங்களின்எண்ணிக்கை1946-1947இல் எவ்வளவாக அதிகரித்தது - 1833.

77. முதல் உலகப்போரில் தோற்றது- துருக்கி.

78. செவ்ரேஸ் உடன்படிக்கை துருக்கியின் கலிபாவை நிலை தாழ்த்தி கட்டியதன் விளைவாக கிலாபத் இயக்கம் தோன்றியது.

79. கிலாபத் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்ட முக்கிய முஸ்லிம் தலைவர்கள் :

    1. மௌலானா அபுல் கலாம் ஆசாத்.
    2. M.A. அன்சாரி.
    3. ஷேக் சௌகத் அலி சித்திக்.
    4. சையது அதுல்லா புகாரி.

80. தொழிற்சாலை பணியாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்காக தங்களின் குரல்களை எழுப்பியவர்கள் :

    1. சோரப்ஜி ஷபூர்ஜி , என்.எம். லோக்காண்டே (பம்பாய்).
    2. சசிபாத பானர்ஜி (வங்காளம்).

81. பம்பாயில் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசை லாலா லஜபதி ராய் தலைமையில் நிறுவப்பட்டது (ATUC) (1920, 64 தொழிற்சங்கங்கள்,1,40,854 பிரதிநிதிகள்).

82. 1919 - 1920 இல் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் - 107.

83. 1946 - 1947 இல் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள்- 1833.

84. ஜாலியன் வாலாபாக் படுகொலை -1919 ஏப்ரல் 13.

85. நியூ இந்தியா -1915.

86. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் முதல் தலைவர் (AITUC) -லாலா லஜபதி ராய்.

87. 1916 ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்- முஸ்லிம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கைகளை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது.

88. 1913-இல் காதர் கட்சி யாரால் நிறுவப்பட்டது -லாலா ஹர்தயால்.

89. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது - அன்னி பெசண்ட்.

90. லக்னோ ஒப்பந்தத்தின் தலைமை சிற்பி -முகமது அலி ஜின்னா.

# 12TH- STD - காந்தியடிகள் தேசிய தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றிணைத்தல் -

**PAGE NO :47 12TH STD TOTAL QUESTION -83**

1. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி எந்த ஆண்டு போர்பந்தரில் பிறந்தார் - 1869.
2. எந்த ஆண்டு காந்தி இந்தியா திரும்பியபோது தென்னாப்பிரிக்காவின் இனவாத அரசு விதித்த சமத்துவமில்லாத நிலைமைகளுக்கு எதிரான காந்தியடிகளின் போராட்டங்கள் ஒரு சாதனையாக இருந்தன - 1915.
3. யாருடைய செயல்பாடுகள் மற்றும் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவரைத் தனது அரசியல் குருவாக அடையாளம் கண்டார் - கோபால கிருஷ்ண கோகலே.
4. 1917 காந்தியடிகளின் முதல் சத்தியாகிரக போராட்டம்- சம்பரான் சத்யாகிரக போராட்டம். பிகார், கருநீலச்சாய செடி (இண்டிகோ), 3/20.
5. சம்பரானில் இருந்த விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று, இந்திய மக்களை ஒன்றிணைக்கும் முதல் முயற்சியைக் யார் மேற்கொண்டது - காந்தியடிகள்.
6. அகமதாபாத் ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு உண்ணாவிரதம் இருந்தவர் - காந்தியடிகள். 2 - வது போராட்டம்.
7. நில வருவாய் வசூலை ரத்து செய்யுமாறு காலனி ஆட்சி நிர்வாகத்திடம் கேதா மாவட்ட விவசாயிகள் கோரிய ஆண்டு - 1918.
8. அரசின் பஞ்சகால விதியின்படி, பயிர்சாகுபடி சராசரியாக எத்தனை சதவீதத்துக்கும் குறைவாக இருந்தால் பயிரிடுவோர் முழு நிலவரி ரத்துக்கு தகுதிபெறுவர் -25.
9. ஏழை விவசாயிகள் சார்பாக யாருடன் இணைந்து தலையிட்ட காந்தியடிகள் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டு இந்த எதேச்சதிகாரம் மற்றும் பழிவாங்கும் நடவடிக்கையை எதிர்த்து சாகும்வரைப் போராட்டம் நடத்துமாறு அறிவுறுத்தினார் - விதல்பாய் பட்டேல்.
10. இந்திய பணியாளர் சங்கத்தை கோபால கிருஷ்ண கோகலே நிறுவிய ஆண்டு - 1905.
11. பின்தங்கிய, ஊரக மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நாட்டின் முதலாவது அமைப்பு -இந்திய பணியாளர் சங்கம்.
12. இந்தியாவுக்கான பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர்- எட்வின் மாண்டேகு.
13. இந்தியாவுக்கான அரசப்பிரதிநிதி (வைசிராய்) -செம்ஸ்ஃபோர்டு.
14. எட்வின் மாண்டேகு, செம்ஸ்ஃபோர்டு இந்தியாவுக்கான அரசியல் சாசன மாற்றங்களை அறிவித்தனர். அவையே பின்னர் 1919 இன் எந்த சட்டம் என்று அழைக்கப்பட்டன -இந்திய கவுன்சில்கள் சட்டம்.
15. நூற்றாண்டின் திருப்பத்தில் தங்கள் குரல்களை எழுப்பின.

1. வங்காளத்திலும் இந்தியாவின் கிழக்குப் பகுதிகளிலும் தொடங்கப்பட்டது-நாமசூத்ரா இயக்கம்.
2. இந்தியாவின் வடமேற்கு பகுதியில் தொடங்கப்பட்டது -ஆதிதர்மா இயக்கம்.
3. மேற்கு இந்தியாவில் தொடங்கப்பட்டது -சத்யசோதக் இயக்கம் .
4. தென்னிந்தியாவின் தொடங்கப்பட்டது - திராவிட இயக்கங்கள் .

16. 1872 ஆம் ஆண்டு ஜோதி ராவ் பூலேவின் புத்தகம் எந்த தலைப்பில் முதலில் வெளிவந்தது - குலாம்கிரி.
17. ஜோதிராவ் பூலேவின் எந்த அமைப்பு பிராமணியத்தின் கொடுங்கோல் மற்றும் சுரண்டல் ஆகியவற்றிலிருந்து ஒடுக்கப்பட்ட சாதியினரை விடுவிப்பதற்கான அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது - சத்யசோதக் சமாஜ்.
18. பிராமணரல்லாதார் இயக்கங்களில் இருந்து வெளியான இரண்டு போக்குகள் எவை
    1. கீழ்நிலை சாதிகளுக்குச் சமஸ்கிருதத்தைச் சொல்லிக் கொடுப்பது.
    2. அந்தக் காலகட்டத்தில் தீவிரமாக இருந்த ஏழைகளுக்கு ஆதரவாகவோ அல்லது முற்போக்குத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்கு ஆதரவான இயக்கங்கள் ஆகியன செயல்பட்டன.
19. பிராமணர்கள் ஆதிக்கத்திற்கு அதிகக் காரணம் அவர்கள் வெறும் 3.2 சதவீதம் மட்டுமே மக்கள் தொகையில் இடம்பெற்றிருந்தாலும் அவர்களில்- எத்தனை சதவீதம் பட்டாதாரிகளாய் இருந்தனர்- 72.
20. தீவிரமான தலித் பகுஜன் இயக்கம் அம்பேத்கர். தலைமையிலும் சுயமரியாதை இயக்கம் தந்தை பெரியார் ஈ.வே. ராமசாமி தலைமையிலும் உருவாகி சமூக நீதி சார்ந்து அடிப்படை மாற்றம் கோரும் இயக்கங்கள் இந்த இரண்டு பகுதிகளிலும் செயல்பட்டன .
21. 1919 இல் இயற்றப்பட்ட சட்டம் - இந்திய கவுன்சில்கள் சட்டம் ,ரௌலட் சட்டம்.
22. எந்த மாதம் ரௌலட் சட்டத்தை அரசு நிறைவேற்றியது - 1919 மார்ச்.
23. எந்தவித நீதிமன்ற விசாரணையுமின்றி எவரையும் சிறையில் அடைக்க அரசுக்கு எந்த சட்டம் அதிகாரமளித்தது - ரௌலட் சட்டம்.
24. காந்தியடிகள் நிறுவிய எந்த சபை, இந்தச் சட்டத்தை மீறுவது என்று முதன்முதலாக உறுதி ஏற்றது - சத்தியாகிரக சபை
25. 1919 எந்த மாதம் அமிர்தசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக் கொடுமை- ஏப்ரல்- 13.
26. யார் யார் கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதியான வகையில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக இரண்டாயிரத்துக்கும் அதிகமான மக்கள் போராட்டக் களத்தில் குழுமியிருந்தனர் - சத்தியபால், சாய்புதீன் கிச்லு.
27. பஞ்சாபின் துணை நிலை ஆளுநர் - மைக்கேல் ஓ டையர்.

28. ராணுவக் கமாண்டராக பதவி வகித்தவர் - ஜெனரல் ரெஜினால்டு டையர்.

29. அரசு தகவல்களின் படி உயிரிழப்புகள் எந்த எண்ணிக்கையில் இருந்தபோதிலும் உண்மையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கக்கூடும் - 379.

30. ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பிறகு யார் தனது அரசப் பட்டத்தை உடனடியாகத் துறந்தார் - இரவீந்திரநாத் தாகூர்.

31. கிலாபத், பஞ்சாப் கொடுமை ஆகிய இரண்டு காரணங்களால் எந்த இயக்கம் தொடங்கப்பட்டது - ஒத்துழையாமை.

32. ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு-1920 செப்டம்பர்.
(கல்கத்தா காங்கிரஸ் மாநாடு - தீர்மானம்)

33. எந்த மாநாட்டில் காந்தியடிகளின் வற்புறுத்தலின் பேரில் ஒத்துழையாமை இயக்கம் தொடங்க முடிவு செய்யப்பட்டது -கிலாபத் மாநாடு.

34. துருக்கி சுல்தான் மற்றும் இசுலாமிய புனிதத் தலங்கள் தொடர்பானத இயக்கம் -கிலாபத் இயக்கம்.

35. ஜாலியன் வாலாபாக்கில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு - பஞ்சாப் கொடுமை.

36. ஜாலியன் வாலாபாக் படுகொலைகளுக்குப் பழி தீர்க்கும் விதமாக 1940 மார்ச் 30 லண்டனின் காக்ஸ்டன் அரங்கில் மைக்கேல் ஓ டையரை படுகொலை செய்தவர் - உதம் சிங்.

37. கால்சா ஆதரவற்றோர் காப்பகத்தில் வளர்க்கப்பட்ட சீக்கிய இளைஞர் - உதம் சிங்.

38. லண்டனின் எந்த சிறையில் உதம் சிங் தூக்கிலிடப்பட்டார் - பெண்டோன்வில்லே.

39. மௌலானா செகத் அலி மற்றும் முகமது அலி என்ற சகோதரர்கள் யார் உடன் இணைந்து கிலாபத் இயக்கத்தின் முக்கியத் தலைவர்களாக விளங்கினர் - மௌலானா அபுல் கலாம் ஆசாத்.

40. கிலாபத் மாநாட்டில், காந்தியடிகளின் வற்புறுத்தலின் பேரில் 1920 எந்த மாதம் முதல் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது -ஆகஸ்டு.

41. அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நீதிமன்றங்களைப் புறக்கணிக்கும் திட்டத்தை எங்கு கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டம் முடிவு செய்தது - அலகாபாத்தில்.

42. 1920 -ஆண்டு எந்த மாதம் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் அமர்வில் காலனி ஆதிக்க அரசுடன் ஒத்துழையாமையைக் கடைபிடிப்பது என்ற காந்தியடிகளின் யோசனைகளை ஏற்றுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது -செப்டம்பர்.

43. மொழிசார்ந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகளை அங்கீகரித்து அமைப்பதற்கு வகை செய்யும் மற்றொரு முக்கியத் தீர்மானம் எந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது -நாக்பூர்.

44. வேல்ஸ் இளவரசர் மேற்கொண்ட பயணமும் புறக்கணிக்கப்பட்ட ஆண்டு - 1921.

45. எந்த பகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களும் வரி செலுத்த மறுத்துக் கூட்டம் கூட்டமாக நகரங்களைக் காலி செய்து வெளியேறினர் - சிராலா-பெராலாப்.

46. சி. இராஜாஜி, எஸ். சத்தியமூர்த்தி, தந்தை ஈ.வே.ரா. பெரியார் ஆகிய தலைவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட இயக்கம் - ஒத்துழையாமை.

47. அரசு ஏழு நாட்களுக்குள் பத்திரிக்கைச் சுதந்திரத்தை மீட்டு சிறைக்கைதிகளை விடுதலை செய்யாவிட்டால் பர்தோலியில் வரிகொடா பிரச்சாரங்கள் உட்பட சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கப்போவதாக காந்தியடிகள் எந்த ஆண்டு அறிவித்தார் - பிப்ரவரி 1922.

48. கரையோர ஆந்திராவின் ராம்பா பகுதியில் யார் தலைமையில் பழங்குடியினர் கிளர்ச்சி செய்தனர் - அல்லூரி சீதாராம ராஜு.

49. எங்கு முஸ்லிம் (மாப்பிள்ளை) விவசாயிகள் ஆயுதமேந்தி உயர்வகுப்பு நிலப்பிரபுக்கள் மற்றும் பிரிட்டிஷாருக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்-மலபார்.

50. உத்தரப்பிரதேசத்தில் கோரக்பூர் மாவட்டத்தில் எந்த கிராமத்தில் மதுக் கடைகள் , உள்ளூர் சந்தையில் அதிக விலைக்குப் பொருட்கள் விற்கப்படுவதைக் கண்டித்து ஒரு தன்னார்வக் குழு ஆர்ப்பாட்டங்களை நடத்தியது - சௌரி சௌரா.

51. எந்த ஆண்டு 3,000 நபர்களுடன் நடந்த ஒரு காங்கிரஸ் கட்சிப் பேரணி மீது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக் குழுவினர் காவல் நிலையத்தைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியதோடு அதை எரித்ததில் 22 போலீசார் உயிரிழந்தனர் - 1922 பிப்ரவரி 5.

52. இந்த நிகழ்வை அடுத்து காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப்பெறுவதாக அறிவித்தார்.

53. கைது செய்யப்பட்டு எத்தனை ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற காந்தியடிகள் பற்றி ஜவஹர்லால் நேருவும் சுபாஷ் சந்திர போஸும் கடுமையாக விமர்சனம் செய்தனர் - 6.

54. துருக்கி மக்கள் யார் தலைமையில் கிளர்ந்தெழுந்து சுல்தானிடம் இருந்து அரசியல் அதிகாரத்தைப் பறித்து கலிபா என்ற நடைமுறையை ரத்து செய்துவிட்டு மதமும் அரசியலும் இணைந்து பயணிக்க முடியாது என்று அறிவித்த நிலையில் கிலாபத் இயக்கம் தேவையற்றுப் போனது - முஸ்தபா கமால் பாட்சா.

55. ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்ற பிறகு, அடுத்து என்ன என்ற கேள்வி எழுந்தது யார் யார் புதிய வழியில் செயல்பாட்டை அறிவித்தனர் - சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு.

56. மத்திய சட்டப்பேரவைக்கு நடந்த தேர்தல்களில் சுயராஜ்ய கட்சி சிறப்பாகப் பங்கேற்று 101 இடங்களில் எத்தனை இடங்களைக் கைப்பற்றியது - 42.

57. மதவாதப் போக்கு அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் காந்தியடிகள் எத்தனை நாட்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார் - 21 நாட்கள்.

58. எஸ். ஏ. டாங்கே, எம். என். ராய், முஜாஃபர் அகமது, ஆகியோர் கட்சியின் மூத்தத் தலைவரான தமிழ்நாட்டின் சிங்காரவேலர் உள்ளிட்ட தலைவர்களுடன் சேர்ந்து எந்த கட்சிகளைத் தொடங்கி வைத்தனர் - விவசாயிகள் மற்றும் தொழிலாளர் கட்சி.

59. ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபக்குல்லா ஆகிய இருவருக்கும் மரண தண்டனையும், வேறு 17 பேருக்கு நீண்டகால சிறைத் தண்டனையும் எந்த சதித்திட்ட வழக்கில் வழங்கப்பட்டன - காக்கோரி.

60. மத்திய சட்டப்பேரவை அரங்குக்குள் எந்த ஆண்டு பகத் சிங்கும், படுகேஷ்வர் தத்தும் வெடிகுண்டு ஒன்றை எறிந்தனர் - 1929 ஏப்ரல் 8.

61. எந்த ஆண்டு மீரட் சதித்திட்ட வழக்கு பதியப்பட்டு மூன்று டஜன் கம்யூனிச தலைவர்கள் நீண்ட கால சிறைத் தண்டனைகளைப் பெற்றனர் - 1929.

62. சைமன் குழுவில் யார் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தனர் - வெள்ளையர்கள்.

63. எந்த ஆண்டு மதராஸில் நடந்த காங்கிரஸ் வருடாந்திர மாநாட்டில் இந்தக் குழுவை புறக்கணிக்க முடிவு செய்யப்பட்டது - 1927.

64. 1928 -காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை வகித்த மோதிலால் நேருவைத் தொடர்ந்து அவரது மகன் ஜவஹர்லால் நேரு எந்த ஆண்டு நடந்த காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார் - 1929.

65. 1929 டிசம்பர் 31எங்கு மூவர்ணக்கொடி ஏற்றப்பட்டது - லாகூர்.

66. சட்டமறுப்பு இயக்கம் யார் தலைமையில் தொடங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது - காந்தியடிகள்.

67. அனைவருக்கும் அவசியமான பொருளான உப்பு மீது அநியாய வரி விதிக்கப்பட்டதை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டம் - தண்டி யாத்திரை.

68. காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து குஜராத் கடற்கரையோரம் உள்ள தண்டி வரை எத்தனை தொண்டர்களுடன் 375 கிலோ மீட்டர் தண்டி யாத்திரை மேற்கொண்டார் -78.

69. காந்தியடிகள் யாத்திரையாக நடந்து தண்டியை 25 ஆவது நாளில் சென்று அடைந்த ஆண்டு - 1930 ஏப்ரல் 6.

70. தமிழ்நாட்டில் யார் தலைமையில் உப்பு சத்தியாகிரக யாத்திரை வேதாரண்யம் நோக்கி நடந்தது - இராஜாஜி.

71. தமிழ்நாட்டில் இராஜாஜி தலைமையில் உப்பு சத்தியாகிரக யாத்திரை திருச்சி முதல் வேதாரண்யம் வரை எத்தனை மைல்கள் நடைபயணம் மேற்கொள்ளப்பட்டது - 150 மைல்கள்.

72. 1930 ஏப்ரல் -13 ஆரம்பித்த இந்த நடைபயணம் முடிவடைந்த மாதம் -1930 ஏப்ரல் 28.

73. நடைபயணத்தில் ஈடுபடுவோருக்கு அடைக்கலம் தந்தால் கடும் நடவடிக்கைகளைச் சந்திக்க நேரிடும் என்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் யார் எச்சரிக்கை விடுத்தார் - ஜெ. ஏ. தார்ன்.

74. எந்த ஆண்டு காந்தி-இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது - 1931 மார்ச் 5.

75. காங்கிரஸின் ஒரேயொருப் பிரதிநிதியாக லண்டனில் நடந்த எத்தனையாவது வட்ட மேசை மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டார் - 2 வது.

76. தலித் பகுஜன் என்ற இயக்கத்தை தொடங்கியவர்-அம்பேத்கர்.

77. நாட்டின்மையப் பகுதியில் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சாதியாகக் கருதப்பட்ட மஹர் சாதியில் ராணுவ வீரரின் மகனாகப் பிறந்த யார் அவரது சாதியில் பத்தாம் வகுப்பை நிறைவு செய்த முதலாமவராகத் திகழ்ந்தார் - டாக்டர் அம்பேத்கர்.

78. எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்த அம்பேத்கர் கல்வி உதவித்தொகை பெற்று பட்டதாரி ஆனா ஆண்டு - 1912.

1. பரோடா அரசின் கல்வி உதவித்தொகை - அமெரிக்கா சென்று பட்டமேற்படிப்பு, கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம்.

2. பொருளாதார படிப்பு - லண்டன் .

79. மானுடவியல் தொடர்பான சர்வதேசமாநாட்டில் கலந்துகொண்டு இந்தியாவின் சாதிகள் (Castes in India) என்ற தலைப்பில் அம்பேத்கர் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்த ஆண்டு - 1916.

80. மூக் நாயக் (வாய்பேச முடியாதவர்களின் தலைவர்) என்ற பத்திரிக்கை தொடங்கியவர் - அம்பேத்கர்.

81. பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை (தனித்துவிடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு) அமைப்பைத் தொடங்கியவர் -அம்பேத்கர்

82. ஊருணிகள் மற்றும் கிணறுகளில் தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தரவேண்டிய அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர அமைப்பைத் தொடங்கினார் - மஹத் சத்தியாகிரகம்.

83. வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீடுகள் குறித்து பிரிட்டிஷ் அரசு அறிவித்த ஆண்டு-1932 ஆகஸ்ட்.

84. அம்பேத்கர் மற்றும் காந்தியடிகளுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தம்-பூனா ஒப்பந்தம்.

85. அம்பேத்கர் ஆரம்பித்த இரண்டு கட்சி:

1. சுதந்திர தொழிலாளர் கட்சியை -1937.
2. பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பை -1942.

86. 1942 ஆம் ஆண்டு பாதுகாப்புத் துறை ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் - அம்பேத்கர்.

87. அரசப்பிரதிநிதியின் (வைசிராய்) அமைச்சரவையில் அமைச்சராக இடம்பிடித்தவர்-அம்பேத்கர்.

88. நாட்டுக்கு ஆற்றிய சேவைகளுக்கு மகுடம் சூட்டும் விதமாக சுதந்திர இந்தியாவின் அரசியல்சாசன வரைவுக் குழுவின் தலைவராக யார் தேர்ந்தெடுக்கப்பட்டார் -அம்பேத்கர்.

89. இந்தியாவின் பல நகரங்களுக்கு வேல்ஸ் இளவரசர் பயணம் மேற்கொண்ட ஆண்டு- 1921.

90. 1923- மோதிலால் நேரு மற்றும் சி.ஆர். தாஸ் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்ட கட்சி - சுயராஜ்யக் கட்சி.

91. காந்தி-இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு -1931 மார்ச் 11. (கராச்சியில் நடந்த காங்கிரஸ் மாநாடு ஏற்றுக்கொண்டது)

92. இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது- (லாகூர் காங்கிரஸ் மாநாடு)- 1929 டிசம்பர் -31.

93. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா வந்த ஆண்டு -1915.

94. காங்கிரஸின் அடிப்படையை விரிவாக்கம் நடவடிக்கையாகப் பணியாளர்கள் கிராமங்களுக்கு சென்று எவ்வளவு குறைவான கட்டணத்தில் கிராமத்தினரை காங்கிரசில் சேர்க்க வேண்டும் - 4 அணா (அ) 25 பைசா.

95. காந்தியடிகள் - ஒத்துழையாமை இயக்கம் - 6 -ஆண்டுகள் சிறை .

96. இந்திய கவுன்சில் சட்டம் - 1919.

1. மத்திய சட்ட பேரவை மொத்த உறுப்பினர்கள் - 144.

2. மத்திய சட்டப்பேரவை நியமன உறுப்பினர்கள்- 41.
3. மாநிலங்களவை மொத்த உறுப்பினர்கள் - 60.
4. மாநிலங்களவை நியமன உறுப்பினர்கள்- 26.

97. சுயராஜ்யம் வேண்டுவோர் மற்றும் மாற்றம் வேண்டுவோர் என்ற குழுவில் தமிழ்நாட்டிலிருந்து இணைந்தவர் -சத்தியமூர்த்தி.சித்தரஞ்சன் தாஸ்,மோதிலால் நேரு.

98. எந்த மாற்றமும் தேவையில்லை மாற்றம் விரும்பாதோர் என்று அழைக்கப்பட்ட குழுவில் தலைமை வகித்தவர்கள்- ராஜாஜி,வல்லபாய் பட்டேல்,ராஜேந்திர பிரசாத்.

1. அகமதாபாத் - குஜராத் -பருத்தி ஆலை தொழிலாளர்கள் சத்தியாகிரகம்.
2. மஹத் - மகாராஷ்டிரா - மஹத் சத்தியாகிரகம்.
3. 1917 -சம்பரான் சத்தியாகிரகம்- பீகார் -அவுரி விவசாயிகள் இயக்கம்.
4. 1918 - கேதா சத்தியாகிரகம்- குஜராத் -விவசாயிகள் சத்யாகிரகம்.
5. 1919 - ஜாலியன் வாலாபாக் படுகொலை / ரௌலட் சட்டம் -பஞ்சாப்-அமிர்தசரஸ்.
6. 1920 - கிலாபத் இயக்கம் / ஒத்துழையாமை இயக்கம்.
7. 1921 -வேல்ஸ் இளவரசர் பயணம் .
8. 1922 - சௌளரி சௌரா சம்பவம்-உத்திரபிரதேசம்-ஒத்துழையாமை இயக்கம்-நிறுத்தம்.
9. 1923 - சுயராஜ்ய கட்சி தோற்றம்.
10. 1927 -சைமன் குழு நியமனம்.
11. 1928 - நேரு அறிக்கை.
12. 1928, கல்கத்தா மாநாடு - மோதிலால் நேரு தலைமை.
13. 1929, லாகூர் மாநாடு ஜவகர்லால் நேரு - தலைமை.
14. 1929-லாகூர் காங்கிரஸ் மாநாடு -பூரண சுயராஜ்யம்.
15. 1930 - உப்பு சத்தியாகிரகம் / முதல் வட்டமேசை மாநாடு.
16. 1931 - காந்தி-இர்வின் ஒப்பந்தம்- இரண்டாம் வட்டமேசை மாநாடு.
17. 1932 - பூனா ஒப்பந்தம்/ மூன்றாம் வட்டமேசை மாநாடு / வகுப்புவாரி.
18. 1937. சுதந்திர தொழிலாளர் கட்சியை.
19. 1942. பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பை.
20. 1942 பாதுகாப்புத் துறை ஆலோசனைக் குழுவின் - அம்பேத்கர்.

# 12TH-ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம்

**PAGE NO: 68 12TH STD - TOTAL QUESTION -97**

1. இந்தியப் பொதுவுடைமைக் (கம்யூனிஸ்ட்) கட்சியானது உஸ்பெகிஸ்தானிலுள்ள தாஷ்கண்டிலும் பின்னர் சோவியத் யூனியனிலும் எந்த ஆண்டு மாதத்தில் உருவாக்கப்பட்டது - 1920. அக்டோபர்
2. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்கள்.
   1. எம். என். ராய்
   2. அபானி முகர்ஜி
   3. எம்.பி.டி. ஆச்சார்யா
   4. முகமது அலி
   5. முகமது ஷாஃபிக்
3. எந்த ஆண்டு முதல் புரட்சிகர தேசியவாதக் குழுவினர் பெஷாவருக்கு வந்தனர் - 1921 ஜூன் 3.
4. கான்பூர் (போல்ஷ்விக்) சதி வழக்கு தொடுக்கப்பட்ட ஆண்டு - 1924.
5. மீரட் சதி வழக்கு தொடுக்கப்பட்ட ஆண்டு - 1929.
6. கான்பூர் சதி வழக்கு யார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது -ஹோம்ஸ்.
7. சௌரி செரா வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 172 விவசாயிகளுக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தவர் – ஹோம்ஸ்.
8. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்திய மண்ணில் பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு - 1925.
9. எந்த ஆண்டு இந்தியாவெங்கிலும் இருந்து வந்திருந்த பல்வேறு கம்யூனிஸ்ட்களின் குழுக்களின் மாநாடு ஒன்று நடந்தேறியது - டிசம்பர் 1925.
10. இந்த மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்து யார் சென்று கலந்துகொண்டார் - சிங்காரவலர்.
11. 1923 மே மாதம் முதல் நாள் முதன்முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடியவர் - சிங்காரவேலர்.
12. எந்த ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை (பொன்மலை, திருச்சிராப்பள்ளி) ஏற்பாடு செய்ததில் சிங்காரவேலர் முக்கியப் பங்கு வகித்தார் - 1928.
13. காரக்பூர் ரயில்வே பணிமனை வேலைநிறுத்தங்கள் நடைபெற்ற ஆண்டு - பிப்ரவரி , செப்டம்பர் - 1927.
14. லில்லுவா ரயில் பணிமனை வேலைநிறுத்தம் நடைபெற்ற ஆண்டு - 1928.ஜனவரி – ஜூலை.
15. கல்கத்தா துப்புரவுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் நடைபெற்ற ஆண்டு - 1928.
16. வங்காளத்தின் சணல் ஆலைகளில் பல்வேறு வேலைநிறுத்தங்கள் நடைபெற்ற ஆண்டு - 1929 - ஜூலை, ஆகஸ்ட்.
17. திருச்சிராப்பள்ளியின் பொன்மலை பணிமனையில் தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தம் நடைபெற்ற ஆண்டு - 1928. ஜூலை.

18. பம்பாயில் ஜவுளித் தொழிலாளர் வேலைநிறுத்தம் நடைபெற்ற ஆண்டு - 1928. ஏப்ரல்.
19. ஆங்கிலேய அரசு தொழிற்தகராறுகள் சட்டத்தை இயற்றிய ஆண்டு - 1928 .
20. பொதுமக்கள் பாதுகாப்பு மசோதா சட்டத்தை இயற்றிய ஆண்டு- 1928.
21. பகத்சிங், தற்போதைய பாகிஸ்தானின் ஒரு பகுதியான பஞ்சாப் மாநிலத்திலுள்ள லயல்பூர் மாவட்டம், ஜார்ன்வாலா என்ற இடத்தில் பிறந்தார் -1907 செப்டம்பர் 28.
22. பகத்சிங்கின் எத்தனை வயதில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது - 14.
23. ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் எனும் அமைப்பு யாரால் தோற்றுவிக்கப்பட்டது - சச்சின் சன்யால், ஜோகேஷ் சட்டர்ஜி.
24. ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிப்ளிகன் அசோசியேஷன் என்று பகத்சிங்காலும் அவரது தோழர்களாலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவ்வமைப்புத் திருத்தியமைக்கப்பட்ட ஆண்டு - செப்டம்பர் 1928.
25. ரஷ்யாவில் நடந்தேறிய அக்டோபர் புரட்சியும் சோசலிசச் சித்தாந்தங்களும் இந்தப் புரட்சியாளர்களிடையே பெரும் செல்வாக்கைச் செலுத்தியது - 1917.
26. சந்திரசேகர ஆசாத், சிவராம் ராஜகுரு, சுகதேவ் தாபர் ஆகியோருடன் ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் தலைவர்களில் ஒருவராக விளங்கினார் - பகத்சிங்.
27. 1929 ஏப்ரல் 8 இல் மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசியவர் - பகத்சிங்.
28. லாகூர் சிறைச்சாலையில் எப்போது அதிகாலையில் பகத்சிங் ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர் - 1931 மார்ச் 23.
29. 1928 டிசம்பர் மாதத்தில் லஜபதி ராய் மீது தாக்குதல் நடத்தியவர் - ஜேம்ஸ் ஏ. ஸ்காட்டு.
30. ராயின் மரணத்திற்கு பொறுப்பான லாகூர் காவல்துறைக் கண்காணிப்பாளர் ஜேம்ஸ் ஏ. ஸ்காட்டுக்குப் பதில் தவறுதலாக பலியானாவர் - சாண்டர்ஸ்.
31. 1920 பிற்பகுதியில் யார் சிட்டகாங் ஆயுதப் படைத்தளத்தைத் துணிகரமாகத் தாக்கியவர் - கல்பனா தத்.
32. கம்யூனிஸ்ட் தலைவர் -பி.சி.ஜோஷியைத் திருமணம் செய்து கொண்டவர்-கல்பனா தத்.
33. இந்தியக் குடியரசு ராணுவத்தைச் சேர்ந்தவர் -கல்பனா தத்.
34. Chittagong Armour Raiders Reminiscences- என்பது யாருடைய சுயசரிதை - கல்பனா தத்.
35. சிட்டகாங் ஆயுதப் படைத் தாக்குதலின் புரட்சிகரத் தலைவர் - சூரியாசென்.
36. வங்காளத்தில் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக பணிபுரிந்தவர் - சூர்யா சென்.
37. எப்போது இரவில் சிட்டகாங் படைத்தளம் தாக்கித் தகர்க்கப்பட்டது - 1930 ஏப்ரல் 18.
38. சூர்யா சென்-பிப்ரவரி 1933 இல் அவர் கைதானார்.
39. சூரியாசென் எப்போது தூக்கிலிடப்பட்டார் - 1934 ஜனவரி 12.

40. 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் - ஜதீந்திரநாத் தாஸ்.
41. மார்ச் 1931 நடந்த கராச்சி அமர்வு யார் தலைமையில் நடந்தது - சர்தார் வல்லபாய் படேல்.
42. 1929 -1930 இல் 311 கோடியாயிருந்த இந்திய ஏற்றுமதியின் மதிப்பு 1932 -1933 இல் எத்தனை கோடியாகச் சரிந்தது - 132 கோடி.
43. முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு - 1854.
44. பம்பாயில் பார்சி இனத்தைச் சேர்ந்த இந்தியரே பருத்தி ஆலையை முதன்முதலில் தொடங்கினார் - கவஸ்ஜீ நானாபாய் தவர் (1815 -1873)
45. 1914 ஆம் ஆண்டு வாக்கில், பம்பாய் மாகாணத்திற்குள் எத்தனை நூற்பு நெசவு மற்றும் பிற பருத்தி ஆலைகள் இருந்தன - 129.
46. 1875 -76 க்கும் 1913-14க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் பருத்தி ஜவுளி ஆலைகள் எண்ணிக்கை 47 லிருந்து எத்தனை ஆக அதிகரித்தது - 271.
47. முதல் பயணிகள் ரயில் பம்பாய்க்கும் தானவுக்குமிடையே இயங்கிய ஆண்டு - 1853.
48. பிரிட்டிவஷாரால் நிர்வகித்து, ரயில்வே நிறுவனங்களால் நடத்தப்பட்ட இந்த நிறுவனத்தில் 1911 - எத்தனை நபர்கள் பணியில் இருந்தனர் - 98,723.
49. 1853 ஏப்ரல் 16 , 3:35 பிற்பகல் அன்று இந்தியாவின் முதல் இரயில் பயணம் பம்பாயிலுள்ள போரி பந்தர் இரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு எவ்வளவு தொலைவிலுள்ள தானே சென்றடைந்தது - 34 கி.மீ.
50. முதல் சணல் உற்பத்தி ஆலை கல்கத்தாவில் எந்த ஆண்டு நிறுவப்பட்டது - 1855.
51. 1914 ஆம் ஆண்டில் கல்கத்தா மாகாணத்தில் மட்டும் எத்தனை ஆலைகள் இருந்தன - 64.
52. 1943 இல் ரவீந்திரநாத் தாகூரின் தாத்தா துவாரகநாத் தாகூர் எந்த இடத்தில் பெங்கால் நிலக்கரி நிறுவனம் நிறுவப்பட்டது - ராய்கஞ்ச்,
53. எந்த ஆண்டு பீகாரிலுள்ள சாகி நகரில் பாடா குழுமத்தால் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) - முதன்முதலில் சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாக அமைக்கப்பட்டது - 1907.
54. ஐரோப்பியர்கள் குழு ஒன்று வங்காள இரும்பு நிறுவனத்தை நிறுவ முயற்சித்த ஆண்டு- 1875.
55. வங்காள இரும்பு மற்றும் எஃகு ஆலை அமைக்கப்பட்ட ஆண்டு - 1889.
56. அதன் உற்பத்தி 1912-13இல் 31,000 டன்னிலிருந்து 1917-18இல் எத்தனை டன்னாக அதிகரித்துள்ளது - 1,81,000.
57. ஜே.என், டாடா எனப் பிரபலமாய் அறியப்பட்ட ஜாம்ஷெட்ஜி நுஸர்வஞ்சி டாடா. பரோடாவில்உள்ள நவ்சாரி என்ற இடத்தில் ஒரு பார்சி வணிகக் குடும்பத்திலிருந்து வந்தவர்.
58. இந்திய நவீனத் தொழிலகங்களின் தந்தை என அழைக்கப்படுப்பவர் - ஜாம்ஷெட்ஜி நுஸர்வஞ்சி டாடா.

59. எந்த ஆண்டு நிறுவப்பட்ட அவருடைய வர்த்தக நிறுவனம் டாடா குழுமம் ஆனது - 1868.

60. ஒரு தேசியவாதியாய், குர்லா, பம்பாயில் உருவாக்கிய தனது நிறுவனம் ஒன்றிற்கு எந்த பெயரிட்டார் - சுதேசி.

61. தோரப்ஜி டாடா அவரது தந்தையின் நீண்ட காலக் கனவான இரும்பு மற்றும் எஃகு நிறுவனத்தை எந்த ஆண்டில் நிறுவினார் - 1907.

62. எந்த ஆண்டு மிகப்பெருமளவில் டாடா நீர்மின்சக்தி நிறுவனம் உதயமானது - 1910.

63. இந்திய அறிவியல் கழகம் ஒன்றை டாடா குழுமம் எங்கு நிறுவியுள்ளது - பெங்களூர்.

64. முதல் முறையாக ஒரு தொழிற்துறை ஆணையம் நியமிக்கப்பட்ட ஆண்டு - 1916.

65. எந்த ஆண்டில் லக்னோவில் முதல் காகித ஆலை இந்திய முதலாளிகளால் - கூப்பர் பேப்பர் மில் என்ற பெயரில் அமைக்கப்பட்டது - 1882.

66. ஐரோப்பியர்களால் நிறுவப்பட்ட ஆலைகள் - இதகர் காகித ஆலை, பெங்கால் காகித ஆலை.

67. மதராஸ் நகரில் தென்னிந்திய தொழிற்சாலை நிறுவனம் சிமெண்ட் உற்பத்தியைத் தொடங்கிய ஆண்டு - 1904.

68. எந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன - 19 நூற்றாண்டு.

69. எந்த ஆண்டில் கான்பூரில் அரசால் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்பட்டது - 1860.

70. 1905 முதன் முதலாக இந்தியருக்குச் சொந்தமான தேசிய தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்று எங்கு அமைக்கப்பட்டது - கல்கத்தா.

71. எந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் மைசூர் கோலார் தங்கச் சுரங்கத்தில் தங்கம் வெட்டியெடுக்கும் பணி தொடங்கப்பட்டது - 19 நூற்றாண்டு.

72. சிந்தியா நீராவிக் கப்பல் கம்பெனி லிமிடெட் - 1919.

73. எந்த ஆண்டில் அவர்கள் பிரிட்டிஷாரின் பம்பாய் நீராவிக் கப்பல் நிறுவனத்தையும் வாங்கிவிட்டனர் - 1939.

74. பிரிட்டிஷாரின் பம்பாய் நீராவிக் கப்பல் துறையில் எத்தனை இந்திய நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன – 8.

75. கோயம்புத்தூரில் எந்த ஆண்டில் ஸ்டேன்ஸ் மில் (கோயம்புத்தூர் நூற்பு மற்றும் நெசவு ஆலை) நிறுவப்பட்டது - 1896.

76. கோயம்புத்தூரில் எத்தனை ஆலைகள் மற்றும் விதை நீக்கும் தொழிற்சாலைகள் தோன்றின - 29.

77. 1932 -கோயம்புத்தூர் மாவட்டத்தில் எந்த இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது - மதுக்கரை.

78. கான்பூர் சதி வழக்கில் நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் -

1. முசாபர் அகமது
2. சவுகத் உஸ்மானி
3. நளினி குப்தா
4. எஸ்.ஏ. டாங்கே

79. கான்பூர் சதி வழக்கில் ஆரம்பத்தில் எத்தனை பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டது -13.

80. டிசம்பர் 1925 இல் பம்பாயில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் குழுக்களின் மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்து கலந்து கொண்டவர் - எம். சிங்காரவேலர்.

81. எம். சிங்காரவேலர் :
    1. காலம் (1860 - 1946) - மதராஸில் பிறந்தார்
    2. இளமைக் காலத்தில் புத்த மதத்தைத் தழுவினார்
    3. திரு. வி. கல்யாணசுந்தரத்துடன் இணைந்து
    4. தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை தோற்றுவித்தார்
    5. 1923 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாளை முதல்முறையாக நாட்டில் மே தினத்தை கொண்டாடினார்.
    6. 1928 ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை ஏற்பாடு செய்ததில் முக்கிய பங்கு வகித்தார்.

82. முக்கிய வேலை நிறுத்தங்கள்:
    1. காரக்பூர் ரயில்வே பணிமனை வேலைநிறுத்தம் - 1927.
    2. லில்லுவா ரயில் பணிமனை வேலை நிறுத்தம் - 1928.
    3. கல்கத்தா துப்புரவு தொழிலாளர்களின் வேலைநிறுத்தம்- 1928.
    4. திருச்சிராப்பள்ளியில் பொன்மலை பணிமனையில் நடைபெற்ற தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தம் -1928.
    5. வங்காளத்தில் சணல் ஆலைகளில் நடைபெற்ற பல்வேறு வேலை நிறுத்தங்கள்-1929.
    6. பம்பாயில் ஜவுளி தொழிலாளர் வேலைநிறுத்தம். 1928.

83. மீரட் சதி வழக்கில் கைது செய்யப்பட்ட பிரிட்டானிய கம்யூனிஸ்ட் கட்சியால் அனுப்பிவைக்கப்பட்ட மூவர்- பிலிப் ஸ்ப்ராட்,பான் ப்ராட்லி,லெஸ்டர் ஹட்சின்சன். (மொத்தம் 32 - பேர் கைது செய்யப்பட்டனர்).

84. மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வாதாடியவர்கள் - கே.எ஼ப். நாரிமன், எம்.சி. சக்லா.

85. மீரட் சதி வழக்கு :
    1. 1933 ஜனவரி 16 இல் மீரட் அமர்வு நீதிமன்றம் கடுமையான தீர்ப்பு வழங்கியது.
    2. 27 பேர் தண்டிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

3. ரோமன் ரோலண்ட், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் போன்றவர்களும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தனர்.

86. பகத்சிங் தன்னை இணைத்துக்கொண்ட அமைப்புகள்:

1. நவ்ஜவான் பாரத் சபா.
2. இந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேசன்.

87. இந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேசன் என்ற அமைப்பை தொடங்கியவர்கள் -சச்சின் சன்யால் ,ஜோகேஷ் சட்டர்ஜி.

88. நான் ஏன் நாத்திகனாக இருக்கிறேன்" என்ற நூலை எழுதியவர் - பகத்சிங்.

89. நான் படிக்க ஆரம்பித்தேன் என்னுடைய முந்தைய நம்பிக்கைகளும் தீர்மானங்களும் ஒரு குறிப்பிடத்தக்க அளவில் மாற்றத்திற்கு உள்ளானது- பகத்சிங்.

90. லாகூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் - (சாண்டர்ஸ் கொலை தொடர்பான விசாரணை) - ராஜகுரு , சுகதேவ் ,ஜதீந்திரநாத் தாஸ் , பகத்சிங் மேலும் 21 பேர்.

91. பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆண்டு-1930 அக்டோபர் 7.

92. பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் தூக்கிலிடப்பட்ட ஆண்டு -1931 மார்ச் 23, லாகூர்.

93. புரட்சி என்பது வெறும் குண்டு எறிதலோ கை துப்பாக்கியில் சுடுவதோ அல்ல புரட்சி என்பது மனிதகுலத்தின் பிரிக்க முடியாத உரிமையாகும்- பகத்சிங்.

94. தங்கள் இறுதி மூச்சு அடங்கும் வரை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக "புரட்சி ஓங்குக " என்று முழங்கியவர்கள்-ராஜகுரு, சுகதேவ், பகத்சிங்.

95. 1931 - எந்த காங்கிரஸ் மாநாட்டில் "அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் " பற்றிய ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது - கராச்சி.

96. கிசான் சபா - விவசாயிகள் சங்கம்.

97. அமெரிக்கா - ல் உண்டான பெரும் அளவிலான பொருளாதார வீழ்ச்சி உலகையே உலுக்கியது. (வால் தெரு)

# 12TH- STD - தேசியவாத அரசியலில் வகுப்புவாதம் -

**PAGE NO: 82 12TH STD - TOTAL QUESTION -86**

1. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது - பாரசீகம்.
2. 1875 ஆண்டில் நிறுவப்பட்ட ஆரிய சமாஜத்தின் மூலம் அரசியலில் இந்து மறுமலர்ச்சிக்கான குரல் ஒலிக்கத் தொடங்கியது
3. பண்டைய மதங்களை புத்துயிர்ப்பு செய்து வலுப்படுத்தி உயர்த்துவதே இந்தியர்களின் முதல் பணியாகும் -என்று தனது கருத்துக்களை குறிப்பிட்டவர் -அன்னிபெசன்ட் அம்மையார்.
4. இந்து - முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்திய இயக்கம் -வாஹாபி இயக்கம்.
5. எந்த ஆண்டில் வங்காள அரசாங்கம், நீதிமன்றம் மற்றும் அலுவலகங்களில் உருதுக்குப் பதில் இந்தி மொழியை அறிமுகப்படுத்தியது - 1870.
6. பாரசீக அரேபிய எழுத்து வடிவத்திற்குப் பதில் எந்த எழுத்து வடிவத்தைக் கொண்டு வந்தது - நாகரி.
7. பம்பாய் ஆளுநர் - எல்பின்ஸ்டோன்.
8. பழைய ரோமானிய இலட்சியமான 'Divide et Impera' -பிரித்தாளுதல். என்பது நமதாக வேண்டும்" என்று எழுதியவர் - எல்பின்ஸ்டோன்.
9. எந்த ஆண்டு இந்து – முஸ்லிம் ஜூலை-ஆகஸ்டில் தென்னிந்தியாவில் ஒரு பெருங்கலகம் சேலத்தில் நடைபெற்றது - 1882.
10. வடமேற்கு மாகாணங்களில் ஆசாம்கர் மாவட்டத்தில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் ஒரு சர்ச்சை ஏற்பட்ட ஆண்டு - 1893. ஜூலை
11. பசுவதைத் தொடர்பான கலகங்கள் எந்த ஆண்டுக்குப் பின் அடிக்கடி நடைபெற்றன -1883.
12. 1883 மற்றும் 1891க்கிடையே பஞ்சாபில் மட்டும் இத்தகைய எத்தனை பெரும் கலகங்கள் வெடித்தன - 15.
13. அரசு செயலர் ஹேமில்டன், வைஸ்ராய் எல்ஜினுக்கு எழுதிய கடிதம் :
    1. பின்வரும் இரண்டு வகைகளில் எதை விரும்புவது என்று ஒருவருக்கும் தெரியவில்லை. கருத்து ஒற்றுமையும் செயலும் அரசியல் ரீதியாக பெரிதும் ஆபத்தானவை இது முதல் வகை.
    2. கருத்து வேற்றுமையும், மோதலும் நிர்வாக ரீதியாக தொல்லை தருபவை இது இரண்டாவது வகை.
    3. இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டாவது வகை உரசல் எழும் இடங்களில் இருப்பவர்களுக்கு கவலையையும் , பொறுப்புணர்வையும் ஏற்படுத்தக் கூடியதுஎன்ற போதிலும் இதுவே குறைந்த அளவு ஆபத்து உடையது எனலாம்.
14. அலிகார் இயக்கத்தின் நிறுவர் - சர்சையது அகமது கான்.
15. பம்பாயைச் சார்ந்தவர் - ரஹமதுல்லா சயானி.
16. சென்னையைச் சேர்ந்தவர் - நவாப் சையது முகமது பகதூர்.
17. வங்காளத்தைச் சேர்ந்தவர் - ஏ.ரசூல்.
18. இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்டஆண்டு - 1885.
19. இலண்டன் பிரிவி கவுன்சிலிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் - சையது அமீர் அலி.
20. காங்கிரசின் முதல் கூட்டத்தில் பங்கேற்ற 72 பிரதிநிதிகளில் எத்தனை பேர் மட்டுமே முஸ்லிம்கள் - 2 .

21. பஞ்சாப் இந்துசபையின் முதன்மைத் தகவல் தொடர்பாளர் - லால் சந்த்.
22. ஆரிய சமாஜத்தின் தலைவர்களுள் ஒருவர் - லால் சந்த்.
23. பஞ்சாப் இந்து சப நிறுவப்பட்ட ஆண்டு - 1909.
24. மிண்டோ-மார்லி சட்டம், பேரரசு சட்டமன்றத்தில் அலுவலரல்லாத 27 உறுப்பினர்களுக்கான இடங்களில் எட்டு இடங்களை முஸ்லிம்களுக்கு வழங்கிய ஆண்டு - 1909.
25. இந்தியக் கவுன்சில் சட்டம், அறிமுகப்படுத்தப்பட்டது ஆண்டு - 1909.
26. இந்து-முஸ்லிம் வகுப்புவாதம் நடுத்தர வகுப்புகளுக்கு இடையே நடந்த மோதல்களில் உறவே ஆகும். மனசாட்சியுள்ள இந்து மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் இத்தகைய வகுப்பு வாதத்தில் இருந்து முற்றிலும் விலகியே இருந்தனர் -ஜவஹர்லால் நேரு.
27. வகுப்புவாதம் என்பது பிற்போக்குவாதிகள் நவீன உலகத்திற்கு பொருந்தாத, காலாவதியான ஒரு கருத்தை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பது என்பதற்கு ஏற்ற சான்றாகும்; இது தேசியவாதம் என்ற கருத்தாக்கத்திற்கு முற்றிலும் எதிரானது- ஜவஹர்லால் நேரு.
28. கணபதி விழா மூலம் இந்துக்களை திரட்டுவதற்கு முயற்சி மேற்கொண்டவர் -பால கங்காதர திலகர்.
29. பஞ்சாப் இந்து சபை நிறுவப்பட்ட ஆண்டு -1909.
30. 5-வது பஞ்சாப் இந்து மாநாடு நடைபெற்ற இடம் -அம்பாலா.
31. 6-வது பஞ்சாப் இந்து மாநாடு நடைபெற்ற இடம் -பெரோஸ்பூர்.
32. 1915 இல் இந்துக்களின் முதல் அகில இந்திய மாநாடு எங்கு கூட்டப்பெற்றது - ஹரித்துவார்.
33. அங்குதான் எதன் தலைமையிடமாகக் கொண்டு அகில இந்திய இந்து மகாசபை தொடங்கப் பெற்றது - டேராடூன்.
34. 1909 ஆம் ஆண்டு மிண்டோ - மார்லி சட்டம் :
    1. பேரரசுசட்டமன்றத்தில் அலுவலர் அல்லாத 27 உறுப்பினர்களுக்கான இடங்களில் 8 இடங்களை முஸ்லிம்களுக்கு வழங்கியது.
    2. மாகாண சட்டமன்றங்களில் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு ஒதுக்கி இருந்த இடங்கள் - மதராஸ் - 4, பம்பாய் - 4, வங்காளம்- 5.
35. மாகாண இந்துசபைகள் எங்கு தலைமையிடமாகக் கொண்டு ஐக்கிய மாகாணத்திலும் பம்பாயிலும், பீகாரிலும் தொடங்கப்பெற்றன - அலகாபத்.
36. வேல்ஸ் இளவரசரின் வருகை புறக்கணிக்கப்பு -1921.
37. சிரத்தானந்தா - இந்து மகா சபைக்கு புத்துயிர் அளிக்க முனைந்தார்.
38. துருக்கியின் கலீஃபாவை பாதுகாக்க கிலாபத் இயக்கம் தொடங்கினர்.
39. மலபார் கிளர்ச்சி நடைபெற்ற ஆண்டு -1921
40. ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்ட ஆண்டு - 1922.
41. கலீஃபா பதவி ஒழிக்கப்பட்ட ஆண்டு - 1924.
42. 1923 ஆகஸ்ட் வாரணாசியில் நடைபெற்ற இந்து மகாசபையின் 6 -வது மாநாட்டில் 968 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் -அவர்களில் எத்தனை விழுக்காட்டினர் ஐக்கியமாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர் - 567.
43. எந்த ஆண்டு காங்கிரசிற்கு சோதனைகள் மிகுந்த காலமாகும் - 1920.
44. எந்த ஆண்டு நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் மோதிலால் நேருவின் குழுவினர் வெற்றி பெற்றனர் - 1923.
45. பஞ்சாப் மாகாணம் இந்து, முஸ்லிம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென லாலா லஜபதி ராய் வெளிப்படையாகக் கூறிய ஆண்டு - 1924.
46. வகுப்புவாதத் தீர்வை அறிவித்தவர் - ராம்சே மெக்டொனால்டு.

47. 1925. ஆண்டு உருவாக்கப்பட்ட ராஷ்ட்ரிய சுயசேவா சங்கம் விரிவடைந்து கொண்டிருந்தது. - அதன் உறுப்பினர் எண்ணிக்கை எத்தனையாக உயர்ந்தது - 1,00,000.
48. இந்துக்கள் ஆகிய நாங்கள் நாங்களாகவே ஒரு தேசமாக உள்ளோம் என உறுதிபடக் கூறியவர் - V.D. சவார்க்கர்.
49. காங்கிரஸ் செயற்குழு இந்து மகாசபையில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் காங்கிரசில் உறுப்பினர்களாக இருக்கத் தகுதி இல்லாதவர்கள் என அறிவித்த ஆண்டு - டிசம்பர் 1938.
50. 1937 இல் தேர்தல் நடைபெற்ற பதினோரு மாகாணங்களில் மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றி வாகை சூடியது - 7.
51. இரண்டாம் உலகப்போர் வெடித்தத ஆண்டு - 1939.
52. இந்தியாவின் அரச பிரதிநிதியாக இருந்த யார் இந்தியாவும் போரில் இருப்பதாக உடனடியாக அறிவித்தார் - லின்லித்கோ.
53. காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லிம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது -1939 டிசம்பர் 22.
54. லாகூரில் முஸ்லிம் லீக், முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டுமென்ற கோரிக்கையைத் தீர்மானமாக நிறைவேற்றிய ஆண்டு - 1940 மார்ச் 26.
55. 1930 - அலகாபாத்தில் நடைபெற்ற முஸ்லிம் லீக்கின் ஆண்டு மாநாட்டில் யார் ஒருங்கிணைக்கப்பட்ட வடமேற்கு இந்திய முஸ்லிம் அரசைத் தான் காண விரும்புவதாகக் கூறினார் - இக்பால்.
56. இது பின்னர் கேம்பிரிட்ஜ் மாணவர்களில் ஒருவரான ரகமது அலி வலுவாக வெளிப்படுத்தப்பட்டது -
57. இரு நாடு கொள்கையை முதன்முதலில் கொண்டு வந்தவர் - சர் வாசிர் ஹசன்.
58. லீக்கின் அடிப்படைக் கோரிக்கையானது எது - இரு நாடு கொள்கை.
59. இதனை முதலில் சர் வாசிர் ஹசன் என்பவர்தான் எந்த ஆண்டு நடைபெற்ற பம்பாய் லீக் மாநாட்டில் தனது தலைமை உரையில் குறிப்பிட்டார் - 1937.
60. முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது - 16 ஆகஸ்ட், 1946.
61. வேவல் பிரபுவிற்குப் பின்னர் பதவியேற்றவர் - மெண்ட்பேட்டன்.
62. மலபார் கிளர்ச்சி நடைபெற்ற ஆண்டு -1921.
63. மலபாரில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு முஸ்லிம் தலைவர்கள் பொது மன்னிப்பு கேட்க வேண்டும் என கோரிக்கை விடுத்தவர்-காந்தியடிகள்
64. மாளவியாவின் குடும்பத்தார் வேண்டும் என்று இந்துக்களைதூண்டிவிட்டனர். இச்செயல் முஸ்லிம்களின் மீது எதிர்வினை ஆற்றியது' என தனது அறிக்கையில் குறிப்பிட்ட நீதிபதி - குரோஸ்த்வெயிட்.
65. 1924- பஞ்சாப் மாகாணம் இந்து-முஸ்லிம் மாகாணங்களாக பிரிக்கப்பட வேண்டும் என வெளிப்படையாக கூறியவர் -லாலா லஜபதி ராய்
66. அகண்ட இந்துஸ்தான்" என்னும் முழக்கத்தை முன்வைத்து- இந்து மகாசபை
67. இந்து - முஸ்லிம் ஒற்றுமையின் தூதுவர் என சரோஜினியால் புகழாரம் சூட்ட பெற்றவர் - முகமது அலி ஜின்னா
68. மார்ச் 20 இல் டெல்லியில் முஸ்லிம்களின் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் முஸ்லிம்கள் அறிவித்த 4 கோரிக்கைகள்:
    1. பம்பாயிலிருந்து சிந்து பகுதியை தனியாக பிரிப்பது.
    2. பலுசிஸ்தானையும் அதன் எல்லைகளையும் சீர்திருத்துவது.
    3. பஞ்சாபிலும் வங்காளத்திலும் மக்கள் தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம்.

4. மத்திய சட்டமன்றத்தில் முஸ்லிம்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு.

69. வகுப்புவாத தீர்வை அறிவித்த இங்கிலாந்து பிரதமர்-ராம்சே மெக்டொனால்டு.

70. RSS (ராஷ்டிரிய சுயசேவா சங்கம்)தொடங்கப்பட்ட ஆண்டு -1925.

71. 1937- நடைபெற்ற தேர்தலில் 11 மாகாணங்களில் காங்கிரஸ் கட்சி எத்தனை மாகாணங்களில் வெற்றி பெற்றது -7. முஸ்லிம் லீக் - 4.8% வாக்கு சதவீதம்

72. முஸ்லிம் லீக் மீட்பு நாடாக கொண்டாடிய நாள்- காங்கிரஸ் கட்சி ராஜனமா செய்த நாள்- 1939 டிசம்பர் 22.

73. லாகூர் மாநாட்டில் முஸ்லிம்களுக்கு தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கை தீர்மானமாக நிறைவேற்றிய நாள் - 1940 மார்ச் 26.

74. முஸ்லிம் லீக்கின் அடிப்படை கோரிக்கையானது " இரு நாடு கொள்கை ஆகும்". இதனை முதலில் 1937 நடைபெற்ற பம்பாய் லீக் மாநாட்டில் தனது உரையில் குறிப்பிட்டவர் -சர் வாசிர் ஹசன்

75. 1956 இல் யாருடைய தலைமையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவைத் தூதுக்குழு அமைக்கப்பட்டது -பெதிக் லாரன்ஸ்.

76. முஸ்லிம் லீக்" நேரடி நடவடிக்கை நாளாக " அறிவித்தது-1946 ஆகஸ்ட் 16.

77. இரு நாடு கொள்கையை முதன் முதலில் கொண்டு வந்தவர்-சர் வாசிர் ஹசன்.

78. இந்துமத மறுமலர்ச்சி -ஆரிய சமாஜம்.

79. கலீஃபா பதவி ஒழிப்பு -1924.

80. லாலா லஜபதி ராய் - இந்து-முஸ்லிம் மாகாணங்களாக பஞ்சாப் பிரித்தல்.

81. ராஷ்டிரிய சுயம்சேவா சங்கம்- M.S. கோல்வாக்கர்.

82. கௌளராச்ஷினி சபைகள் - பசு பாதுகாப்பு சங்கங்கள்.

83. சுத்தி' மற்றும்' சங்கதன்' நடவடிக்கை- ஆரிய சமாஜம்.

84. அலிகார் இயக்கத்தின் நிறுவனர் - சர் சையது அகமது கான்.

85. சுதேசி இயக்கம்- 1905.

# 12TH- STD - காலனியத்துக்கு பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு-

| PAGE NO: 109 | 12TH STD | TOTAL QUESTION: 70 |
|---|---|---|

1. வேவல் பிரபுவுக்கு பதிலாக அரச பிரதிநிதியாக பதவிக்கு வந்தவர்-மௌண்ட்பேட்டன் பிரபு.
